# இலங்கை முஸ்லீம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்

எம். ஐ. எம். அமீன்

அல்ஹஸனாத் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by N
noolaham.org

# இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்

முஹம்மது இப்றாஹிம் ஆலிம் சாஹிப்
முஹம்மது அமீன்
(முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்.
அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்)

வெளியீடு
அல்ஹஸனாத் வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Title | : Ilankai Muslimkalin Marumalarchikku Viththitta Munnodikal |
| Language | : Tamil |
| Author | : M.I.M Ameen<br>F 64/1 HIJRAGAMA<br>HEMMATAGAMA |
| I S B N | : 978 - 955 - 99588 - 3 - 3 |
| Copyright | : Author |
| First Edition | : 2010 -March - 31 |
| Publisher | : AL Hasanath<br>F 67, Hijragama,<br>Hemmathagama |
| Printers | : M.J.M Printers<br>No. 119, Main Street,<br>Mawanella. |
| Price | : 200/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

முன்னுரை IV

1- முஹம்மது காசிம் சித்திலெப்பை 1-34

வாழ்க்கை வரலாறு, சமய சூழலில் நவீன கல்வி, பாடசாலைக் கல்வித் திட்டம், பாட நூல் வெளியீடு, சமய நூல் வெளியீடு, முஸ்லிம்களின் போதனா மொழி, நாவல் இலக்கியம், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, மெய்ஞ்ஞான நூல், பத்திரிகை வெளியீடு, அரசியல் பங்களிப்பு, இலங்கை முஸ்லிம்களின் விவாகப் பதிவு, சமய சமூக சீர்திருத்தப் பணிகள்.

2- ஐ.எல்.எம்.ஏ அஸீஸ் 35-64

வாழ்க்கை வரலாறு, ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா, ஸஹிராக் கல்லூரி இலங்கை முஸ்லிம்களின் கல்வி மகாநாடு, ஆங்கிலம் கற்பதன் அவசியம், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, அஸ்றாறுல் ஆலம் பற்றிய குற்றச்சாட்டுக்கான மறுப்புரை, பத்திரிகை வெளியீடு.

3- மாப்பிள்ளை லெப்பை ஆலிம் 65-84

வாழ்க்கை வரலாறு, அறிவியற் பணிகள், சட்டத்துறை, மெய்ஞ்ஞானத்துறை, வரலாற்றுத்துறை, ஞான உபதேசம். கலாசாரத்துறைப் பணிகள்.

4- கலாநிதி துவான் புர்ஹானுத்தீன் ஜாயா 85-123

வாழ்க்கை வரலாறு, கல்வித்துறைப் பங்களிப்பு, ஸாஹிராவின் அதிபர், ஸாஹிராவின் கல்வித் தரத்தை வளர்த்தல், பௌதிக வளங்களைப் பெருக்குதல், ஸாஹிராவின் கிளைகள், ஜாயாவின் கல்விப் பணிகள் பற்றிய ஒரு மதிப்பீடு, முஸ்லிம் லீகின் தலைவர், இலங்கை அரசியலில் டி.பி. ஜாயா, முஸ்லிம் உலக அரங்கில் டி.பி. ஜாயா, இலங்கைத் தூதுவராக பாகிஸ்தானில் பணி, மக்காவில் இலங்கை இல்லம்.

5- உசாத்துணை நூற் பட்டியல் 124-126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கை முஸ்லிம்களின் வரலாறும், கலாசாரமும் 1870 - 1915 எனும் தலைப்பில் எனது முதுமாணிப் பரீட்சைக்கான ஆய்வுக் கட்டுரையை எழுதுவதற்காகத் தகவல்களைத் திரட்டிய போது இலங்கை முஸ்லிம் பெரியார்கள் சமூக முன்னேற்றம் கருதி மேற் கொண்ட முயற்சிகளைப் பற்றிய அறிமுகம் கிடைத்தது. அதன் விளைவாக அவர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்வு என்னில் ஏற்பட்டது. அதன் விளைவாகவே அறிஞர் எம்.சி சித்திலெப்பை பற்றித் தனியானதொரு நூலை 1997 ஆம் ஆண்டில் வெளியிட்டேன்.

அவரது பணிகளில் அவருக்குப் பக்க துணையாக செயற்பட்ட ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் பற்றி பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடான 'பல்கலை'யின் தொகுதி -1- இதழ் 1+2 2000 ஆம் ஆண்டு வெளியீட்டில் ஒரு கட்டுரையை எழுதினேன். அத்தொடரில் நான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் பற்றியும் கலாநிதி டி.பி. ஜாயா அவர்கள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டேன். இந்நால்வர் பற்றியும் தேடித் தொகுத்த விடயங்களை உள்ளடக்கி 'இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்' என்ற தலைப்பில் இந்நூலைக் கொண்டு வந்துள்ளேன். 2011 ஆம் ஆண்டில் இருந்து அமுலுக்கு வரும் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் இஸ்லாமிய நாகரீக பாடத்தின் ஓரங்கமாக இந்நால்வரது வரலாறும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கின்றமையே இந்நால்வரைப் பற்றி மட்டும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவருவதற்கு காரணமாகியது.

முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்ட கல்வி, சமூக மாற்றங்களுக்கு கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அடித்தளமிடப்பட்டது. எம்.சி சித்தி லெப்பையின் 'சமய சூழலில் நவீன கல்வி' என்ற சிந்தனையே இம்மாற்றங்களுக்கு வித்தாகியது. அதனை நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஐ.எல்.எம்.ஏ அஸீஸ் பெருந் துணையாக இருந்தார். இச்சிந்தனை மங்கி மறைந்து விடாது உயிர் பெற்று வளர்வதற்கு கலாநிதி டி.பி.ஜாயா அவர்கள் ஸஹிராவின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றுத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். முன்னைய இருவர் போலல்லாது டி.பி. ஜாயா அவர்கள் அரசியலிலும் ஈடுபட்டார். அவ்வாய்ப்பை அவர் நன்கு பயன்படுத்தி இச்சிந்தனைக்கு உரமளித்தார். அவர்களால் வளர்த்து விடப்பட்ட இச்சிந்தனையை சிவில் சேவையை உதரித்தள்ளி ஸாஹிராவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பதவியை ஏற்ற ஏ.எம்.ஏ அஸீஸ் அவர்களும், முஸ்லிம் சமூக மேம்பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த சேர் ராசிக் பரீத், கலாநிதி பதியுதீன் மஹ்மூத், சட்டத்தரணி எம்.எச்எம் அஷ்ரப் போன்றவர்களும் உயிரூட்டி வளர்த்ததால் தான் இன்று முஸ்லிம் சமூகம் ஓரளவேனும் கல்வித் துறையில் முன்னேறியுள்ளது.

முஸ்லிம்களுக்கு என்று ஆரம்பப்பாடசாலைகளை அமைப்பதன் ஊடாக 1884 இல் கல்வித் துறையில் புகுந்த முஸ்லிம் சமூகம் இன்று பல்கலைக்கழகம் வரையான கல்வித் தாபனங்களைப் பெற்று வளர்ந்துள்ளதை நோக்கலாம்.

முஸ்லிம் சமூகத்தின் சொத்தாக அன்றி அரச சொத்தாக இருந்த போதும் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அரசு இக்கல்வி நிலையங்களை நடாத்திச் செல்கின்றமை சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

எம்.சி சித்தி லெப்பை முன்னெடுத்த அரசியல் உரிமைப் போராட்டம் பின் வந்த மேற்குறித்த பிரமுகர்களால் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டதால் தான் அரசியல் நீரோட்டத்தில் இன்று முஸ்லிம்கள் பங்கு கொள்ள முடிந்துள்ளது. சுதந்திர இலங்கையில் ஆட்சி செய்யும் பிரதான அரசியல் கட்சிகளின் ஊடாக அமைச்சர் பதவிகளையும், சபாநாயகர் பதவிகளையும் வகித்து முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி நாட்டு மக்களுக்காக பணிபுரியும் இவ்வாய்ப்பும் இம் முன்னோடிகளின் தூர நோக்கின் விளைவாக கிடைத்தமையே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் எட்டாம் தசாப்தத்தில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஆழமான சமய அறிவை அறபு மொழி மூலம் வழங்க ஆரம்பித்த மத்ரஸதுல் பாரி தொடர்ந்து இன்று வரை இயங்கி வருகிறது. சமூகத்தில் இம்மத்ரஸா எற்படுத்திய சிந்தனைத் தாக்கம் காரணமாக இன்று இருநூற்றுக்கும் மேற்பட்ட அறபு மத்ரஸாக்கள் நாட்டில் தோற்றம் பெற்றுள்ளன. இம்மத்ரஸாக்கள் காலத்துக்கு ஏற்ற விதமாக உலகக் கல்வியையும், சமயக் கல்விகளையும் வழங்கும் நளீமியா போன்ற ஸ்தாபனமாக வளர்ந்துள்ளமையும் சுட்டிக் காட்டத் தக்கது. இவ்வாறு ஆன்மிகம், உலகியல் எனும் துறைகளிலும் முன்னேற்றம் கருதி உழைத்த ஆரம்ப கால முன்னோடிகள் நால்வரது வரலாறே கையடக்கமாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் பொதுவான வாசகர்களுக்கும் பயன் தரும் வகையில் இந்நூலில் முன் வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாக்கத்துக்கு தூண்டுகோலாகவும், துணையாகவும் இருந்து உதவிய நண்பர்களுக்கும், எம்.ஜே.எம் அச்சகத்தாருக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஐ.எம் அமீன்
F 64/1
ஹிஜ்ராகம,
ஹெம்மாதகம.
2010.03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மது காசிம் சித்தி லெப்பை

(கி.பி.1838 - 1898)

அரேபியாவிலிருந்து வர்த்தகத்துக்காக இலங்கை வந்து அளுத்கமையில் குடியேறிய முல்க் றஹ்மதுல்லா என்பவரின் பரம்பரையில் வந்த முஹம்மது காசிம் சித்தி லெப்பை கி.பி.1838 மே மாதம் பதினொறாம் திகதி கண்டி மாநகரில் பிறந்தார். முல்க் றஹ்மதுல்லாவின் மகன் முஹம்மது லெவ்வை ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் காலத்தில் கண்டியில் குடியேறினார். இவரின் மகனின் பெயர் சித்தி லெப்பை ஆகும். சித்தி லெப்பைக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர். இவ்வைந்து பேரும் கல்வியறிவு உடையவர்கள். அறபு மொழியைப் பயின்றவர்கள். இவர்களில் முஹம்மது காசிம் என்று பெயர் சூட்டப்பட்டவரே எம்.சி. சித்தி லெப்பை என்று அழைக்கப்படுகிறார். முஹம்மது காசிமின் தந்தை சித்தி லெப்பையும் ஒரு அறிவாளி. பிரித்தானிய அரசு கி.பி.1833 இல் இவரைப் புரக்டராக நியமித்தது. இலங்கையில் முதன் முதலாக புரக்டராக நியமிக்கப்பட்டவர் இவரே என்று அறிய முடிகிறது. எம்.சி. சித்தி லெப்பையின் மூத்த சகோதரர் முஹம்மது லெப்பை ஓர் ஆலிம் ஆவார். இவர் முஸ்லிம்களுக்குத் தலைவராக நியமிக்கப் பட்டிருந்ததுடன் முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் ஒரு புலவர். முன்னூறுக்குமதிகமான பதங்களைப் பாடியுள்ளார் என்பர். இவரின் சகோதரி முத்து நாச்சியாவும் ஓர் ஆலிமா ஆவார். எம்.சி. சித்தி லெப்பை கண்டியில் ஆரம்பித்த முஸ்லிம் பெண் பாடசாலையின் தலைமை ஆசிரியராக இவர் பணி புரிந்தார். எம்.சி. சித்தி லெப்பை தனது மூத்த சகோதரர் முஹம்மது லெப்பை ஆலிமிடமே அறபு மொழியை முதலில் கற்றுக் கொண்டார். பின்னர் கண்டியிலிருந்த 'ஜெனரல் ஸ்கூலில்' சேர்ந்து ஆங்கில மொழியைக் கற்றார். கஷாவத்தை ஆலிம் என்று அழைக்கப்பட்ட அக்குறனையைச் சேர்ந்த சேகு முஹம்மது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிமிடம் (கசாவத்தை ஆலிம் அப்பா) அறபு மொழியைக் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

காயல்பட்டணத்தைச் சேர்ந்தவரும், கண்டியில் வாழ்ந்தவருமான அப்துல் காதிறு மீயாப் பிள்ளை என்பவரின் மகளான ஸெய்யிதா உம்மாவை கி.பி. 1871இல் விவாகம் புரிந்தார். இப்பெண் தமிழ், ஆங்கில மொழி அறிவுடையவராய் இருந்ததோடு தையல், பின்னற் கலைகளிலும் தேர்ந்தவராய் இருந்தார். மேலும் பியானா, சிதார முதலாம் இசைக் கருவிகளையும் இசைக்கப் பயின்றிருந்தார். எம்.சி. சித்தி லெப்பைக்குக் குழந்தைகள் இல்லை. அப்துல் ஹமீது என்றொரு குழந்தையை வளர்த்தார்.

கி.பி. 1862இல் மாவட்ட நீதி மன்றத்தினதும், கி.பி. 1864 இல் சுப்ரிம் நீதிமன்றத்தினதும் புரக்டராக எம்.சி சித்திலெப்பை நியமிக்கப்பட்டார். 1874-1878 காலப் பகுதியில் இடைக்கிடை முனிசிபல் நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றினார். கண்டி முனிசிபல் கவுன்சிலின் அங்கத்தவராக எட்டு வருடங்கள் கடமையாற்றினார். கி.பி. 1884-87 காலப் பகுதியில் கொழும்பில் குடியேறி வாழ்ந்தாலும் பின்னர் மீண்டும் கண்டியிலேயே குடியேறினார்.

ஆழ்ந்த சமய அறிவுடைய மூத்த சகோதரர் முஹம்மது லெப்பையின் வழி நடத்தல், காயல்பட்டணத்தில் கல்வி பயின்று வந்த கசாவத்தை ஆலிம் அப்பாவுடனான தொடர்பு, யெமனிலிருந்து இங்கு வந்து குடியேறி சமயப் பணிகளில் ஈடுபட்ட உமர் பின் அப்துல்லா அல் பாதிப் அல் யமானி என்பவர்களுடனான நட்பு என்பன எம்.சி. சித்தி லெப்பையின் ஆன்மீக சிந்தனையை வலுவூட்டின.

இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட எகிப்திய சுதந்திரப் போராட்ட வீரரான அறபி பாச்சா, உலக முஸ்லிம் ஐக்கியத்துக்குக் குரல் கொடுத்த ஜமாலுத்தீன் ஆப்கானி, முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி, சமூக மேம்பாடு என்பவற்றுக்கு உழைத்த சேர் செய்யித் அஹமத் கான் என்பவர்களின் சிந்தனைத் தாக்கம் அவரிடத்தே முற்போக்கான சீர்திருத்தச் சிந்தனையைத் தோற்றுவித்தது. இதன் மூலம் ஆன்மீகம், உலகியல் எனும் இரு துறைகளிலும் இலங்கை முஸ்லிம்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் நன்குணர்ந்தார். இதன் பிரதிபலிப்பையே அவரது சீர்திருத்தப் பணிகளிலும், ஆக்கங்களிலும் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஆக்கப் பணிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அவருக்கு ஆதரவாளர்களைப் பெற்றுக் கொடுத்தன. குறிப்பாகப் படித்த வர்க்கத்தினர் அவரை ஆதரித்ததோடு அவரது பணிகளுக்கும் துணையாய் இருந்தனர். எனினும் மரபு ரீதியாகச் சிந்தித்த சிலரும், சமுக செல்வாக்குப் பெற்றிருந்த பிரமுகர்கள் சிலரும் அவரை எதிர்த்தனர். இவ் வெதிர்ப்பைக் கண்டு ஓய்ந்து விடாது தனது பணிகளை அவர் தொடர்ந்து மேற் கொண்டார். தனது அறுபதாவது வயதில் நோய்வாய்ப்பட்டு 1898 பெப்ரவரி 05 ம் திகதி (ரமழான் பிறை பதினான்கில்) இறையடி எய்தினார். அவரது பூதவுடல் கண்டி மஹிய்யாவையிலுள்ள காட்டுப் பள்ளி வளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மூவாயிரத்துக்கும் அதிகமானோர் நல்லடக்கத்தின் போது சமுகமளித்திருந்தனர். அறபி பாச்சாவும், யாகூபு பாச்சாவும் தத்தம் மனைவிமாருடன் வந்திருந்தனர். கண்டி நீதிமன்றத்தில் அவரது மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் பல பகுதிகளிலும், இந்தியாவின் கீழக்கரையிலும் ஜனாஸா தொழுதனர். அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர், அவர் பற்றி இயற்றிய இரங்கற்பாவை முஸ்லிம் நேசன் பிரசுரித்தது.

## சமய சூழலில் நவீன கல்வி

எம்.சி. சித்தி லெப்பை வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி கலாசார நிலை இருள் மயமானதாக இருந்தது. கி.பி. 1505இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர், கி.பி. 1656இல் வந்த ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் பெரும் துன்பங்களையும் துயரங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முஸ்லிம்களின் வர்த்தகம் பாதிக்கப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் குடியிருப்புக்களிலிருந்து துரத்தப்பட்டனர். இதனால் அவர்களின் கல்வியும், கலாச்சார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. வெளிநாடுகளுடன் அவர்களுக்கிருந்த வர்த்தக, கலாசார உறவுகளும் பாதிக்கப்பட்டன. கி.பி. 1796இல் இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இத்தகைய கெடுபிடிகள் ஓரளவு குறைந்திருந்தன. எனினும் அவர்களும் ஐரோப்பியக் கிறித்தவர்கள் என்பதால் அவர்களது நடவடிக்கைகளையும் சந்தேகக் கண் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்கள் பார்த்தனர். அதனால் அவர்கள் ஆரம்பித்து நடாத்திய கல்லூரிகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்ப விரும்பவில்லை. ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் 'இலங்கையில் இஸ்லாம்' எனும் தனது நூலில் குறித்துள்ள பின்வரும் குறிப்பு அக்கால முஸ்லிம்களின் மனோ நிலையை நன்கு புலப்படுத்துகிறது.

"மூன்று நூற்றாண்டுகளாக அனுபவித்த கஷ்டங்கள் முஸ்லிம்களைத் தமது பூர்வாசார நிலையில் வைராக்கியம் உடையவர்களாகவும், சம்பிரதாயத்தையே பேணுபவர்களாகவும், நவீன முறைக் கல்வி, நிர்வாகம் உட்படப் பொதுவாக எல்லா மாற்றங்களிலும் முழுச் சந்தேகமுடையவர்களாகவும் ஆக்கி விட்டன. முற்போந்த நூற்றாண்டுகளில் மேலைக் கல்வியானது மதப்பற்றைத் தாக்குவதாயும், கிறித்தவ மதப்பரப்பு முயற்சியை ஊக்குவிப்பதாயும் அமைந்திருந்ததால் முஸ்லிம்கள் தமது பிள்ளைகளை அரசினர் ஆங்கிலப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புவதற்கு விரும்பவில்லை."

இந்நாட்டில் ஆங்கிலம் போதிக்கும் பாடசாலைகள் பல பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன, எனினும் முஸ்லிம் மாணவர்கள் அங்கு செல்லவில்லை. சித்தி லெப்பை போன்றவர்கள் ஆங்கிலக் கல்விப் போதனையை 1882 இல் இருந்தே வலியுறுத்தி வந்த பின்பும் கூட அவர்கள் ஆங்கிலம் கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. 1892 இல் கொழும்பு ஸஹிரா கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முந்திய ஆண்டில் (1891) அரசாங்கப் பாடசாலைகளில் 39 முஸ்லிம் மாணவர்களும், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் 358 முஸ்லிம் மாணவர்களும் மட்டுமே ஆங்கிலம் பயின்றனர். 1895 இல் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் 1096 இலங்கையில் இருந்தன, எனினும் அவற்றுள் 04 மட்டுமே முஸ்லிம் பாடசாலைகளாகும். முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதையே இத்தகவல்கள் காட்டுகின்றன.

முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் கல்வித் துறையில் மட்டுமன்றி வாழ்வின் ஏனைய துறைகளிலும் பின்தங்களாயினர். இலங்கையில் வாழ்ந்த பௌத்த, இந்து சமயச் சிறார்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்று அரச உத்தியோகங்களிலும், வைத்தியம், பொறியியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலஅளவையியல், வக்கீல் முதலான சுய தொழில்களிலும், புதிதாக வளர்ந்த 'கொந்தராத்து' போன்ற பலவகைத் தொழில்களிலும், ஈடுபட்டனர். கோள்புருக் சீர்திருத்த ஆணைக் குழுவினர் செய்த சிபாரிசுக்கேற்ப அறிமுகம் செய்யப்பட்ட சட்ட நிருபண சபையிலும் அங்கத்துவம் பெற்றனர். இவ்வாறான அனைத்து வாய்ப்புக்களையும் நவீன கல்வியைப் பெறாததால் முஸ்லிம் சமூகம் இழந்தது. முஸ்லிம்களின் இந்த இருள்மய நிலையை அறிஞர் எம்.சி. சித்தி லெப்பை அவர்கள் நன்குணர்ந்தார். முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு நவீன கல்வி தவிர்க்க முடியாத ஒரு தேவை என்பதை உணர்ந்து முஸ்லிம் சமூகத்துக்கான கல்வி வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க முயற்சித்தார்.

முஸ்லிம்கள் ஆங்கில மொழி மூலக் கல்வியைப் பெறாமைக்கான காரணம் மதமாற்ற அச்சமே அல்லாது ஆங்கில மொழி மீது கொண்ட வெறுப்பு அல்ல என்று எம்.சி. சித்தி லெப்பை கருதினார். அதனால் மத மாற்ற அச்சமற்ற சமய சூழலில் நவீன கல்வியை வழங்கினால் முஸ்லிம்கள் அதனைக் கற்பர் என்று சிந்தித்தார். அதற்குகந்த களம் ஒன்றை அமைக்க முயற்சித்தார். அம்முயற்சியின் ஓர் அங்கமாகவே நவீன கல்வி பற்றி முஸ்லிம்களிடம் நிலவிய மனப்பாங்கை மாற்றியமைக்கத் தான் வெளியிட்ட முஸ்லிம் நேசன் மூலம் தொடர்ந்து முயற்சித்தார். முஸ்லிம் நேசனின் ஆசிரியர் தலையங்கத்தில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், கல்வியின் சிறப்பு, நம் முன்னோர் கல்வியில் அடைந்திருந்த மேம்பாடு, அதனால் கிடைத்த புகழ், முஸ்லிம் பாடசாலைகள், நூல் நிலையங்கள், அறபு நாட்டு முஸ்லிம்கள் அந்நிய மொழியைக் கற்பதில் காட்டும் ஆர்வம், இந்தியாவில் அலிகார் கல்லூரியைத் தோற்றுவிக்க சேர் செய்யித் அஹமது கான் எடுக்கும் முயற்சி போன்றன பற்றி எழுதி இலங்கை முஸ்லிம்களிடையே கல்வி ஆர்வத்தைக் கூட்டக் கடுமையாக முயற்சித்தார். இ.்தன்றி உள்நாட்டு, வெளிநாட்டு முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்த போது அவர் பேசிய பேச்சுக்களும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாடு பற்றிய சிந்தனை அவரில் ஊறிப் போய் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. கொழும்பில் அவர் குடியேறிய போது அந்நகர மக்கள் அவருக்களித்த வரவேற்புக்குப் பதிலளித்துப் பின்வருமாறு உரை யாற்றினார்.

"இந்த ஸமானிலே இஸ்லாத்துடைய தேசங்கள் எல்லாவற்றிலும் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமுண்டாகியிருக்கிறது. உங்கள் மனதிலும் அப்படி உண்டாகியிருக்கிறது. என் நாட்டமும், தேட்டமும் அப்படியேயிருந்ததால் அல்லாஹுத் தஆலா என்னை இங்கே வரவும் நீங்கள் என் பேரிலே பட்சம் வைக்கவும் செய்திருக்கிறான். என் சிநேகிதர்களே கல்வி விடயத்தில் நாங்கள் எல்லாம் அசட்டையாக இருந்து விட்டோம். எங்களைக் கல்வியில்லா மூடர்கள் என்று சொல்வதற்கு இடம் வைத்து விட்டோம். இனிமேல் நாங்கள் எல்லாம் ஒரே மனதாகத் தெண்டிப்போமாக."

(முஸ்லிம் நேசன் 1884)

எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு வந்திருந்த அறபி பாச்சாவுடன் உரையாடும் போதும் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தாங்களைக் கண்டு சந்திக்க அநேக பிரபுக்கள் வருவார்கள். அவர்களிடத்தில் தாங்கள் கல்வி மேன்மையுடையது என்பதையும், அக்கல்வியை யாவரும் விரும்ப வேண்டும் என்பதையும் எடுத்துச் சொன்னால் எவரும் அதை ஏற்றுக் கொள்வர்"

(முஸ்லிம் நேசன் 1883. தொகுதி - l இல: - 33)

குர்ஆன் மத்ரஸாக்களில் பொருள் விளங்காது குர்ஆனை வாசிக்க மட்டும் பயிற்றுவிக்கும் மரபு ரீதியான கல்விக்கே இலங்கை முஸ்லிம்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். ஆதலால் தம் பிள்ளைகளை முதற்கண் குர்ஆன் மத்ரஸாக்களுக்கு அனுப்பினர். இளமைப் பருவத்தில் பல ஆண்டுகளை மாணவர்கள் அங்கு கழித்து கிளிப் பிள்ளைகள் போலத் தமக்குக் கற்றுத் தந்தவற்றை ஒப்புவிக்கப் பயிற்சி பெற்றனர். இக்கல்வி தமக்குப் போதுமானது என்றும் திருப்தி அடைந்தனர். இதனைப் புறக்கணிப்பதோ, மேனாட்டுக் கல்வியைப் பெறுவதோ பாபச் செயல் என்றே அன்றைய முஸ்லிம் சமூகம் கருதியது. இதனால்தான் எம்.சி. சித்தி லெப்பை சமய சூழலில் மேனாட்டுக் கல்வியை ஊட்டுவது மட்டுமே முஸ்லிம் சமூகத்தை நவீன கல்வியின் பால் ஈர்க்க உள்ள ஒரே வழி என்று கருதி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். முஸ்லிம் அதிபர்களைத் தலைவர்களாகவும், குர்ஆன், அறபுப் பாடங்களைக் கற்பிக்கக் கூடிய அறபு ஆசிரியர்களை உதவி ஆசிரியர்களாகவும் கொண்ட பாடசாலைகளைத் தோற்றுவித்தார். முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த கொழும்பு, கண்டி, பண்ணாகம், கம்பளை, பொல்கஹவெல, குருனாகல, பதுளை, காலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தறை போன்ற நகரங்களில் அவர் பாடசாலைகளை ஆரம்பித்தார். இதற்காக அவர் அவ்வப்பகுதியில் வாழ்ந்த முஸ்லிம் பிரமுகர்களின் உதவியையும், கல்வி இலாகா உத்தியோகத்தர்களின் உதவிகளையும் பெற்றுக் கொண்டார்.

இப்பணி தொடர்கின்ற அதே காலப் பகுதியில் முஸ்லிம் பெண் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும் முயற்சித்தார். கண்டி மாநகரில் திருகோனமலை வீதி, கடைத்தெரு வீதி, கட்டுகலை எனும் மூன்று இடங்களில் பெண்களுக்காக மூன்று பாடசாலைகளை ஆரம்பித்தார். இம்மூன்று பாடசாலைகளிலும் 146 முஸ்லிம் பெண் பிள்ளைகள் கல்வி கற்றார்கள் என்ற தகவலை 1892.01.06ம் திகதி முஸ்லிம் நேசனில் காண முடிகிறது. இப்பாடசாலைகளில் குர்ஆன், அறுப் பாடங்களுக்கு மேலதிகமாக தமிழ், ஆங்கிலம், கணிதம், தையல் முதலாம் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. குருநாகல் நகரிலும் முஸ்லிம் பெண்களுக்கான ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையை கி. பி. 1892 சித்திரை மாதம் கவர்னர் ஹவ்லொக் தரிசித்தார். அங்கு அவர் ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "முஸ்லிம் பெண்களின் கல்வி விருத்தியேற்படுத்துவதில் மிகவும் இடைஞ்சல் உண்டு. இத்தடைகளை மீறி கண்டியிலும் குருநாகலிலும் எடுக்கப்படும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை."
> (முஸ்லிம் நேசன் 1892.04.06)

தலைநகருக்கு வெளியே பாடசாலைகளை அமைப்பதில் அவ்வப்பகுதி மக்கள் காட்டிய ஆர்வம் தலைநகராகிய கொழும்பில் இருக்கவில்லை. கி. பி. 1891 இல் கொழும்பு மருதானை பள்ளிவாசலில் அவர் நிகழ்த்திய உரை கொழும்புவாசிகள் பலரது உள்ளத்தில் ஆர்வத்தைத் தோற்றுவித்தது. இவ்வுரையே மருதானை ஸஹிறாக் கல்லூரியின் தோற்றத்துக்கு அத்திவாரமாகியது. 1892.08.22 இல் திறப்புவிழாக் கொண்டாடிய இம்மதுரஸா தான் இன்று ஸஹிராக் கல்லூரியாகத் திகழ்கிறது. இக்கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சிக்கு கொழும்பு கல்வி விருத்திச் சங்கத்தின் காரியதரிசியாகக் கடமையாற்றிய ஐ. எல். எம். ஏ. அஸீஸ், வாப்பிச்சி மரைக்கார், அறபி பாச்சா போன்ற சித்திலெப்பையின் நண்பர்கள் செய்த உதவிகள் பெரும் துணையாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஈர்க்கும் நோக்கத்திற்காக மட்டுமல்லாது, இஸ்லாமிய சமய சூழலில் முஸ்லிம் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கும் அவர் உள்ளார்ந்த ஆர்வம் காட்டினார். அதனால் தான் குர்ஆன் அறபுப் பாடங்களை கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்ததுடன் பாடசாலைகளைப் பரிப்பாலிக்கும் பொறுப்பையும் முஸ்லிம்களிடம் ஒப்படைத்தார். அதிபராகக் கடமை புரிதற்குப் போதிய தகைமைகளையும், நிர்வாக அனுபவங்களையும், சமயம் அல்லாத துறைகளில் போதிய அறிவையும் பெற்றிருந்தவர்களைத் தேடிக் கொள்வது சிரமமாக இருந்தது. ஆயினும் சமய சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் இத்தகு தகைமைகளை கொண்டிராதபோதும் முஸ்லிம் ஒருவரையே அதிபராக நியமித்தார். இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட முன்னோடிக் கல்லூரியான அலிகார் வித்தியாலயத்தின் அதிபர் ஒரு முஸ்லிம் அல்லர் என்பதை சுட்டிக்காட்டி அலிகார் கல்லூரியில் சமய சூழலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று எடுத்துக்காட்டியுள்ளார். கல்வியை மட்டும் ஊட்டுவதே ஆசிரியர் பணி எனின் அதிபரோ உதவி ஆசிரியரோ முஸ்லிமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவது அவசியமற்றது. முஸ்லிம் பாடசாலை இஸ்லாமிய சிந்தனையை உயிர்ப்பிக்கக்கூடிய இஸ்லாமிய சூழலில் இருக்க வேண்டும் என்று அவர் உளமாரக் கருதினார். அதனால் கொழும்பில் கி. பி. 1884 இல் ஆரம்பித்த தனது முதல் பாடசாலையான மத்ரஸதுல் கைரியாவில் சமய சூழலில் மேனாட்டுக் கல்வியை வழங்கும் தமது திட்டத்தைப் பரீட்சார்த்தமாக நடைமுறைப் படுத்தினார். அதன் பின், தான் ஆரம்பித்த அனைத்துப் பாடசாலைகளிலும் அவர் அதனைத் தொடர்ந்தார்.

## பாடசாலைக் கல்வித் திட்டம்

சமய சூழலில் மாணவர்க்கு வழங்கப்படும், கல்வி உலகியற் கல்வியையும் சமயக் கல்வியையும் சமகாலத்தில் வழங்குவதாக இருத்தல் வேண்டும். இவ்விரு துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்று கருதினார். இந்திய முஸ்லிம்களின் கல்வி முயற்சிகள் அமைய வேண்டிய முறைமை பற்றி எழுதும் போது 1884.03.31 ஆந் திகதி வெளிவந்த முஸ்லிம் நேசனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரிய கல்விச்சாலை ஒன்றை ஐதராபாத்தில் ஸ்தாபித்து... அந்தக் (கல்விச்) சாலையிலே படிப்பவர்களுக்கு வேதத்துக்குரிய கல்விகளிலும் உலகத்துக்குரிய கல்விகளிலும் தேறினவர்களுக்கு கல்வித்தேர்ச்சிப் பட்டமும் கொடுப்படும்" என்று குறித்துள்ளார்.

மனித சமூக முன்னேற்றத்துக்கு மனிதரிடையே ஆன்மீக வளர்ச்சியும் உலகியல் மேம்பாடும் சமகாலத்தில் ஏற்படுவது மிக அவசியமாகும். ஆதலால் தான் இவ்விரு துறைகளிலும் மாணவர்க்குக் கல்வியூட்டப்படுவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். மிசனரிப் பாடசாலைகளின் அமைப்பில் முஸ்லிம் பாடசாலைகள் இருந்த போதும் முஸ்லிம் பாடசாலைகளில் பின்பற்றப்பட்ட கல்வித்திட்டம் ஏனைய சமூகங்களின் கல்வித்திட்டத்துடன் ஒத்துச்செல்லவில்லை என்று விஜய சமரவீர என்பவர் முஸ்லிம் சீர்திருத்த இயக்கம் 1880-1915 என்ற தனது கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். ஆன்மீகம் உலகியல் என்ற இரு துறைகளுக்கும் முஸ்லிம் பாடசாலைகளில் இடம் அளிக்கப்பட்டமையையே விஜய சமரவீர இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்க முடியும். செயல் மூலமான கல்வியே அதிக பயன் தரக்கூடியது என்றும் குறிப்பாக சமய பாடத்தைப் போதிக்கும் போது வணக்கம் பற்றிய விதிகளை மட்டும் போதிக்காது மாணவர்களை வணக்கங்களில் ஈடுபடுத்திப் பயிற்சி அளிப்பது அவசியம் என்று எம். சி. சித்திலெப்பை வலியுறுத்தினார். மாணவர்களின் கல்வி ஆர்வத்தைத் தூண்டுவதற்காக வரலாற்றுக் கதைகள், ஹதீஸ்கள் போன்றவற்றைக் கற்பித்தல் வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். முஸ்லிம் நேசனில் தொடர்ந்து பல கட்டுரைகளை அறபு-குர்ஆன் பாடங்களைப் போதிப்பது எவ்வாறு என்பது பற்றி எழுதி ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் அறிவுறுத்தினார்.

## பாடநூல் வெளியீடு

சமய சூழலில் கல்வி கற்பித்தற்காகப் பாடசாலைகளை ஆரம்பித்து முஸ்லிம் ஆசிரியர்களை நியமித்து பாடங்களைக் கற்பிக்க ஏற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தபோதும், இஸ்லாமிய சிந்தனையை ஊட்டும் நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆதலால் சமூகப் பணிகள் பலவற்றில் ஈடுபட்டுக் கொண்டே முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்களையும் அவரே எழுதினார். இதுபற்றி 1991 இல் வெளியிடப்பட்ட தேசிய தமிழ் சாஹித்திய விழா மலரில் சித்திலெப்பையின் உரை நடைச் சிறப்பு எனும் கட்டுரையில் சித்திலெப்பையின் பின்வரும் கூற்றை எஸ். எம். கமாலுதீன் எடுத்தாண்டுள்ளார். "முதலில் நான் சிறுபிள்ளைகளின் உபயோகத்திற்காக முதலாவது புத்தகத்தை எழுதினேன். இந்த நூலில் எளிய சொற்களும், வாக்கியங்களும் உள்ளன. இந்த முறையை அனுசரித்தே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பாடநூல்களையும் எழுதியுள்ளேன். இரண்டாவதாக நான் ஓர் இலக்கண நூலை மூன்று பாகங்களைக் கொண்டதாக எழுதியுள்ளேன். இவை எல்லாம் இலங்கைப் பாடசாலையில் பயிற்றப்படுகின்றன."

அவர் எழுதிய தமிழ் முதல் புத்தகத்தில் 71 பாடங்கள் உள்ளன. முதலாம் பாடம் முதல் 28 ஆம் பாடம் வரை ஒரு எழுத்து முதல் ஏழு எழுத்துக்களாலான சொற்களையும் 29 ஆம் பாடத்தில் வழக்கில் உள்ள வடமொழி எழுத்துக்களையும் அறிமுகம் செய்துள்ளார். இப்பாடங்களில் இஸ்லாமியக் கருத்துக்களையும் இடையிடையே அறிமுகம் செய்துள்ளார். அறபுப் பழமொழிகளின் கருத்துக்களும், ஹதீஸ் கருத்துக்களும், நல்லுபதேசங்கள் போன்றனவும் இடம் பெற்றுள்ளன. அளவை வாய்ப்பாடுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

உ+ம் :

இருபது மஞ்சாடி ஒரு கழஞ்சு
ஆறு கழஞ்சி ஒரு அவுன்ஸ்

(இந்தப் பந்தியில் குறிப்பிட்டுள்ள தமிழ் முதற்புத்தகம் கொழும்பு நூதனசாலையின் நூலகத்தில் உண்டு.)

பாடசாலை மாணவர்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்:-

### ♦ துஹ்பதுன் நகுவு வஉ சூலுல் கிராஅதில் அறபிய்யா :

இது மாணவர்களுக்கான அறபு இலக்கண நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிதாப் அல்ஹிசாப் :**

இது மாணவர்களுக்கான கணித நூல்.

- **அறபு முதற் புத்தகம்**
- **அறபு இரண்டாம் புத்தகம்,**
- **ஹிதாயதுல் காசிமிய்யா.**

இந்நூல் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தென் இந்தியாவின் பிரபல்யமிக்க நகரான கீழக்கரையில் நடைபெற்ற அர்வி மத்ரஸாக்களில் பாட நூலாக இருந்தது என தைக்கா சுஐப் ஆலிம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் இலங்கையில் மட்டுமன்றி தென் இந்தியாவிலும் பிரபல்யம் பெற்றிருந்தது என்பதை இக்கூற்று காட்டுகிறது.

## சமய நூல் வெளியீடு

அவர் எழுதிய மற்றொரு நூல் சுருதுஸ்ஸலாத் என்பதாகும். இந்நூலில் தொழுகையின் விதிகளையும், அதன் ஒழுக்க மேம்பாட்டையும், தொழுகையின் பயன்பாட்டையும் பற்றி எழுதியுள்ளார் என்றறிய முடிகிறது. தொழுகின்ற மனிதர்கள் முஸ்லிம் சமூகத்தில் பலர் இருந்தபோதும் தொழுபவர்களிடம் இஸ்லாமியப் பண்பாடுகளையோ, ஆன்மீக மேம்பாட்டையோ காணமுடியவில்லை என்று அவர் கவலைப்பட்டார். அதனால் இஸ்லாமியப் பண்புகளை முஸ்லிம்களிடம் ஏற்படுத்துவதைக் கருத்திற்கொண்டு இந்நூலை எழுதியிருக்கலாம் என்று அனுமானிக்க முடிகிறது. தொழுகையில் நாம் மேற்கொள்ளும் பிரார்த்தனைக்கும் எமது வாழ்க்கைக்கும் இடையே தொடர்பு அற்றிருப்பதை அவர் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார். ‘தொழுகையில் அல்லாஹ்வைப் புகழ்ந்து தஸ்பீகு செய்து பாவமன்னிப்புக் கோருகிறோம். முஸல்லாவை விட்டு எழுந்தவுடன் அல்லாஹ்வுக்கு மாறு செய்கிறோம்.’

தொழுகையின் பர்ளு சர்த்துக்கள், ஐந்து நேரத் தொழுகையில் ஓதப்படும் ஓதல்கள், துஆக்கள் என்பவற்றிற்கான தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பையும் வழங்கி, சரிஆவின் எல்லைக்குள் நின்று, தொழுகையை உயிரோட்டமுள்ளதாக்க இந்நூலில் முயற்சித்துள்ளார்.

## முஸ்லிம்களின் போதனா மொழி

சித்திலெப்பை வாழ்ந்த காலப்பகுதியில் ஆங்கில மொழிமூலப் பாடசாலைகளும், உதவி நன்கொடை பெறும் தேசிய மொழிப்பாடசாலைகளும் இருந்தன. முஸ்லிம்கள் தமது கல்வியை எம்மொழிமூலம் பெறுவது என்ற பிரச்சினை அவரது காலத்திலும் இருந்தது. அதுபற்றி அவர் முஸ்லிம் நேசனில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "நமது மார்க்க நூல் அறபு மொழியில் இருப்பதால் அறபு மொழியையும், நாம் பேசும் பாஷை தமிழ். அதை அறியாதவன் குருடன் போல் ஆவான். ஆதலால் தமிழையும், ஆட்சி மொழி ஆங்கிலம் என்பதால் ஆங்கிலத்தையும், இத்தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மையினர் சிங்களம் பேசுவதால் சிங்களத்தையும் படிப்பது அவசியம்."
>
> (முஸ்லிம் நேசன் 1886.03.18)

> "முஸ்லிம்கள் தமது வீட்டு மொழியாக அறபு மொழியை ஆக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இலங்கையில் வாழ்ந்த போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் தமது தாய்மொழியை மறந்து ஆங்கிலம் பேசமுடியுமாயின் தமிழை மறந்து அறபு மொழியைத் தாய்மொழியாக்கிக் கொள்ள எமக்கு ஏன் முடியாது."
> (முஸ்லிம் நேசன் 1884.11.06)

இலங்கை முஸ்லிம்கள் பல மொழிகளைக் கற்கவேண்டிய சூழலை எடுத்துக்காட்டி, இம்மொழிகளில் பரிச்சயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆயினும் தாய்மொழியை அறியாதவன் குருடன் போலாவான் என்று சுட்டிக்காட்டி தமிழ் மொழியைப் படிப்பதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அத்துடன் அறபு மொழியை வீட்டில் பேசும் மொழியாக்கிக் கொள்ளவேண்டும் என்று அவர் குறித்துள்ளமை குர்ஆனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தும் அதன் பொருளை அறியாத இழிநிலையில் இருந்து முஸ்லிம்களை மீட்டெடுத்து முஸ்லிம்களின் கலாசார மேம்பாட்டைத் துரிதப்படுத்துவதை அவர் கருத்திற் கொண்டிருக்கலாம் என்பதை உணர்த்துகிறது.

# நாவல் இலக்கியம்

## ♦ அஸன்பே சரித்திரம்

இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ் நாவலாக எம். சி. சித்திலெப்பை எழுதிய அஸன்பே சரித்திரம் கருதப்படுகிறது. இந்நாவல் 1884.07.31 ஆந் திகதி முதல் முஸ்லிம் நேசனில் அஸன்பேயுடைய கதை எனும் தலைப்பில் தொடர்கதையாக வெளிவந்தது. 1885 இல் தனி நூலாக வெளியிடப்பட்டது. அதனை அடுத்து வந்த பதிப்புகளில் தான் அஸன்பே சரித்திரம் என்ற பெயரிடப்பட்டுள்ளது.

நாவல் இலக்கியத்தின் தோற்ற காலத்தில் எழுதப்பட்ட இந்நாவல் முஸ்லிம் சமூகப் பின்னணியைக் கொண்டது. வியப்பூட்டும் கதைகளைக் கதைக்குள் கதையாகக் கொண்ட இந்நாவல் சமூகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியதுடன், முஸ்லிம் சமூகத்தை பண்பாட்டுச் சிறப்பும் கல்வி மறுமலர்ச்சியும் கொண்டதாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டுள்ளது.

இந்நாவலை வடிவமைப்பதற்கு அல்குர்ஆன் ''அஹ்ஸனுல் கஸஸ்'' (அழகிய கதை) என்று சுட்டிக்காட்டும் யூசுப் (அலை) அவர்களின் வரலாறும், ஆயிரத்தோர் இரவுகள் கதைகள் (அல்புல்லைலா வலைலா) எனும் ஆக்கமும் பெரும் துணை செய்திருக்க முடியும். யூசுப் (அலை) வரலாற்றூடாக அன்றைய சமய, சமூக, பொருளாதார நிலைகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளதைப் போல அஸன்பே சரித்திரத்தினூடாகவும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியின் முஸ்லிம் சமூகத்தின் சமய, சமூக, பொருளாதார, ஆன்மீக நிலை துள்ளியமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவலாசிரியர் இலங்கையில் பிறந்து வளர்ந்து இலங்கை முஸ்லிம்களின் கல்வி சமூகநல மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு இந்நாவலை எழுதிய போதும், இந்நாவலின் கதை நிகழ்விடமாக அவர் இலங்கையைக் கொள்ளவில்லை. மாறாக இலங்கை முஸ்லிம்கள் கலாசார ரீதியாக மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்த இந்தியாவையும் எகிப்தையும் கதை நிகழ்விடமாகக் கொண்டுள்ளார். பின்வரும் இரு காரணங்கள் பற்றி அவர் இந்தியாவையும் எகிப்தையும் கதை நிகழ்விடமாகக் கொண்டிருக்க முடியும்.

I. அஸன்பே போன்ற ஒரு முக்கிய கதாபாத்திரத்தை உருவாக்கக்கூடிய சமூக, கலாசார கல்விப் பின்னணியை அன்றைய இலங்கை முஸ்லிம் சமூகம் கொண்டிருக்காமை,

II. இக்காலப்பகுதியில் இலங்கை முஸ்லிம்கள் இந்தியாவில் இருந்தும் எகிப்திலிருந்தும் சமூக, கலாசார உந்துதலைப் பெற்றனர். இந்தியாவின் அலிகார் முஸ்லிம் கல்விக்கூடம் எகிப்தின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகம், என்பவற்றுடன் இந்திய முஸ்லிம் சமூக சீர்திருத்தவாதியான சேர் செய்யது அஹ்மதுகான், எகிப்தைக் களமாகக் கொண்டு செயற்பட்ட ஜமாலுத்தீன் ஆப்கானி என்பவர்கள் மேற்கொண்ட சமூக சீர்திருத்த செயற்பாடுகள் என்பன, இலங்கை முஸ்லிம் சமூக மேம்பாட்டுக்கு உந்துதலை வழங்கும் கலங்கரை விளக்குகளாக இருந்தமை.

அவர் வடித்த கதாநாயகனை மரபு ரீதியான கல்வியையும், நவீன கல்வியையும் கொண்டவராகவும், நன்மனிதருக்கு எடுத்துக்காட்டாகவும் உருவகித்து, “சமய சூழலில் நவீன கல்வி” என்ற அவரது சித்தாந்தத்தைப் பயனுள்ள ஒன்றாகக் காண்பிக்க முயற்சித்துள்ளார். மதமாற்றத்துக்கு அஞ்சியே முஸ்லிம்கள் கிறித்தவ மிஷனரிகள் நடாத்தும் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பவில்லை. இஸ்லாம் அதன் அசல் நிலையில் பின்பற்றப்பட்டால் இவ்வாறு பயப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதைம் தற்காலத்தும் பிறரைத் தன்பால் ஈர்க்கும் சக்தி இஸ்லாத்துக்குண்டு என்பதையும் இந்நாவலின் கதாநாயகியான 'பாளின்' என்ற கதா பாத்திரத்தினூடாக எடுத்துக்காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்லியாக்களின் போர்வைக்குள் நடமாடும் போலிகளின் ஈனச் செயலையும், பண வெறிப்பிடித்த சிலரின் கொடுமைகளையும், ஒழுக்கசீல உணர்வற்ற ஆண்களதும் பெண்களதும் தகாத செயல்களையும் நாவலாசிரியர் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

தம் கருத்துக்களைப் புலப்படுத்துவதற்கும் கதாபாத்திரங்களை வர்ணிப்பதற்கும் ஏனைய இலக்கிய கர்த்தாக்களைப் போல உவமைகள், உருவகங்கள், பழமொழிகள் கவிதைகள் போன்றவற்றை இந்நாவலாசிரியரும் கையாண்டுள்ளார். இந்நாவல் முஸ்லிம் வாசகர்களைக் கருத்திற் கொண்டு எழுதப்பட்டதால் இஸ்லாமிய மணம் கமழும் உவமைகளைக் கையாண்டுள்ளார். (உ+ம் : ஹஜ்ஜுக்குப்போய் வந்த பூனைபோல, தல்கீன் ஓதுகின்ற நேரத்தில் லெப்பையுடைய முகம் வாடியிருப்பதைப் போல) கதாபாத்திரங்களுக்கு இஸ்லாமிய பெயர்களைச் சூட்டுவதைக் கொண்டு மட்டும் நாவலாசிரியர் திருப்தியுறாது இஸ்லாமிய கலாசாரப் பண்புகளையும், நடையுடை பாவனைகளையும் உரிய இடங்களில் இணைத்து கதையை இஸ்லாமிய மயமாக்க முயற்சித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

சாதாரண குடிமக்களின் கல்வி, பொருளாதாரம் பண்பாடு என்பவற்றின் மேம்பாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்நாவலாசிரியர், இந்நாவலில் அவர்களையே இலக்காக கொண்டுள்ளார். இந்நாவலாசிரியர் கையாண்டுள்ள உவ்மைகள், பழமொழிகள், கவிதைகள், குறள்கள் என்பன தமிழ் இலக்கியங்களில் நல்ல புலமையும் பரிச்சயமும் அவருக்குண்டு என்பதைக் காண்பிக்கின்றன.

இந்நாவலை வாசிப்பதினூடாக முஸ்லிம் சமூக சீர்த்திருத்தத்தை இலட்சியமாக கொண்ட ஒரு சமூக நாவல் இது என்பதை வாசகர்கள் மிக இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் வரலாறு

இலங்கையின் சட்ட நிருபண சபையில் முஸ்லிம் விவாகப் பதிவுச்சட்ட மசோதா முன்வைக்கப்பட்டு விவாதங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகிய திரு. பொன் இராமநாதன் பேசும்போது இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பின்பற்றும் தமிழ் இனத்தவர்கள் என்ற ஒரு கருத்தை முன்வைத்தார். இஸ்லாத்தை ஏற்ற தமிழர்களே தம் முன்னோர்கள் என்று குறிப்பிடுவது முஸ்லிம்களுக்கு எதுவிதத் தரக்குறைவையும் ஏற்படுத்தாதபோதும், உண்மைக்கும், தாம் இது காலவரை நம்பியிருந்த கருத்துக்கும் மாற்றமான ஒரு கருத்தாக அது இருந்தது. அஃதன்றி இலங்கை முஸ்லிம்கள் தமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக சாத்வீகமான முறையில் பெருமுயற்சி செய்து கொண்டிருக்கும் ஒரு காலப்பகுதியில் இத்தகையதொரு கருத்தை சட்டநிருபண சபையிலும், Royal Asiatic Society போன்ற ஆய்வு மன்றத்திலும் முன்வைப்பது முஸ்லிம்களின் அரசியல் அபிலாசையைப் புறக்கணிக்கச் செய்வதற்கு எடுத்த ஒரு நடவடிக்கை என்றே இலங்கையின் படித்த முஸ்லிம்கள் கருதினர். அதனால் முஸ்லிம்களின் மனது புண்பட்டது. இருந்தபோதும் தமது வரலாற்றை நிறுவுவதற்குத் துணை செய்யக்கூடிய வரலாற்று நூல்கள் எதனையும் முஸ்லிம்கள் கொண்டிருக்கவில்லை. தமது வரலாற்றை வாய்மொழி மூலமாகவே அடுத்த பரம்பரையினர்க்கு அவர்கள் வழங்கி வந்தனர். இக்குறைபாட்டை எம். சி. சித்திலெப்பை நன்குணர்ந்தார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை சித்திலெப்பை முஸ்லிம் நேசனில் 1885.09.15 ஆந் திகதி முதல் தொடர்ந்து வெளியிட்டார். இதன் மூலம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைத் திரட்டி வெளியிடும் முதல் முயற்சியை எம். சி. சித்திலெப்பை ஆரம்பித்து வைத்தார். இதற்கு இரு தசாப்தங்கள் கழித்து கி. பி. 1907 இல் பொன்னம்பலம் இராமநாதனின் கருத்துக்களை விமர்சித்து ஐ. எல். எம். ஏ. அஸீஸ் A Criticism of Mr. Ramanathan's Ethonology of Moors of Ceylon எனும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். சித்திலெப்பையின் முயற்சியின் பின் ஒரு நூறு ஆண்டு கழித்துதான் 1986 இல் ஜாமிஆ நளீமிய்யா இலங்கை முஸ்லிம்களின் பல்வேறு துறைசார்ந்த வரலாற்றை உள்ளடக்கிய நூல் ஒன்றை வெளியிட்டது. இவ்வகையில் எம். சி. சித்திலெப்பையின் இம்முயற்சி இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை தொகுப்பதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ஞ்ஞான நூல்

## ♦ அஸ்றாருல் ஆலம்

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்களை ஆன்மீகத்துறையில் ஈடுபடுத்துவதற்காக தரீக்காக்கள் முயற்சித்தன. இந்தியாவில் இருந்து வந்த ஆழமான அறிவு இல்லாத சில போலி ஞானிகளும் ஆன்மீகப் போர்வையில் இருந்து கொண்டு ஆன்மீகம் பற்றிய தவறான கருத்துக்களையும் தவறான செயற்பாடுகளையும் மக்களிடையே பரப்பினர். தஸவ்வுப் எனப்பட்ட மெய்ஞ்ஞானக் கலையின் பெயராலேயே மக்களிடையே தவறான சிந்தனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனால் மக்களுக்கு உண்மையான மெய்ஞ்ஞான அறிவை ஊட்ட வேண்டிய தேவையை அறிஞர்கள் சிலர் அறிந்திருந்தனர். அவர்களுள் எம். சி. சித்திலெப்பையும் ஒருவராவார். அவர் தான் வெளியிட்ட முஸ்லிம் நேசனிலும் ஞானதீபம் சஞ்சிகையிலும் தஸவ்வுப் சார்ந்த சில கட்டுரைகளை எழுதினார். இதன் அடுத்த கட்டமாகவே தனது மரணத்துக்கு இரு மாதங்களுக்கு முன்பு "அஸ்றாருல் ஆலம்" எனும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். மெய்ஞ்ஞானம் பற்றிய ஆரம்ப அறிவு அற்றவர்களும் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்திலான மெய்ஞ்ஞானம் பற்றிய ஓர் அறிமுக நூலாகவே இந்நூல் அமைந்திருந்தது.

இந்நூலை எழுதுதற்குத் தூண்டிய காரணி பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தத் தேசங்களில் தமிழ் பாஷையில் ஞான அறிவுகளைத் துலக்கமாகவும் யோக விதிகளைத் தெளிவாகவும் விளக்கிய கிதாபுகள் அரிதாயிருப்பதால் ... ஆரிபீன்களின் சுல்தான்களாகிய முகியித்தீனிப்னுல் அறபி அவர்களுடைய புசூசுல் ஹிகம், புதூஹாதுல் மக்கிய்யா, இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்களின் இஹ்யா உலூமுத்தீன் ... முதலிய கிதாபுகளில் உள்ள விலை மதிக்கக்கூடிய இரத்தினங்களைப் பொருக்கி இந்தக் கிதாபிற் பதித்திருக்கின்றேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் அவர் ரூஹு, கல்பு, நப்சு அம்மாறா, ஆலமிதால், தல்ஸமா, மெஸ்மரிஸம், மந்திரம், சூனியம், இந்திரஜாலம், பிசாசு, ஜின், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ்ஜு, இறைஞானம், ம.்.ரிபா, ஹுலூல் இத்திஹாத், தவ்ஹித், தரிகா, வஹி இல்ஹாம், திக்ரு, கனவு, விவாகம் முதலாம் பல்வேறு அம்சங்களைப் பற்றி எழுதியுள்ளார்.

இந்நூலை முஸ்லிம்கள் வாசிக்கக்கூடாது என்று ஒரு பத்வா எம். சி. சித்திலெப்பையின் மரணத்தின்பின் முஸ்லிம் நேசனில் வெளியிடப்பட்டது. அஸ்றாருல் ஆலத்தை விமர்சித்து கொழும்பு வைத்தியர் அ.லெ. முஹம்மது லெப்பை மரைக்கார் தத்துவப் பரகண்டனம் என்றொரு நூலை வெளியிட்டார். எம். சி. சித்திலெப்பை தனது இந்நூலில் அல்லாஹ்வைக் குறிக்க "சத்து" என்ற பதத்தைப் பிரயோகித்தமை தவறு என்று இவ்விமர்சனத்தில் சுட்டிக்காட்டினர். இக்குற்றச்சாட்டுகட்குப் பதிலளிக்குமுகமாக எம். சி. சித்திலெப்பையின் மாணவர் ஐ. எல். எம். ஏ. அஸீஸ் சத்தின் ஞானார்த்தம் என்ற பெயரில் மூன்று சிற்றேடுகளை வெளியிட்டார். விமர்சகர்களின் கருத்துக்களை தர்க்க ரீதியாக அவர் விமர்சித்து அதன் பயனற்ற தன்மையை எடுத்துக்காட்டினார்.

'அஸ்றாருல் ஆலம்' எனும் இந்நூலை இந்தியாவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரான ஆர்.பி.எம் கனி என்பவர் தற்கால மொழி நடையில் மெய்ஞ்ஞானப்பேரமுதம் என்ற தலைப்பில் 1963 இல் வெளியிட்டுள்ளார்.

## பத்திரிகை வெளியீடு

### ♦ முஸ்லிம் நேசன்

இலங்கையில் வெளியிடப்பட்ட முஸ்லிம் தமிழ்ப் பத்திரிகைகளில் காலத்தால் முந்தியது கணக்குப் பரிசோதகரான வாப்பு மரைக்கார் நைந்த மரைக்கார் என்பவரால் 1873.05.03 ஆந் திகதி வெளியிடப்பட்ட புதினாலங்காரி என்ற பத்திரிகையாகும். இப்பத்திரிகை தன் முதல் வருடப் பிறப்பைக் கொண்டாடு முன்பே மறைந்துவிட்டது. முகம்மது காசிம் சித்திலெப்பை 1882, திசெம்பர் 21 ஆந் திகதி முஸ்லிம் நேசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டார். இலங்கையின் மத்திய மலைநாட்டில் தோன்றிய முதல் முஸ்லிம் தமிழ்ப் பத்திரிகை இது எனலாம். இலங்கை முஸ்லிம்களின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முஸ்லிம் பத்திரிகைகளைப் பிரசுரம் செய்த போதும், சிங்களவர்கள் 1832 இலும் தமிழ் மக்கள் 1841 இலும் பத்திரிகைகளை வெளியிட்டனர்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகை தோன்றி 31 வருடங்கட்குப் பின்பு புதினாலங்காரியும் நாற்பத்தி ஒரு வருடங்கட்கு பின்பு முஸ்லிம்நேசனும் பிரசுரிக்கப்பட்டன. இலங்கை முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் முஸ்லிம்களிடையே படித்த வர்க்கத்தினர் தோன்றுவதற்குக் கால தாமதமாகியமையே பத்திரிகைப் பிரசுரம் பிந்துவதற்கு முக்கிய காரணி எனலாம். இலங்கையில் வாழ்ந்த, சிங்கள, தமிழ் சமூகங்களை விடப் பிந்தி இலங்கை முஸ்லிம்கள் பத்திரிகைகள் வெளியிட்டபோதும், தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாழ்ந்த இந்தியா, சிங்கப்பூர், பினாங்கு முதலாம் இடங்களில் வாழ்ந்த தமிழ் பேசும் முஸ்லிம்கள் பத்திரிகைகளை வெளியிட்ட அதே காலப் பகுதியில் இலங்கையிலும் முஸ்லிம்கள் பத்திரிகைகளை வெளியிட்டுள்ளார்கள் என்பது சுட்டிக் காட்டத் தக்கதாகும்.

முஸ்லிம் நேசன் 1882-1944 வரை தொடர்ந்து வெளிவந்தது. இன்றுவரை இலங்கை முஸ்லிம்களிடையே பிரசுரமாகிய அல்லது பிரசுரமாகின்ற பத்திரிகைகளில் நீண்ட காலம் உயிர்வாழ்ந்த பத்திரிகை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (முஸ்லிம்களிடையே வெளிவருகின்ற நீண்ட ஆயுளையுடைய மற்றொரு பத்திரிகை அல்ஹஸனாத் ஆகும். அது தன் நாற்பதாவது ஆண்டைக் கொண்டாட இவ்வருடம் (2010) முயற்சித்துக் கொண்டிருக்கிறது.)

எம். சி. சித்திலெப்பை அவர்களே முஸ்லிம் நேசனின் தோற்றம் முதல், ஆறு ஆண்டு காலம் வரை அதன் ஆசிரியராக இருந்தார். இவ்வாறாண்டுக் காலப்பகுதியில் முதலில் கண்டியிலும் பின் கொழும்பிலும் அதன்பின் பேராதனையிலும் இருந்து இப்பத்திரிகை வெளியிடப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தின் தேவைகளையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கும் பத்திரிகையாக மட்டுமன்றி, அவற்றை நிறைவு செய்யப்போராடும் ஓர் இதழாகவும் அது பிரசித்தமடைந்திருந்தது. அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் வாசகர்களையும் பெற்றுக்கொண்டது.

முஸ்லிம் நேசனின் ஆசிரியர் அதன் முதல் இதழின் ஆசிரியர் தலையங்கத்திலும் பின் வந்த இதழ்களிலும் இப்பத்திரிகையை வெளியிட்டதற்கான காரணிகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தந்த குறிப்புகளில் சில வருமாறு :

(அ) "... கல்விகளையும், விஷேசமான புதினங்களையும், படித்தவர்களும், படியாதவர்களும், முதியவர்களும், இளையவர்களும், மற்றவர்களும், தங்கள் தங்கள் வேலை முயற்சிகளோடு வாசித்தறிந்து கொள்ளும்படி ஓர் பத்திரிகையை வாரம் தோறும் பிரசுரம் செய்ய விரும்பி இப்பத்திரிகைக்கு 'முஸ்லிம் நேசன்' எனப் பெயரிட்டோம்" (முஸ்லிம் நேசன் 1882.12.21)

(ஆ) "வியாபாரம், கல்வி, சமயம், அரசியல் வழக்கு முதலியவைகளும் உலகத்தில் உள்ள புதின சம்பவங்களுமே இப்பத்திரிகைகளில் பெரும்பாலும் பேசப்படும்." (முஸ்லிம் நேசன் 1884.07.31)

(இ) "முஸ்லிம்கள் சீர்த்திருத்தமும் நாகரிகமும் அடைய வேண்டும் என்ற ஊக்கங் கொண்டே இப்பத்திரிகையை நடத்தி வருகிறோம்." (முஸ்லிம் நேசன் 1885.01.08)

கல்வி பற்றிய செய்திகள், கட்டுரைகள் என்பன பல்வேறு கோணங்களில் முஸ்லிம் நேசனில் எழுதப்பட்டன. கல்வியின் அவசியம். அதன் சிறப்பு, நம் முன்னோர் கல்வியில் மேம்பாடுற்றிருந்ததால் பெற்ற புகழ், முஸ்லிம் பாடசாலைகள், நூல் நிலையங்கள், வெளிநாட்டில் உள்ள முஸ்லிம் கல்வித்தாபனங்கள், அறபு நாட்டு முஸ்லிம்கள், அந்நிய மொழியைக் கற்பதில் காட்டும் ஆர்வம் என்பன பற்றிய கட்டுரைகள் பல முஸ்லிம் நேசனில் வெளியிடப்பட்டன.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைக்கு பலமுறை முஸ்லிம் நேசன் குரல் கொடுத்தது. முஸ்லிம் சமூகத்தில் நிலவிய மூட நம்பிக்கைகள், மூடப் பழக்கவழக்கங்கள் என்பவற்றை அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சித்தது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அது களமாகியது. சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் என்பவற்றை அது பிரசுரித்தது.

முஸ்லிம் நேசன் முஸ்லிம் எழுத்தாளர்களையும், வாசகர்களையும் மட்டுமன்றி தமிழ் எழுத்தாளர்களையும், வாசகர்களையும் கொண்டிருந்தது. இந்தியா, சிங்கப்பூர், பினாங்கு முதலாம் பகுதிகளில் வாழ்ந்த மக்களும் வாசகர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மக்களிடையே முஸ்லிம் நேசன் படிப்படியாக தன் செல்வாக்கை வளர்த்துக் கொண்டிருந்ததைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| ஆண்டு | பிரதிகள் |
|---|---|
| 1890 | 350 |
| 1891 | 500 |
| 1896 | 800 |
| 1898 | 1300 |
| 1901 | 1800 |

எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் முஸ்லிம்களிடையே மிகக் குறைவாக இருந்த காலப்பகுதியில் மேற்குறித்தவாறான பிரதிகள் அச்சிடப்பட்டமை அதன் பிரபல்யத்தைக் காட்டுகிறது.

முஸ்லிம்நேசன் சமூக முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு சீர்திருத்த முயற்சிகளை முன்னெடுத்தது. சமூகத் தலைமைத்துவத்தை படித்த வர்க்கத்தினர் இடையேயிருந்து உருவாக்க உழைத்தது. இதனைச் சகியாத மரபு வழிச் சிந்தனையுடையோர் முஸ்லிம் நேசனைச் சாடுவதற்கு என்றே 'சர்வஜன நேசன்', 'கஷ்புற்றான் அன் கல்பில் ஜான்' எனும் இருபத்திரிகைகளை வெளியிட்டனர். சர்வஜன நேசன் முஸ்லிம் நேசனைப் பலமுறை கிண்டல் பண்ணியுள்ளது. உ+ம் :

> "முஸ்லிம் நேசன் எனும் இச்சிறுவன் தொடக்கத்தில் காபிரான இலங்கை நேசன் வயிற்றில் ஒரு முஸ்லிமுக்கு உற்பத்தியாகி ..... எம். சி. சித்திலெப்பையின் பார்வைக்குக் கீழ் காபிரான கணேசையரால் பால் ஊட்டப்பெற்று ........ எஸ். பொன்னுச்சாமியின் கையிற் தூங்கி ...... வளர்ந்து வந்தான். பினாங்கு வித்தியாதரிசினியிடமும் யாழ்ப்பாணம் உதயபானு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு தின வர்த்தமானி சர்வஜன நேசன் முதலிய பலரிடமும் குட்டுப்பட்டுத் தட்டுக் கெட்டு அவதிப்பட்டான்."

(சர்வஜன நேசன் 1887, தொகுதி 02 இல. 26)

முஸ்லிம் நேசனை சிலர் இவ்வாறு விமர்சித்தபோதும் அது ஏற்படுத்திய விழிப்புணர்ச்சி இன்றும் நீடித்திருப்பது அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

## ♦ ஞானதீபம்

முகம்மது காஸிம் சித்திலெப்பை ஆரம்பகால முதலே உலகியல், ஆன்மீகம் எனும் இருதுறைகளாலும் போசிக்கப்பட்டிருந்தார். இவ்விரு துறை சார்ந்த அறிஞர்களுடனும் அவருக்கு நெருக்கமான உறவு இருந்தது. அதைப் போலவே இவ்விரு துறை சார்ந்த நூல்களையும் வாசித்தறிந்தார். ஆன்மீகத்துறை அறிஞரான. முகியிதீன் இப்னல் அறபியின், புசூசுல் ஹிகம், புதூஹாதுல் மக்கிய்யா, இமாம் கஸ்ஸாலியின் இஹ்யா உலூமுத்தீன் முதலாம் ஆன்மீகத்துறை சார்ந்த நூல்களுடன் நன்கு பரிச்சயமும் இருந்தது. வயதின் மூப்பும் அவரை ஆன்மீக ஈடுபாட்டில் அதிகம் ஈடுபடச் செய்திருக்கலாம். இதன் விளைவாக அவர் 1887 இல் 'ஞானம்' எனும் தலைப்பிலும் 1888 இல் 'ஆலமிதால்' என்ற தலைப்பிலும் முஸ்லிம் நேசனில் ஆன்மிகத் துறையைத் தூண்டும் தொடர் கட்டுரைகளை எழுதினார். இதன் வளர்ச்சியாகவே 1892 ஆவணி மாதம் முதலாம் திகதி ஞானதீபம் எனும் பெயரில் ஒரு சஞ்சிகையை வெளியிட்டார். இது ஒரு மாத இதழ். மெய்ஞ்ஞானம் பற்றிய தகவல்களை இது வழங்கியது. இதன் பன்னிரெண்டாம் இதழ் 1893 ஆடி மாதம் முதலாம் திகதி வெளிவந்தது. அதன் முடிவில் ஞானதீபம் முதற் பாகம் முடிவுற்றது என்ற ஒரு குறிப்புண்டு. மாதா மாதம் இதழ்களாக வெளியிடப்பட்டபோதும், புதினப் பத்திரிகையின் பண்புகளைக் கொண்டதாகவோ, பல்வேறு வகைத்தான வாசகர்களைக் கவரும் பல்சுவை சார்ந்த அம்சங்களைக் கொண்டதாகவோ இது அமையாது மெய்ஞ்ஞான சிந்தனைச் சார்புடையோரை மட்டும் கருத்திற் கொண்டு இதன் பன்னிரெண்டு இதழ்களும் வெளியிடப்பட்டுள்ளன. ஞானதீபத்தின் இரண்டாம் பாகம் அடுத்த மாதத்திலேயே வெளிவந்துள்ளது. அப்பிரதியிலும் அல்லாஹ்வின் தாத், சிபத் பற்றியே எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானதீபத்தின் முதலாம் இதழில் அதன் ஆசிரியர் பின்வரும் கருத்தை எழுதியுள்ளார்.

"... அனேகர் வணக்கங்களைச் செய்து வந்தும் கல்பு இருளாகவும், தீய குணங்கள் நிரம்பியும், துன்யாவின் ஆசை மேலிட்டிருப்பதும் இந்த இல்முகளைக் கொண்டு ஈமான் உறுதியாகாததாலுமே. அல்லாஹுத்தஆலாவின் உதவியைக் கொண்டு இவைகளை விவரித்துக் காட்டுவோம்."

இக்குறிப்பின் மூலம் முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீகத் துறையில் நிலவும் பலவீனத்தை அவர் சுட்டிக்காட்டி, அதனை நிவர்த்தியாக்குவதற்கு முயற்சிப்பதே ஞானதீபத்தின் இலட்சியம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

ஞானதீபத்தின் முதலாம் இதழில் குர்ஆனின் சிறப்பியல்புகளையும், அடுத்தடுத்து வரும் இதழ்களில் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள், கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகள், சமய அறிஞர்கள் செய்ய வேண்டிய கடமைகள், தலைவர்களும் செல்வந்தர்களும் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் போன்றனவற்றை விளக்கியுள்ளார். ஞானதீபத்தின் 6, 7, 9 ஆம் இதழ்களில் ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய மனப்பக்குவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஒரு முஸ்லிம் தொழும்போது தொழுகையின் விதிகளைப் பேணுவது மட்டுமன்றி மனத்தையும் தொழுகையில் இலயித்திருக்கச் செய்ய வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறார். தொழுகையின் போது எண்ணம், சொல், செயல் எனும் மூன்றும் ஒருமித்து இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். அல்லாஹ்வின் முன் தான் இருக்கின்றேன் என்ற உணர்வால் உந்தப்பட்டு இறை அச்சமும், இறை அருளில் நம்பிக்கையும் உடையவராக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். தொழுகையின் போது தான் ஓதும் ஓதல்களின் பொருளை அறிந்து ஓதுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தன் கருத்துக்களை விளக்க குர்ஆன் ஆயத்துகளையும், ஹதீஸ்களையும் அவர் மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளார். அறபுப் பதங்களைக் கையாளும்போது சாதாரண வாசகர்களைக் கருத்திற் கொண்டு அப்பதங்களின் பொருளை அவர் தெளிவாக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானதீபம் பெரியதோர் வாசகர் வட்டத்தைக் கொண்டிருந்தது. அதன் முதல் இதழில் ஐயாயிரம் பிரதிகளும் அடுத்தடுத்த இதழ்களில் மூவாயிரத்தைநூறு இதழ்களும் அச்சடிக்கப்பட்டன.

அவர் வெளியிட்ட அஸ்றாருல் ஆலத்தை விமர்சித்து நூல்கள் வெளியிடப்பட்டதைப் போல் ஹபீப் முகம்மது ஆலிம் சாஹிப் என்பவர் 'ஞானதீப சங்காரம்' என்றதோர் நூலை வெளியிட்டார். முஸ்லிம் நேசன் பத்திரிகையும் ஞானதீபத்தை விமர்சித்து கட்டுரைகள் வெளியிட்டது. (இக்காலப்பகுதியில் முஸ்லிம் நேசனின் ஆசிரியர் பொறுப்பு சித்திலெப்பையிடம் இருந்து கைமாறி இருந்தது.) ஞானதீபத்தின் மீது ஒன்பது குற்றச்சாட்டுக்களை சுமத்தி இப்றாஹிம் இப்னு ஐதுருஸ் என்பவர் முஸ்லிம் நேசனில் ஒரு விமர்சனத்தை வெளியிட்டார். எம். சி. சித்திலெப்பை ஞானதீபத்தின் மூன்றாம் இதழில் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்குமான பதில்களை தர்க்கரீதியாக முன்வைத்து, இக்குற்றச்சாட்டுகள் அறியாமையாலும் பொறாமையாலும் எழுந்தவை என்றுள்ளார். முஸ்லிம்களின் ஈமானையும் புரியும் வணக்கங்களையும் உயிரோட்டமுள்ளதாக்கவே ஞானதீபத்தின் ஆசிரியர் முயற்சித்துள்ளார் எனலாம்.

## அரசியற் பங்களிப்பு

இலங்கையில் வர்த்தகர்களாகக் குடியேறிய முஸ்லிம்கள் ஆரம்பகால முதலே சிங்கள மன்னர்களுடன் நேச உறவு கொண்டிருந்தனர். அரசியற் செல்வாக்குடையவர்களாகவும் இருந்தனர். சிங்கள மன்னர்களிடத்து அமைச்சர்களாக, ஏற்றிறக்குமதி, வெளிநாட்டுறவு போன்ற அம்சங்களில் ஆலோசனை கூறுபவர்களாக, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளி நாடுகளுக்கு செல்லும் தூது கோஷ்டிகளுக்குத் தலைமை தாங்கிச் செல்பவர்களாக, அரச வைத்தியர்களாக, திணைக்களங்களின் தலைவர்களாக எல்லாம் பணிபுரிந்தனர்.

ஐரோப்பியர் வருகையின் பின் இலங்கை முஸ்லிம்கள் அரசியல் அநாதைகளாயினர். போத்துக்கீசரும், தமது அரசியல், சமய, பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான எதிரிகளாக உலக முஸ்லிம்களைக் கருதியமையால், இலங்கை முஸ்லிம்களையும், தமது எதிரிகளாகவே கருதினர். இதனால் இலங்கை முஸ்லிம்கள் தமது அரசியல் நலன்களை மட்டுமன்றி பொருளாதார, கல்வி நலன்களையும் இழந்தனர். குறிப்பாக போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பல கொடுமைகளையும் எதிர்கொண்டனர். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் இழந்த சில உரிமைகளைப் பெற்ற போதும், 1833 முதல் உருவாக்கப்பட்ட சட்ட நிருபண சபையில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. முஸ்லிம்களை விட எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்த பறங்கியருக்கும், தோட்டத் துரைமாருக்கும் உறுப்புரிமை அளிக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம்களின் சமூக, கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கரை காட்டிய எம். சி. சித்திலெப்பை அரசியல் உரிமையை இழந்திருப்பதால் ஏற்படும் இழப்புக்களை நன்கு அறிந்திருந்தார். அதனால் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பல வழிகளில் முயற்சி செய்தார். தான் நடத்திய முஸ்லிம் நேசன் பத்திரிகை மூலம் முஸ்லிம்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சித்தார். மேடைகளில் பிரசங்கம் ஆற்றும் பொழுதும், பிரமுகர்களுடன் கலந்துரையாடும் போதும் அரசியல் உரிமையின் அவசியத்தை வலியுறுத்தினார். இதனால் கி. பி. 1880 களில் முஸ்லிம்களுக்கும் சட்ட நிருபணசபையில் பிரதிநிதித்துவம் தேவை என்ற கோரிக்கையை மக்கள் கவர்னரிடமும் பிரிடிஷ் ஆட்சியாளரிடமும் முன்வைத்தனர். நாவலப்பிட்டியைச் சேர்ந்த 'உழவன்' எனும் புனைபெயர் தாங்கிய வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தை முஸ்லிம்நேசனின் 1885.09.08 ஆம் திகதியின் வெளியீட்டில் பிரசுரித்தார். அக்கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

> "இலங்கையில் இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கி வாழ்கின்றனர். அவர்கள் தொழில் முயற்சியும் துணிவுமுடையவர்கள். அவர்களைவிட எண்ணிக்கையில் குறைந்த பறங்கியரையும், கோப்பித் தோட்டத் துரைமாரையும் பிரதிநிதித்துவப்படுத்த சட்ட நிருபண சபையில் பிரதிநிதிகள் இருந்தபோதும் முஸ்லிம்களுக்கு சட்ட நிருபண சபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை........"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1885, ஜுன் மாதம் 18 ஆம் திகதி தேசாதிபதி ஆர்தர் ஹமில்டன் கோர்டன் கண்டிக்கு வந்த போது 200 பேர் கையொப்பம் இட்ட ஒரு மகஜரைக் கையளித்தனர். அதில் சட்ட நிருபண சபைக்கு முஸ்லிம் பிரதிநிதியை நியமித்துத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இத்தகையதொரு கோரிக்கையை தேசாதிபதியிடம் பதுளை மக்களும் கையளித்தனர். சித்திலெப்பை முஸ்லிம் நேசன் மூலம் ஏற்படுத்திய அரசியல் விழிப்புணர்ச்சியின் விளைவாகவே நாட்டின் பல பகுதிகளில் இருந்து குறிப்பாக மலைநாட்டில் இருந்தும் இத்தகைய கோரிக்கை விடுக்கப்பட்டது எனலாம். இம்முயற்சி பயனளிக்க ஆரம்பித்தபோது தகுதியான ஒருவரையே இப்பதவிக்கு நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் நேசன் மூலம் வற்புறுத்தினர். அரசியல் உரிமைக்காக உழைத்த படித்த மக்கள் எம். சி. சித்திலெப்பையே இப்பதவிக்குத் தகுதியானவர் என்றும், அவருக்கே இப்பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் கோரினர். ஆயினும் முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவம் கொழும்பு முஸ்லிம்களாலேயே இதுகாலவரை அலங்கரிக்கப்பட்டு வந்ததால், தம்மில் இருந்து ஒருவரை நியமித்து கொள்ளும் நோக்கில் அறிஞர் எம். சி. சித்திலெப்பையை தாம் வெளியிட்ட சர்வஜன நேசன் பத்திரிகையில் கடுமையாகவும் குத்தலாகவும் விமர்சித்தனர்.

உ+ம் :

> "...கண்டியில் இருந்து முஸ்லிம் பிரதிநிதியாக, சட்ட நிருபண சபையிலேற ஓடிவந்து மூளையை உடைத்துக்கொண்டு தன்னுடன் சிலரைத் தன்னைப் போலாக்கி கடைசியில் யூபிலிக் கொமிட்டி மெம்பர் பட்டம் பெற்றால் போதாதா என ஒரு பெரிய பட்டம் பெற்று ....."

> "இஸ்லாம் மார்க்கத்தில் ஹராம் எனச் சொல்லிய பிரக்றர் வேலை பார்ப்பதோ, நொதாரிஸ் வேலை பார்ப்பதோ காபிர்களின் மெற்றோ பொலிடன் ஹோடலில் சாப்பிடுவதோ முஸ்லிம்களுக்கு இழிவு."
>
> (சர்வஜன நேசன் 1887.07.19)

முஸ்லிம் சமூகத் தலைமைத்துவம் கொழும்பை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற கருத்தை கொழும்பு முஸ்லிம் பிரமுகர்கள் கொண்டிருந்தனர். அதனை சித்திலெப்பையும் நன்கு அறிந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் சமூக நலனுக்கு முன்னுரிமை கொடுத்து அப்பணியில் ஈடுபடத் தகுதியானவர் ஒருவருக்கே அப்பதவி வழங்கப்படவேண்டும் என்று கருதி முஸ்லிம் நேசனில் பின்வருமாறு எழுதினார்.

> "இலங்கையின் நாலா பக்கங்களிலும் உள்ள முஸ்லிம்களின் பிரியத்தை கொண்டு தெரிவாரா? கொழும்பு முஸ்லிம்களின் பிரியத்துக்கு மட்டும் தெரிவாரா? சட்ட நிருபண சபையில் இருப்பவர்கள் கல்விமான்கள் ஆனமையால் முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கு உழைக்கக் கூடிய தகைமையான ஒருவரை நியமிக்காவிடின் முயற்சி பயனற்றுவிடும்".

சித்திலெப்பையின் தலைமையில் படித்த முஸ்லிம்கள் முன்னெடுத்த கோரிக்கை வெற்றியளித்ததால் கொழும்பு முஸ்லிம் பிரமுகர்களில் இருந்து பிரபல வர்த்தகரும், கப்பற் சொந்தக்காரருமான முஹம்மது காசிம் அப்துர்ரகுமான் என்பவர் சட்ட நிருபண சபையில் 1889 இல் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சித்திலெப்பையின் முயற்சி கைமேல் பலனளித்ததையே இந்நியமனம் காண்பிக்கின்றது. முஸ்லிம்கள் இப்பதவியில் சித்திலெப்பை அமர்த்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போதும், அவர் அதில் ஆர்வம் காட்டியதற்கான நேரடியான ஆதாரங்கள் எதுவும் கிட்டவில்லை. மாறாக 1887இல் கொழும்பில் இருந்து கண்டிக்கு மீண்டும் சென்று குடியேறியிருந்ததையும், ஆன்மீகத் துறையில் ஈடுபாடு காட்டி வந்ததையும் காண முடிகிறது. சட்ட நிருபண சபையில் அவர் அங்கம் வகித்து சமூகத்துக்குச் சேவையாற்ற வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும் கி. பி. 1865, ஆகஸ்ட் பத்தாம் திகதியில் இருந்து எட்டு வருடங்கள் கண்டி முனிசிபல் சபையில் அங்கத்தவராக இருந்து கண்டி வாழ் மக்களின் நலன்களுக்காக உழைத்துள்ளார் என்பது சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

## இலங்கை முஸ்லிம்களின் விவாகப் பதிவு

ஆங்கிலேயர் ஆட்சியின்போது இலங்கையில் பதில் பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய அலக்சாண்டர் ஜோன்ஸ்டன் கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் நடைமுறைப்படுத்திய தனியார் சட்ட விதிகளைத் தொகுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தொகுப்பை முஸ்லிம் தலைவர்களிடம் காட்டி அவர்களின் அங்கீகாரத்தையும் பெற்று அரசின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தார். இத்தொகுப்பே 1806 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக வாரிசுரிமை சட்டம் என்றழைக்கப்படுகிறது. இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்களின் அரச அங்கீகாரத்தைப் பொருத்தவரை இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் இடம் பெற்ற ஒரு மிக முக்கிய நிகழ்வு இது எனலாம். ஆயினும் இச்சட்டத் தொகுப்பு விவாகப் பதிவைத் தூண்டுவதாகவோ, வலியுறுத்துவதாகவோ அமையவில்லை. ஆதலால் விவாகப்பதிவு தொடர்ந்து அலட்சியப்படுத்தப்பட்டது.

முஸ்லிம் விவாகங்கள் பலர் அறியக்கூடியதாக, இரு சாட்சிகளின் முன் நிலையில், கதீப் அல்லது லெப்பை என்றழைக்கப்பட்ட சமயத் தலைவராலே நடத்தி வைக்கப்பட்டன. அவர்கள் நடத்தும் இவ்விவாகங்களை அவர்கள் ஒரு தாளில் அறபுத் தமிழில் பதிந்து வைத்தனர். இத்தகைய பதிவுப் பத்திரம் "கடுத்தம்" என்றழைக்கப்பட்டது. கடுத்தம் எனப்பட்ட இப்பதிவுப் பத்திரமே அவ்விவாகத்தை உறுதிப்படுத்தும் ஆவணமாக இருந்தது. விவாகத்தைப் பதிவு செய்த சமயத் தலைவரே அதனைத் தன் கைவசம் வைத்திருந்தார். இந்த ஆவணம் லெப்பைமாரின் பொறுப்பற்ற தன்மை காரணமாகவும் எழுதப்பட்ட தாள்களின் மோசமான தன்மை காரணமாகவும் சில சந்தர்ப்பங்களில் கணவன் மனைவியரிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் துணை நிற்கவில்லை.

1806 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக வாரிசுரிமைச் சட்டம் பூரணத்துவம் அற்றது என்றும், சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கவில்லை என்றும், காலி மாவட்ட நீதிபதி கில்மன் என்பவர் கி.பி. 1871 இல் எடுத்துக்காட்டினார். லெப்பைமார்கள் கடுத்தங்களில் செய்த ஊழல்களும் திரு. கில்மன் சுட்டிக் காட்டிய குறைபாடுகளும் ஏற்படுத்தும் தீமைகளைப் பற்றி ஆராய எம். சி. அப்துர்ரஹ்மானின் தலைமையில் முஸ்லிம் பிரமுகர்களும் அறிஞர்களும் கூடி ஆராய்ந்து, முஸ்லிம் விவாக வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று அரசைக் கோரினர். இதனால் சட்ட நிருபண சபையில் உறுப்பினராக இருந்த முத்துக்குமார சுவாமி ஒரு பிரேரணையை 1871 இல் முன்வைத்தார். முஸ்லிம்களின் சமயச் சட்டங்களிலும் மரபுகளிலும் அரசு தலையிடுகிறது என்ற விமர்சனத்தை எதிர்கொள்ள விரும்பாததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரேரணையை அரசு அங்கீகரிக்கவில்லை. இதனால் விவாகப்பதிவிலும் அப்பதிவுகளைப் பேணிப்பாதுகாப்பதிலும் ஒழுங்கீனங்கள் தொடர்ந்து நீடித்தன. இதனால் பல முஸ்லிம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

எம். சி. சித்திலெப்பையின் தலைமையில் இயங்கிய சீர்திருத்தச் சிந்தனையையுடைய படித்த வர்க்கத்தினர் இச்சூழலை நன்கு விளங்கி, 1884 ஏப்பிரல் மாதம் 05 ஆம் திகதி கண்டியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் கூடினர். இப்பிரச்சினை பற்றிக் கலந்துரையாடி, அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்து, செயல்படத் தீர்மானித்தனர். பின்வரும் தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்றினர் :

> "கடுத்தங்களை எழுதுவதற்கு கதீபுமார்களுக்கு கவன்மென்றாரால் தத்துவம் கொடுக்க வேண்டும். அப்படித் தத்துவம் பெறாதவர்கள் கடுத்தம் எழுதக் கூடாது என்றும், கடுத்தங்களை இரண்டு பிரதிகளாய் எழுதி ஒரு பிரதியை கதீபு வசம் வைத்துக்கொள்ளவும், மற்றப் பிரதியை கச்சேரிக்கு அல்லது றெஜிஸ்டர் ஜெனரலுக்கு மாதாந்தம் அனுப்ப வேண்டும். அதற்கு ஒரு சட்டம் உண்டாக்கும் படி கவமென்றாரைக் கேட்க வேண்டும் என்றும், இக்காரியத்தை சித்திலெப்பை மரைக்கார் முகம்மது காசிம் மரைக்கார் கவன்மென்றாருக்கு எழுத வேண்டும்"
>
> (முஸ்லிம் நேசன் 1885.09.08)

விவாகப் பதிவுகள் ஒழுங்குற மேற்கொள்ளப்படாததால் ஏற்படுகின்ற விளைவுகளை சித்திலெப்பை தான் வெளியிட்ட முஸ்லிம் நேசன் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தினார். விவாகப் பதிவின் தேவையை வலியுறுத்தினார். அதன் மூலம் பொதுமக்களையும் விழிப்படையச்செய்தார். அதனால் இக்கோரிக்கையில் அவர்களும் பங்குகொண்டனர். எம். சி. சித்திலெப்பையும் படித்த முஸ்லிம்களும் குரல் கொடுத்ததைத் தொடர்ந்து, முஸ்லிம் விவாகப்பதிவு பற்றிய சட்ட நகல் ஒன்றை அரசு 1885 இல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தது. 'விவாகப் பதிவை நிருபிக்கத் தேவைப்படுமிடத்து இச்சட்டத்துக்கு இயையப் பதியப்பட்ட பதிவை மட்டுமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், இது அல்லாத பிற பதிவுகளை அங்கீகரிப்பதில்லை என்று இந்நகல் மசோதா விதந்துரைத்தது.

1885 இல் அரசு முன்வைத்த இந்த நகல் மசோதாவில் இருந்த குறைகளை எம். சி. சித்திலெப்பை சுட்டிக்காட்டியுள்ளார். இம்மசோதாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகம் செய்ய விரும்புபவர் பெண்ணின் தாய் தகப்பனிடம் அனுமதி கோரவேண்டும் என்றிருப்பதைச் சுட்டிக்காட்டி, தாயிடம் அனுமதி கேட்பது அவசியமற்றது என்றும், தாய், தந்தையில்லை என்றால் பாதுகாவலரிடம் அனுமதி கோர வேண்டும் என்று குறித்திருப்பது பிழை என்றும், தந்தைக்குப் பின் உரித்துடைய அடுத்த வலியிடம் அனுமதி கோர வேண்டும் என்று திருத்த வேண்டும் என்றும், குறைந்தபட்ச மஹர் 19 ½ களஞ்சி என்று குறித்துள்ளது பிழை என்றும், விவாகப் பதிவு ஏட்டில் வலிகாரனின் பெயர் இடம்பெற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். (முஸ்லிம் நேசன் 1885 ஐப்பசி 29) சரிஆத் துறையில் அவருக்கு இருந்த ஆழ்ந்த புலமையை அவரது இவ்விமர்சனம் அழகாகக் காட்டுகிறது.

இந்நகல் மசோதாவை படித்த வர்க்கத்தினர் ஆதரித்தபோதும் முஸ்லிம் சமூகத்தில் ஒரு சாரார் கடுமையாக எதிர்த்தனர். விவாகத்தை நிறுவும் சாட்சியாக இம்மசோதாவுக்கு ஏற்பப் பதியப்பட்ட பதிவுச்சான்றிதழை மட்டுமே ஏற்கவேண்டும் என்ற விதியை குறிப்பாக எதிர்த்தனர். இவர்கள் அப்போதைய சட்ட நிரூபண சபையின் உறுப்பினராக இருந்த சேர். பொன். இராமநாதனை சந்தித்துத் தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர். இதனால் அவர் இம்மசோதா பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது விவாகப்பதிவைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தினார். இம்மசோதா மார்க்கச் சட்டத்தில் தலையிடுவதாக அமைவதால் குறித்த விதிகளைத் திருத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (Ceylon Legislative Council Debates. Session 85/86 P. 30) இம்மசோதாவின் விவாதத்தின்போது மேல்மாகாண அதிபர், விவாகப்பதிவை மட்டுமன்றி விவாகரத்தையும் பதிவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும் என்று ஆதரித்துப் பேசினார். தான் இதுபற்றி அறபி பாச்சாவுடன் கலந்துரையாடியதாகவும். அறபு நாடுகளில் விவாகம் பதியப்படுகிறது என்று அவர் சுட்டிக் காட்டியதாகவும், விவாகப்பதிவை அறபி பாச்சா ஆதரித்தார் என்றும் அவர் குறிப்பிட்டார். இம்மசோதாவில் உள்ள குறைபாடுகளைக் கேட்டறிய உப தேசாதிபதி உட்பட ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவின் முன் துருக்கியின் கௌன்சிலராகக் கடமையாற்றிய அவுதக் கண்டு மரைக்கார் உட்பட சிலர் விவாகப்பதிவை வற்புறுத்தும் நியதியைக் கைவிடுமாறு கேட்டனர். எம். சி. சித்திலெப்பையும் ஆதரவாளர்களும் விவாகப்பதிவை வலியுறுத்துவதற்கு சார்பாக சாட்சியமளித்தனர். 177 முஸ்லிம்கள் கையொப்பம் இட்ட ஒரு மகஜரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியில் இருந்தும், 133 முஸ்லிம்கள் கையொப்பம் இட்ட ஒரு மகஜரை காலியில் இருந்தும் கட்டாய விவாகப் பதிவுக்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுத்து தேசாதிபதிக்கு அனுப்பி வைத்தனர். எனினும் ஈற்றில் விவாகப் பதிவு விருப்புக்குரிய செயல் என்று திருத்தப்பட்டே மசோதா நிறைவேறியது. இதனால் எந்த நோக்கத்தை நிறைவேற்ற இம்மசோதா கொண்டுவரப்பட்டதோ அந்நோக்கம் இத்திருத்தத்தின் காரணமாக நிறைவேறவில்லை.

கண்டி மீராமகாம் மஸ்ஜிதில் கதிபாகக் கடமையாற்றிய செய்யது முகம்மது லெப்பை ஆலிம் விவாகப்பதிவை எதிர்த்து ஒரு 'பத்வா'வை தனது பெயரில் வெளியிட்டார். அதில் விவாகப் பதிவுச்சட்டம் ஒரு 'பித்அத்' என்றும் அதனைப் பின்பற்றுவோர் காபிர் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த பத்வாவில் மார்க்க அறிஞர்கள் பத்வாக்களை எழுதும் மரபு பேணப்படவில்லை என்றும் தனது பெயரைத் தானும் அறபு மொழி மரபுக்கியைபாகவோ, இலக்கணப் பிழைகள் இன்றியோ எழுதத் தெரியாதவர் என்றும் அந்த பத்வாவில் இருந்தே ஆதாரங்களை எடுத்துக்காட்டி எம். சி. சித்திலெப்பை இந்த பத்வாவை விமர்சித்தார். (முஸ்லிம் நேசன் 1892.03.11)

இம்மசோதா விவாகப் பதிவை கட்டாயப்படுத்தாது விட்டதால் விவாகப் பதிவை மக்கள் புறக்கணித்தனர். இதனால் முன்பு நிலவிய ஊழல்கள் தொடர்ந்தும் விவாக வாழ்விலும் கடுத்தப் பதிவுகளிலும் நிகழ்ந்தன. இதுபற்றி காலி மாகாணப் பதிவாளர் 1907 மார்ச் மாதத்தில் சுலைமான் லெப்பை நைனா மரைக்கார் ஹாஜியாருக்கு எழுதிய கடிதத்தில் ஒழுங்கான விவாகப் பதிவின்மையால் ஏற்பட்டுள்ள பல விபரீதங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**அவர் சுட்டிக்காட்டிய குறைகள் பின்வருவனவாகும்:**

I. கள்ளக் கடுத்தங்கள் காரணமாக நூற்றுக்கணக்கான வழக்குகள் கல்முனை நீதிமன்றத்தில் செலவு கேட்டுக் கொண்டுவரப்பட்டுள்ளன.

II. போலி லெப்பைகள் விவாகத்தை நடத்தியுள்ள மையையும் அதன் விளைவாக கர்ப்பிணித் தாய்மார்கள் கைவிடப்பட்டுச் சென்றுள்ளமையும் அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. கடுத்தங்களில் லெப்பைமார் ஊழல்கள் செய்துள்ளதால் சொத்துப்பிரச்சினைகள் புத்தளம் மாவட்டத்தில் அதிகமாக உள்ளன.

இதனால் சித்திலெப்பையின் அடிச்சுவட்டில் சென்ற ஐ. எல். எம். ஏ. அஸீஸ் உட்பட முஸ்லிம் சமூகத்தின் படித்த வர்க்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, விவாகப்பதிவைக் கட்டாயப்படுத்துமாறு மீண்டும் வற்புறுத்தினர். சித்திலெப்பை ஆரம்பித்து வைத்த இக்கோரிக்கை 1928 இல் நியமிக்கப்பட்ட அக்பர் குழுவின் சிபாரிசுடன் தான் 1935 முதல் நடைமுறைக்கு வந்தது.

## சமய, சமூக சீர்த்திருத்த முயற்சிகள்

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப காலத்தில் அறபு நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்த அறிஞர்களின் போதனைகள், அவர்கள் எழுதிய நூல்கள் என்பனவூடாகவே சமயக் கல்வியையும் சமயப் பாரம்பரியங்களையும் அறிந்து கொண்டனர். ஐரோப்பியர் வருகையுடன் இவ்வாய்ப்பு அற்றுப் போனதால் அயலில் இருந்த தென் இந்திய நாட்டு முஸ்லிம்களுடனான கலாசார உறவு வலுவடைந்தது. தென் இந்தியாவுக்கு மிக அயலில் இலங்கை இருந்ததாலும், தென் இந்திய முஸ்லிம்கள் இலங்கையில் விவாக உறவு கொண்டிருந்ததாலும், அவர்களிடையேயான வர்த்தக உறவு வலுவுற்றிருந்ததாலும் கலாசார ரீதியான உறவு வலுவடைந்தது. அதனால் இலங்கை முஸ்லிம்கள் தென் இந்திய இஸ்லாமியக் கலாசாரத்தின் தாக்கத்துக்குள்ளாயினர். இவ்வாய்ப்பை இந்தியாவில் இருந்து வந்த சில போலிகள் தமது உழைப்புக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதால், சில மூட நம்பிக்கைகளும் சடங்குகளும் இலங்கை முஸ்லிம்களிடம் புகுந்து கொண்டன. இவற்றைக் களைந்து, இலங்கை முஸ்லிம் சமூகத்தை மேநிலைப்படுத்த எம். சி. சித்திலெப்பை விரும்பினார். அதற்காக அவர் முஸ்லிம் நேசனை நன்கு பயன்படுத்திக் கொண்டார். அதிசயமான வேடிக்கை எனும் தலைப்பில் முஸ்லிம் நேசனின் 1886.02.25 ஆம் திகதி வெளியீட்டில் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "..... நூல் கட்டுகிறது, மடை எடுக்கிறது, எலுமிச்சம் பழம் தறிக்கிறது ஆகிய செயல்களில் பயன் இருக்கிறதா அல்லது இவைகள் வீண் வேலைகளா? ....... ஒருவனுக்கு நோய் உண்டானால் பயந்திருக்கின்றான், பிசாசின் பார்வை வீழுந்திருக்கிறது, மந்திரிக்க வேண்டும், நூல் கட்டவேண்டும் என்றிவ்விதம் நோய்க்குத் தேவையான வைத்தியம் செய்ய விடாமல், அனியாயம் செய்கிறார்கள். ... இந்த வீண் காரியங்களை பிரியமுள்ள மடையர்கள் செய்து கொள்கிறார்கள் என்று விட்டு விடலாம். அதனால் பொருள் சேதம், சுகச்சேதமாகிறதல்லாமல் ஈமானுக்கும் சேதம் உண்டாகிறது......" ((மு.நே. 1886.02.25)

சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகளை இவ்வாறு சுட்டிக் காட்டியதுடன் சீதனம் எடுக்கும் தீய பழக்கத்தையும் சாடியுள்ளார்.

> "மாமன் மாமியிடம் சீதனம் வாங்கிக் கட்டி உண்ணவும் உல்லாச நடை நடக்கவும் எண்ணுவதைப் போல ஓர் வெட்கமான எண்ணம் வேறொன்றுமில்லை" (முஸ்லிம் நேசன் 1886.08.15)

குழந்தையின் பிறப்பு, விவாகம், மரணம் முதலாம் நிகழ்ச்சிகள், நோய் நொடிகள் போன்ற எல்லா நிகழ்வுகளிலும் இஸ்லாத்துக்கு ஒவ்வாத தீய பழக்கங்களும் மூடநம்பிக்கைகளும் முஸ்லிம் சமூகத்தில் நிலவின. அவற்றை எல்லாம் சுட்டிக் காட்டி சீர்திருத்த முயற்சித்தார். இத்தகைய ஒரு பணியை தனிமையாகச் செய்வது போதிய பயன் தராது என்று கருதியதால், ஜம்இய்யத்துல் இஸ்லாமிய்யா எனும் பெயரில் உலமாக்களும் பிரமுகர்களும் அடங்கிய ஒரு சபையை 1886 பெப்ரவரி மாதம் அமைத்தார். இதன் காரியதரிசியாக ஐ. எம். எம். ஏ. அஸீஸ் அவர்கள் பணியாற்றினார்கள். (இவ்வியக்கத்தின் பணிகள் பற்றி இந்நூலின் **37** ஆம் பக்கத்தில் பார்க்கவும்)

இக்காலப்பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் பொதுவாக வணக்க வழிபாடுகளிலும் ஆர்வம் காட்டவில்லை என்பதை எம். சி. சித்திலெப்பை அறிந்திருந்தார். வணக்க வழிபாடுகளும் வெறும் சடங்காகவே இருந்தன. ஜும்ஆவுக்கு, பெருநாள் தொழுகைக்கு வந்து தொழுதால் போதும் என்ற மனோநிலை அவர்களிடம் இருந்தது. முஸ்லிம் நேசனின் பின்வரும் கூற்று பிரமுகர்கள் சிலர் தானும் தொழுகையில் ஆர்வம் காட்டவில்லை என்பதைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறபி பாச்சாவின் விருந்துக்கு கொழும்பு சோனகர் சிலரும் அழைக்கப்பட்டிருந்தனர். பகல் தொழுகை நேரமானதும் அறபி பாச்சா தொழச் சென்றதால் பெருநாளைக்குத் தானும் தொழப் போகாத சிலர் வுழு எடுக்கவும் தொழவும் மிகவும் கஷ்டப்பட்டனர்." (முஸ்லிம் நேசன் 1892.02.10)

தொழுகை போன்ற இபாதத்களில் ஈடுபட்ட சிலரும் அல்லாஹ்வின் திருப்தியை நாடித் தொழுபவர்களாக அல்லாது அதனை ஒரு சடங்காகவே நிறைவேற்றினார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார். தொழுகையின் ஓதல்கள் அறபு மொழியில் உள்ளன. அறபு மொழியிலான ஓதலின் பொருள் விளங்காது தொழுகையில் ஓதுவதால் தொழுகை உயிரோட்டமில்லாது உளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குர்ஆனை ஓதும் போது கிளிப்பிள்ளைகள் போல ஓதாது குர்ஆனின் ஏவல் விலக்கலை அறிந்து அதன்படி செயற்பட முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகளை இளமை முதல் இஸ்லாமிய வழியில் பயிற்றுவிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, பிள்ளைகளை வளர்க்கும் போது பேண வேண்டிய சில வழிமுறைகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். சமூகச் சீர்திருத்தம் குடும்பங்களின் நல்வாழ்வில் தங்கியுள்ளது என்று அவர் சிந்தித்தார். அதன் காரணமாகவே கல்வி, தொழில், ஆன்மீகம் முதலாம் பல துறைகளில் முஸ்லிம் குடும்பங்களை மேம்படுத்தி சமூக முன்னேற்றத்துக்கு அடிகோல நினைத்துள்ளார்.

இலங்கை முஸ்லிம் சமூகம் பல்வேறு துறைகளிலும் முன்னேற வேண்டும் என்றுழைத்த ஒரு முன்னோடி இவர் என்பதாக அறிஞர்கள் மட்டுமன்றி, இந்நாட்டின் அரசும் உணர்ந்து அவரது ஞாபகர்த்தமாக 1977.06.11 ஆம் திகதி ஒரு முத்திரையை வெளியிட்டு கௌரவித்தமை சுட்டிக்காட்டத் தக்கது.

(மேலதிக விபரங்களுக்காக இந்நூலாசிரியர் எழுதிய "இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர் சித்தி லெப்பை", "இலங்கை முஸ்லிம்களில் வரலாறும் கலாசாரமும் 1870 - 1915" எனும் இரு நூல்களையும் வாசிக்கவும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்

(1867 - 1915)

இலங்கையில் வாழ்கின்ற பௌத்த, இந்து முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அநகாரிக தர்மபால (கி.பி. 1864 - 1933), ஆறுமுகநாவலர் (கி.பி. 1822 - 1879), சித்திலெப்பை (கி.பி 1838 - 1898) ஆகியோர் முறையே பௌத்த, இந்து, முஸ்லிம், சமூகத்தவரிடையே சீர்திருத்த முயற்சிகளை இக்காலப் பகுதியில் முன்னெடுத்துச் சென்றனர்.

சமய சூழலில் நவீன கல்வியை வழங்குதல், சமய சமூக சீர்திருத்தம் எனும் துறைகளில் சித்திலெப்பை மேற்கொண்ட முயற்சிகளை, சமூகத் தலைமைத்துவத்தை அடையும் அபிலாசையுடன் செயற்பட்டவர்கள், ஆழமான அறிவில்லாத சமய குரவர்கள், மரபுரீதியான சிந்தனைப்போக்குடையவர்கள் என்போர் கடுமையாக எதிர்த்த போதும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த முற்போக்குச் சிந்தனையுடையோர் சிலர் ஆதரித்தனர். இவர்களுள் ஐதுருஸ் லெவ்வை மரைக்கார் அப்துல் அஸீஸ் என்பவர் குறிப்பிடத்தக்கவராவார்.

சித்திலெப்பையின் வாரிசாகச் செயற்பட்ட ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் 1867.10.27 ஆம் திகதி கொழும்பில் புகழ்பெற்ற ஒரு முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தார். அவரது பாட்டன் உதுமாலெப்பை மரைக்கார் சேகு அப்துல் காதிர் மரைக்கார் என்பவராவார். இவரே சேகாதி மரைக்கார் என்றழைக்கப்பட்டார். ஆங்கிலேய கவர்னர் சேர். றொபட் பிறவுன்றிக் என்பவர் 1818.06.16 ஆம் திகதியன்று கொழும்பு முஸ்லிம்களின் தலைவர், (Head Moor Man) ஆக இவரை நியமித்தார். கவர்னர் சேர் எட்வர்ட் பான்ஸ் இவரை 1825 மார்ச் மாதத்தில் நொத்தாரிஸ் ஆகவும் நியமித்தார். அஸீஸின் தந்தை ஐதுரூஸ் லெவ்வை மரைக்கார் சிறாப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காசாளர்) எனும் அரச உத்தியோகப் பதவியினை வகித்தார். குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் 1879 இல் அவர் நியமிக்கப்பட்டார். மேற்குறித்தவாறான அரச உத்தியோகங்களை வகித்து சமூக முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த ஒரு குடும்பத்தில் பிறந்த அஸீஸ் தன் தந்தையிடமே அல்குர்ஆனையும், ஆரம்பத் தமிழ் அறிவையும் கற்றார். பத்தாவது வயதில் ஆங்கிலம் கற்பதற்காக தனியார் பாடசாலை ஒன்றுக்கு அனுப்பப்பட்டார். அதன்பின் புறக்கோட்டையில் இருந்த அரசாங்க ஆண்கள் பாடசாலையில் சேர்ந்து ஆறாம் வகுப்புவரை கல்வி பயின்றார். பிற்காலத்தில் சுயமாக முயற்சித்தே ஆங்கில, தமிழ் மொழி ஆற்றலை அவர் பெருக்கிக் கொண்டார்.

ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் வாலிபப் பருவத்தில் (1880 களில்) இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பல முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றன. சமயப் பின்னணியிலான முஸ்லிம் பாடசாலைகளின் தோற்றம், முஸ்லிம் விவாகப் பதிவுச் சட்டம், இலங்கை முஸ்லிம்களிடையே பெரும் பரபரப்பைத் தோற்றுவித்த "இலங்கைச் சோனகர்கள் இனத்தால் தமிழர்கள் மதத்தால் முகம்மதியர்கள்" என்ற பொன். இராமநாதனின் கருத்து, எகிப்திய சுதந்திரப் போராட்ட வீரரான அறபி பாச்சாவுக்கும் அவரது நண்பர்களுக்கும் கொழும்பு முஸ்லிம்கள் கொடுத்த வரவேற்பு என்பன அவற்றுள் முக்கியமானவையாகும்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மிக முக்கிய தடயங்களைப் பதித்த இந்நிகழ்வுகள் அனைத்தும் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் தாக்கங்களை ஏற்படுத்தின. இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட எம்.சி.. சித்திலெப்பை 1884 - 1887 காலப்பகுதியில் கொழும்பில் குடியேறி வாழ்ந்தமை ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் வாழ்வை சமூக சீர்திருத்தப் பணிகளில் ஆர்வம் கொள்ளச் செய்தற்குப் பெரும் தூண்டுகோலாகியது. அடிக்கடி சித்திலெப்பையை சந்தித்து உரையாடக் கிடைத்தமையும் அவருடன் சேர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தமையும் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் துடிப்புள்ள ஒரு இளைஞராக பரிணமிக்கப் பெரிதும் உதவின. இத்தொடரில்தான் சித்திலெப்பை விட்டுச் சென்ற பணிகளை அவர் தொடர்ந்து மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சி, சமூக மேம்பாடு என்பனவற்றிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் தனது நாற்பத்தெட்டாவது வயதில் 1915.09.15 ஆம் திகதி இறையடியெய்தினார். அவரது உடல் மருதானை ஜும்ஆ மஸ்ஜித் வளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. முக்கிய முஸ்லிம் பிரமுகர்கள் உட்படப் பெருந்திரளான மக்கள் அவரது நல்லடக்கத்தில் கலந்து கொண்டனர். அவரது மரணச் செய்தியை உள்நாட்டுப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. அவரது வாழ்க்கை வரலாற்றையும் அவரது நல்லடக்கத்தில் பங்கு கொண்ட முக்கிய பிரமுகர்களின் பெயர்களையும் அவை பிரசுரித்திருநதன. (The Times of Ceylon 1915/09/13 The Ceylon morning Leader 1915-09-15)

## ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா

ஐ.எம்.எல்.ஏ. அஸீஸின் ஆரம்பகால சமூகப் பணிகளை எம்.சீ. சித்திலெப்பையுடன் இணைந்து நிறைவேற்றிய பணிகளாகவே இனங்காண முடிகிறது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் எட்டாம் தசாப்தத்தில் கொழும்பு முஸ்லிம்கள் பல குழுக்களாகப் பிரிந்திருந்தனர். ஒரு குழுவினர், மறு குழுவினரை எதிர்த்துச் செயற்பட்டனர். இந்நிலை சமூகத்திற்கு நன்மை விளைவிக்கும் பொதுப்பணிகளை நிறைவேற்றுவதற்குப் பேரிடைஞ்சல் ஆகியது. இத்தகையோரிடையே சமூக விழிப்புணர்ச்சியையும் சீர்திருத்தத்தையும் தனி ஒருவனாக நின்று ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்று எம்.சீ. சித்திலெப்பை உணர்ந்தார். அதனால் அப்பணிகளை நிறைவேற்ற ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா என்றதோர் இயக்கத்தை அவர் 1886 இல் கொழும்பில் தோற்றுவித்தார். இவ்வியக்கத்தின் காரியதரிசிப் பொறுப்பு இருபது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த ஐ.எல்.எம்.எ. அஸீஸிடம் ஒப்புவிக்கப்பட்டது. இது இளைஞர் அஸீஸுக்கு எம்.சீ. சித்திலெப்பையுடன் இணைந்து பொதுப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பை வழங்கியது.

ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா எனும் இச்சபையூடாக பின்வரும் பணிகளை நிறைவேற்ற அதன் காரியதரிசிப் பதவியை வகித்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அதன் தலைவர் எம்.சி. சித்திலெப்பையுடன் இணைந்து கடுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தார். இச்சபை ஆற்றிய பணியைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

அ. கொழும்பு அரசாங்க வைத்தியசாலையில் இறந்த, உரிமை கோரப்படாத முஸ்லிம்களின் 'மையத்து'களை அரசு இஸ்லாமிய அனுஷ்டானங்களை நிறைவேற்றாது அடக்கம் செய்தமை முஸ்லிம்களின் உள்ளத்தைப் புண்படுத்தியமையால், அரசுடன் தொடர்பு கொண்டு அத்தகு மையத்துகளை மருதானைப் பள்ளியூடாக அடக்கம் செய்தற்கு ஏற்பாடு செய்தது.(முஸ்லிம் நேசன் 1886 - 02 - 18)

ஆ. கொழும்பில் 1886 இல் அம்மை நோய் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக முஸ்லிம் இளமகளிர் ஆண்களுடன் ஒன்றாக தடுத்து நிறுத்தப்பட்டனர். முஸ்லிம் பெண்களை ஆண்களுடன் பொது அறையில் தங்க வைப்பது மார்க்கத்துக்கு முரணானது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டி மாற்றுவழி கையாளுமாறு வற்புறுத்தியது.

(முஸ்லிம் நேசன் 1886 - 22 - 11)

இ. தண்ணீர் வரியினால் கொழும்பு மக்கள் அவதிக்குள்ளாவது பற்றிக் கலந்துரையாடி அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

ஈ. வாரந்தோறும் 'ஹதீஸ் மஜ்லிஸ்களை மஸ்ஜிதுகளில் நடாத்தி பொதுமக்களின் மார்க்க அறிவைக் வளர்க்க நடவடிக்கை எடுத்தது. வாரந்தோறும். நிகழ்த்தப்பட்ட பிரசங்கங்களைத் தொகுத்து முஸ்லிம் நேசனில் வெளியிட்டது.

(முஸ்லிம் நேசன் 1886 - 02 - 18)

(உலமாக்கள் போதிய பேச்சுப் பயிற்சி இல்லாதவர்களாக இருந்ததால் தொடர்ந்து இம்முயற்சியை மேற்கொள்வது சிரமமாகியது என்றறிய முடிகிறது.)

உ. 'மையத்து' வீடுகளில் ஸலாம் சொல்வதற்கு நாற்பது தினங்கற்கு முஸ்லிம் பெண்கள் செல்லும் வழக்கம் இருந்தது. இது மார்க்கத்துக்கு முரணானது என்பதால் 1888 - 11 - 26 ஆம் திகதி கூடிய கூட்டத்தில் பின்வரும் தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தவூரில் இக்காலத்தில் மையத்து வீடுகளுக்கு நாற்பது நாளைக்கு பெண்கள 'ஸலாம்' சொல்லப் போகிற கெட்ட வழக்கத்தை நிறுத்த வேண்டும் என்றும் மார்க்கப் பிரகாரம் மூன்று நாளைக்கதிகம் மையத்து வீடுகளில் ஸலாம் சொல்லக் கூடாது என்றும் தீர்ப்பிடப்பட்டது. (முஸ்லிம் நேசன் 1886 - 12 - 03)

ஊ. மார்க்க விதிமுறைகளை மீறி நடப்பவர்களை விசாரித்து தீர்ப்புகளை வழங்கி 'மஸ்ஜித்' நிருவாகத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தியது.

## ஸாஹிராக் கல்லூரி

எம்.சி. சித்திலெப்பையின் தலைமையில் இயங்கியவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் தோற்றுவிக்க முயற்சித்த கல்வி விழிப்புணர்ச்சி இளைஞரான ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனால் எம்.சீ. சித்திலெப்பை. ஏ.எம். வாப்பிச்சிமரைக்கார் முதலானோருடன் இணைந்து அவரும் முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்தார். முஸ்லிம்களின் கல்வி விருத்திச் சங்கத்தின் (ஜம்இய்யதுல் இத்கானுல் உலூம்) காரியதரிசியாகக் கடமையாற்றினார். இச்சங்கம் முன்நின்றே 'மத்ரஸதுஸ் ஸாஹிரா' என்று அரபி பாச்சாவால் பெயர் சூட்டப்பட்ட ஸாஹிராக் கல்லூரியை 1892 இல் தொடங்கி வைத்தது. ஸாஹிராக் கல்லூரிக்கு முகாமையாளராக விளங்கிய வாப்பிச்சி மரைக்கார் அவர்கள் வழங்கிய பின்வரும் நற்சான்றுரை ஸாஹிராவின் வளர்ச்சியில் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் வகித்த பங்கைத் தெளிவுறக் காண்பிக்கிறது.

> "இக் கைங்காரியத்தில் எனக்குத் துணிவுடன் உதவிய குழு உறுப்பினர்களுக்கு சிறப்பாக ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்களுக்கு அவர் அளித்த அறிவுரைக்காக என் மனமார்ந்த நன்றி உரித்தாகும்."

வழக்கறிஞரான ஏ.ஸி. முகம்மது என்பார் ஸாஹிராக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவொன்றில் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'இக்கல்வி நிலையத்தின் நெம்புகோலே அவர்தாம்' என்றார். (ஸாஹிர் எம்.ஸீ.எம். - நம்முன்னோர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1892 இல் தோற்றுவிக்கப்பட்ட கல்வி விருத்திச் சங்கம் அதே ஆண்டில் அல்மத்ரஸதுஸ் ஸாஹிராப் பாடசாலையை ஆரம்பித்தது. அதுமுதல் அதன் பரிபாலனத்திலும் முன்னேற்றத்திலும் அச்சங்கம் கரிசனை செலுத்தியது. அச்சங்கத்தின் காரியதரிசி ஐ.எல்.எம்.ஏ. அஸீஸும் தனாதிகாரி ஏ.எம். வாப்பிச்சி மரைக்காரும் அம்மத்ரஸாவைக் கட்டி எழுப்பக் கடுமையாக உழைத்தனர். வாப்பிச்சி மரைக்கார், தனது செல்வத்தை வாரி வழங்க, ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் தனதறிவைப் பயன்படுத்தித் திட்டமிட்டுச் செயற்பட்டார். ஸாஹிரா நிறுவப்பட்டதில் இருந்து அதன் வளர்ச்சியை அவர் மதிப்பீடு செய்தார். ஸாஹிரா ஆரம்பிக்கப்பட்ட அதே ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தாக் கல்லூரி அடைந்த வளர்ச்சியை ஸாஹிரா எட்டிப்பிடிக்கவில்லை என்பதையும், முஸ்லிம்கள் நிதியுதவி வழங்காமையே வளர்ச்சி குன்றியமைக்கான காரணி என்பதையும் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் சுட்டிக்காட்டினார். பிற சமூகப் பாடசாலையில் சேர்ந்து கல்வி பயில்வதில் முஸ்லிம் மாணவர்கள் காட்டும் அதே அளவு ஆர்வத்தை ஸாஹிராவில் சேர்வதில் காட்டவில்லை என்பதையும், ஸாஹிராவின் கல்வித் தரத்தைக் கொண்டு மக்கள் திருப்தியடையாமையே அதற்குக் காரணம் என்பதையும் அவர் அறிந்து கொண்டார். இதனால் ஸாஹிராவின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டம் ஒன்றைக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றார். அதனை அவர் பிரசுரித்த 'அல்முஸ்லிம்' எனும் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார்.

## அச்செயற்திட்டத்தில்

அ. பாடசாலையின் இடவசதியை விசாலமாக்குதல்

ஆ. மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகரித்தல்

இ. மாணவர்க்கு கைத்தொழில் பயிற்சி வழங்குதல்

ஈ. பாடசாலையின் கிளைகளை அயலில் உள்ள நகர்களில் நிறுவுதல்.

உ. பாடசாலையின் பரிபாலனத்துக்கு அவசியமான நிதியைத் திரட்டுதல்.

எனும் கருத்துக்களை முன்வைத்துள்ளார். ஸாஹிராவை நாட்டின் ஏனைய பிரபல பாடசாலைகளின் தரத்துக்கு உயர்த்துவதை இலக்காகக் கொண்டு இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் கல்வி மகாநாடு

முஸ்லிம் சமுகத்தின் கல்விப் பிரச்சினைகளிலும் அவர் அதிக அக்கறை காண்பித்தார். 'இலங்கை முஸ்லிம் கலாசங்கம்' (Ceylon Muslim Educational Conference) எனும் பெயரில் வருடாந்தக் கல்வி மாநாடொன்றை நடாத்துவதற்கு முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கத்தினூடாக அழைப்பு விடுத்தார். (அல்முஸ்லிம் 1909 - 7 - 11) மாநாடு கூட்டுவதற்புப் பொருத்தமான காலம், இடம், மாநாட்டிற்குப் பேராளர்களைத் தெரிவு செய்யும் முறை, பேராளர்களின் தகைமைகள் போன்றவற்றைப் பற்றிய அவரது கருத்துக்களை எழுதிய பின் கல்விமாநாட்டின் நோக்கம் பற்றியும் விளக்கியுள்ளார்.

"இலங்கை முஸ்லிம்களை கல்வியில் தொடர்ச்சியாக உற்சாகப்படுத்துவதற்கும், அவர்களுக்குள் கல்வியைப் பரப்பச் செய்வதற்கும்...." முயற்சிப்பது அதன் நோக்கங்களுள் ஒன்று என்று சுட்டிக் காட்டியுள்ளார். "கல்வி படிப்பதற்கு சர்வ முஸ்லிம்கட்கும் விருப்பம் இருந்தாலும், கல்வி இன்னதென்பதைக் குறித்தும், கல்வியின் மெய்யான நோக்கத்தைக் குறித்தும் எம்மவர்களுக்குத் தப்பெண்ணமும் விபரீதமும் உண்டாயிருக்கின்றன.... கல்வி இன்னதென்றும் அதன் நோக்கம் இன்னதென்றும் விளங்கிக் கொண்டவர்களே கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வழியை அறிந்து கொள்வார். இலங்கை முஸ்லிம்களில் உள்ள உலமாக்களும் வேறு கற்றவர்களும் தம் சாகியத்தாரின் கல்வி விசயத்தை சகோதரத் தன்மையோடும் மனத்தாராளத்தோடும் காலத்துக்குக் காலம் ஆலோசித்தற்கு உதவியாயிருக்கும் பொருட்டே இலங்கை முஸ்லிம் கலா சங்கத்தை வருடாந்தம் கூட்டுவதற்கு கொழும்பு முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கம் தீர்மானித்திருக்கிறது." (அல்-முஸ்லிம் 1909-7-11)

எம்.சி. சித்திலெப்பை முஸ்லிம்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியை அழியாது காத்தற்கு தொடர்ந்து பல வழிகளிலும் முயற்சித்தல் வேண்டும். காலத்துக்குக் காலம் எழும் கல்விப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். சமயத்துறை அறிஞர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய துறை அறிஞர்களும் இதிற் பங்கு கொள்தல் வேண்டும்; கல்வி பற்றிய சிந்தனைப்பாங்குகளை சமூகத்திற்குத் தெளிவாக விளங்கச் செய்தல் வேண்டும் என்று ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அங்கு விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆங்கிலம் கற்பதன் அவசியம்

ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் காலத்தில் முஸ்லிம் சிறார்கள் ஆங்கிலக் கல்வியூட்டும் பாடசாலைகளுக்கு அனுப்பப் படாமைக்கான காரணம் மதமாற்ற அச்சம் ஆகும். இவ்வச்சத்தைப் போக்காதவரை ஆங்கிலக் கல்வியைப் பெற முஸ்லிம் மாணவர்களை ஊக்குவிப்பது சாத்தியம் இல்லை என்பதை ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் நன்குணர்ந்திருந்தார். ஆதலால் ஆங்கிலக் கல்வி படிப்பது பற்றிய முஸ்லிம் சமூகத்தின் சிந்தனைப் பாங்கை மாற்றியமைக்க அவர் முயற்சித்தார்.

ஆங்கிலம் படித்த ஒரு முஸ்லிம் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினார். மற்றொரு முஸ்லிம் தன் நடையுடை பாவனைகளில் கிறிஸ்தவ நடைமுறையைப் பின்பற்றினார். இதனால் முஸ்லிம் சமூகம் ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்தது. இந்நிகழ்வு முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் உறக்க நிலையைத் தோற்றுவித்திருந்தது. இந்நிலையிலிருந்து மீட்சி பெறச் செய்தற்கே எம்.சி. சித்திலெப்பை சமயச் சூழலில் நவீன கல்வியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். இருந்தபோதும் அவரது மரணத்துக்கு பின்புதானும் இவ்வச்ச நிலை முஸ்லிம்களிடமிருந்து நீங்கியிருக்கவில்லை. அதனால்தான் சித்திலெப்பை இறந்து பத்து வருடங்களின் பின்பு ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் பினவருமாறு எழுதினார்.

“இங்கிலிஷில் கிறிஸ்து மார்க்க நூல்களிருப்பதால் அப்பாஷையை முஸ்லிம்கள் படிக்கக் கூடாதாயின், அறபு, தமிழ் முதலிய பாஷைகளிலும் அந்நூற்களிருப்பதால் அவற்றைப் படிப்பதும் விலக்காகும். ஆதலின் அதைத் தள்ளிவிட வேண்டும். முஸ்லிம்கள் கிறிஸ்து மார்க்கமுள்ள பாஷைகளைப் படிப்பது மட்டுமல்ல அம்மார்க்க நூற்களையும் வாசித்திருக்க வேண்டும். (அல் முஸ்லிம் 1909-05-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மொழியில் கிறிஸ்தவ வேத நூல்கள் இருப்பதற்காக ஆங்கிலத்தைக் கற்பதைத் தவிர்ப்பது அறியாமை என்றும், தற்போது பைபில் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அதற்காகத் தமிழையோ, கிறிஸ்தவம் பற்றிய நூல்கள் அறபு மொழியில் இருப்பதால் அறபையோ படியாதிருப்பதில்லை என்று எடுத்துக்காட்டி, மதமாற்றத்திற்குப் பயந்து ஆங்கிலம் படியாதிருப்பது தவறு என்று சுட்டிக்காட்டியுள்ளார். அஃதன்றி ஆங்கில மொழியைக் கற்பதன் அவசியத்தையும் பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

அ. நீண்ட காலமாக முஸ்லிம் சமூகம் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ள போதும், தற்போதுள்ள அரசியல், வர்த்தக சூழல் காரணமாக இலாபம் தரத்தக்கதான வர்த்தகத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஆங்கில மொழி அவசியம் .

ஆ. இந்நாட்டின் சட்டங்கள் ஆங்கில மொழியில் இயற்றப்படுகின்றன. அவற்றால் ஏற்படும் நலன்களை அறிந்து கொள்ளவும், அவற்றால் சமூகத்திற்கு தீமைகள் ஏற்படின் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும் ஆங்கில அறிவு அவசியமானதாகும்.

இ. நவீன விஞ்ஞான, மருத்துவ, பொறியியல், வரைபடவியல் சார்ந்த கலைகள் ஆங்கில மொழியிலே போதிக்கப்படுகின்றன. இவை மனிதனின் உலகியல் நலன்களுக்கு மிக அவசியமான கலைகளாகும். அவற்றைக் கற்க ஆங்கில அறிவு அவசியமாகிறது.

ஈ. அரச உத்தியோகங்கள் ஆங்கில மொழியறிவுடையோருக்கே வழங்கப்படுகின்றன. சம்பளம் பெறும் உத்தியோகங்கள் மட்டுமன்றி கண்ணியத்திற்குரிய பதவிகளும் ஆங்கில மொழி அறிவுடையோருக்கே வழங்கப்படுகின்றன.

ஆங்கில மொழியறிவின் அவசியத்தைப்பற்றி எடுத்துக்காட்டியதுடன் திருப்தியடைாது அம்மொழியைப் புறக்கணித்த மக்கள் சமய மொழியாகிய அறபு மொழியையாவது கற்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதையும் கவலையுடன் எடுத்துக்காட்டியுள்ளார். (அல்முஸ்லிம் 1909 -6 - 15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் துறையில் முஸ்லிம் சமூகத்தின் பின்தங்கிய நிலையை எடுத்துக்காட்ட அம்மொழியைப் புறக்கணித்த மக்கள் சமய மொழியாகிய அறபு மொழியையாவது கற்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதையும் கவலையுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

கல்வித் துறையில் முஸ்லிம் சமூகத்தின் பின்தங்கிய நிலையை எடுத்துக்காட்ட, ஏனைய சமூகங்களின் கல்வி நிலையுடன் தமது சமூகத்தின் கல்வி நிலையை ஒப்பு நோக்கிக் காண்பித்து பின்வருமாறு எழுதியுள்ளார்.

"அவர்களின் பொருளுதவியைக் கொண்டு இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற மிஷன் பாடசாலைகள் பல. இவற்றுள் அமெரிக்கன் மிஷனுக்கு 128 பாடசாலைகளும் பப்றிஸ்து மிஷனுக்கு 25 பாடசாலைகளும், சர்ச்ஒப் இங்கிலாந்துக்கு 348 பாடசாலைகளும், வெஸ்லியன் மிஷனுக்கு 337 பாடசாலைகளும் இருக்கின்றன. இவற்றில் இலட்சக்கணக்கான மாணவர்கள் படிக்கிறார்கள். ஆகிலும் உண்மையாகிறது இலங்கை முழுவதிலும் ஆறு முஸ்லிம் பாடசாலைகள் மாத்திரமே இருக்கின்றனவென்பதுவே. இவற்றுள் மத்ரஸதுஸ் ஸாஹிரா மாத்திரமே உயர்தரப் பாடசாலை. மற்றவைகள் மூலப் பாடசாலைகளே. மேற்படி மத்ரஸாதானும் ஒரு காலேஜ் அல்ல. பிற மதஸ்தர்களிடமோ நூற்றுக்கணக்கான காலேஜ்கள் இருக்கின்றன. (அல்முஸ்லிம் 1909-03-01)

இலங்கையில் இருக்கின்ற மூன்று இலட்சம் முஸ்லிம்களுள் நியாயஸ்திரம் கற்ற அட்வகேட்டுகளும், புறக்டர்களும் ஏழுபேர்களே இருக்கின்றார்கள்.

(அல்முஸ்லிம் 1909 - 05 -01)

அரச உத்தியோகங்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்த முடியும். எனினும் அவற்றில் முதலாம் இரண்டாம் பிரிவுகளில் ஒரு முஸ்லிமும் இடம்பெறவில்லை. மூன்றாம் பிரிவினரான கிளார்க்குமார்களில் நான்கு அல்லது ஐந்து முஸ்லிம்களே கடமை புரிகிறார்கள் என்று சுட்டிக்காட்டி முஸ்லிம்கள் கல்வித்துறையில் கடும் முயற்சி எடுத்து முன்னேற வேண்டும் என்று மக்களைத் தூண்டியதையும் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் வரலாறு

இலங்கை முஸ்லிம்களிடையே சமூக விழிப்புணர்ச்சி ஒன்று ஏற்பட்ட இக் காலகட்டத்தில் தமது பூர்வீக வரலாற்றை உள்ளடக்கிய ஏடுகள் எதனையும் அவர்கள் தம்வசம் வைத்திருக்கவில்லை. அதனை எழுதிப் பாதுகாப்பதில் அவர்களது முன்னோர்கள் ஆர்வம் காட்டாமை அல்லது போத்துக்கீச, ஒல்லாந்த ஆட்சியாளர்களின் கெடுபிடிகளின்போது அவர்களிடம் இருந்த அத்தகு ஏடுகளை அவர்கள் இழந்துவிட்டமையே இதற்கான காரணம் எனலாம். எனினும் தம் வரலாறு பற்றிப் பரம்பரை பரம்பரையாகத் தாம் நம்பி வந்த செய்திகளை அவர்கள் வாய்மொழி மூலமாகப் பரப்பி வந்தனர். அவர்கள் தனித்துவமான ஒரு சமயத்தையும், அதனடியாகக் கட்டி எழுப்பப்பட்டிருந்த ஒரு கலாசாரத்தையும் பேணி வந்தனரேயல்லாது, இன ரீதியாகத் தம்மை அடையாளப்படுத்தத்தக்க தடயங்களைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தையேனும் உணர்ந்திருக்கவில்லை. அவர்களின் பூர்வீகம், இனம் பற்றிய கலந்துரையாடல்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கால் நூற்றாண்டுப் பகுதிவரை இடம்பெற இல்லை.

1806இல் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முஸ்லிம் விவாக, வாரிசுரிமைச் சட்டத்தை அங்கீகரித்ததன் மூலம் தமக்கென்றொரு கலாசாரத்தையுடைய தனித்துவம் கொண்ட ஓர் இனமாக முஸ்லிம்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், அவர்கள் தொடர்ந்தும் உறக்க நிலையிலேயே இருந்தனர். ஆதலால் எம்.சி.. சித்திலெப்பையும் அவரது நண்பர்களும் முஸ்லிம் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்குக் கடுமையாக உழைத்தனர். இதன் காரணமாக முஸ்லிம் விவாகப் பதிவுச் சட்ட மசோதா ஒன்று சட்ட நிரூபண சபையில் 1885இல் சமர்பிக்கப்பட்டது. இம் மசோதா கலந்துரையாடப்படும் போது, முஸ்லிம்களின் இனம் பற்றி முஸ்லிம்களின் பரம்பரை பரம்பரையான நம்பிக்கைக்கு முற்றிலும் மாற்றமானதொரு கருத்தை திரு. பொன். இராமநாதன் அச்சபையில் முன்வைத்தார். அவரது கருத்தை முஸ்லிம்களின் குரலாக ஒலித்த முஸ்லிம் நேசன் விமர்சித்தது. இவ்விமர்சனத்துக்கு முஸ்லிம் நேசன் ஊடாகவோ ஏனைய ஆங்கில மொழி மூலப்பத்திரிகைகளினூடாகவோ எதுவித பதிலையும் திரு. பொன் இராமநாதன் முன்வைக்காத போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் ஆய்வறிஞர்களின் கழகமான Royal Asiatical Society யின் இலங்கைக் கிளையில் The Ethonology of the Moors of Ceylon எனும் தலைப்பில் 1880.04.26 ஆம் திகதி ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார் இக்கட்டுரையில் 'இலங்கைச் சோனகர்கள் சமயத்தால் முகம்மதியர்களான போதும் இனத்தால் தமிழர்களே' என்ற கருத்தை முன்வைத்தார். இக்கட்டுரை உள்நாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதுடன் ஒரு சிறிய கையேடாகவும் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

முஸ்லிம்களின் சமூக சீர்திருத்தம், கல்வி வளர்ச்சி, சட்டமன்ற பிரதிநிதித்துவ உரிமை என்பவற்றுக்காகப் படித்த முஸ்லிம்கள் முயற்சித்துக் கொண்டிருந்த போது, இந்நாட்டின் ஆளும் வர்க்கத்தினரோ, பெரும்பான்மைச் சிங்களவர்களோ, முஸ்லிம்களின் 'இனம்' பற்றிச் சிந்திக்காத ஒரு நிலையில் திரு. பொன். இராமநாதன் இவ்வாய்வுக் கட்டுரையை முன்வைத்தார். இவ்வாறு அவர் முன்வைத்ததன் நோக்கம் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதி என்ற தோரணையில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமையை மறுப்பதற்கான பின்னணியை உருவாக்குவதே என்று முஸ்லிம்கள் சந்தேகிக்கலாயினர். (அமீன் எம்.ஐ.எம். இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்) இனத்தால் தமிழர்களாக இருப்பது தமது கண்ணியத்துக்கு எதுவிதக் குறைபாட்டையும் ஏற்படுத்தாத போதும், தமது பரம்பரை பற்றிக் காலாகாலமாக வைத்திருந்த நம்பிக்கைக்கு முற்றிலும் மாற்றமான ஒரு கருத்தைச் சீரணிப்பது அவர்களுக்கு சிரமமாக இருந்ததால் பொன். இராமநாதனின் கருத்தை முஸ்லிம்கள் விமர்சித்தனர்.

எம்.சி.சித்திலெப்பை அரம்பித்து வைத்த இவ்விமர்சனத்தை அவரது மரணத்தின் பின்னும் அவரது சிஷ்யரான ஐ.எல்.எம்.எ. அஸீஸ் தொடர்ந்தார். திரு. இராமநாதனின் கருத்தை வலியுறுத்த விரும்பிய மற்றும் சிலர் அக்கருத்துக்காதரவாகப் பேசவும் எழுதவும் முனைந்தனர். Ceylon Standard பத்திரிகை ஆசிரியர் 1903.04.16 ஆம் பத்திரிகையில் சட்ட நிருபண சபை பற்றி எழுதும் போதும் இராமநாதனின் கருத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதன் மொழி பெயர்ப்பை முஸ்லிம் பாதுகாவலன் பத்திரிகை பிரசுரித்துள்ளது. அது பின்வருமாறு "முகம்மதியர்கள் பிற நீங்கலானவோர் அங்கத்தவரைப் பெற்றுக் கொள்ள வேண்டியதென்ன. இலங்கையில் உள்ள குடிஜனங்களுள் முகம்மதியர்கள் அற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சியுள்ளவர்களும், அற்ப கல்வியுள்ளவர்களும், மொத்த மத வைராக்கியமுள்ளவர்களும் மெத்தப் பின்னிட்டவர்களுமே. உங்களுடைய சித்தமாயின் சாகியத்தாரின் பிரதிநிதித்துவத்தை ஸ்தாபித்துக் கொள்ளுங்கள். ஆகிலும் முகம்மதியர்களுள் அதிகப்பற்றானவர்கள் தமிழ்ச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதை தாம் ஞாபகம் பண்ணும் போது ஏன் அவர்களுடைய நயங்களைத் தமிழ் பிரதிநிதியால் பார்க்கக்கூடாது. (முஸ்லிம் பாதுகாவலன் 1903-4-24)

1889இல் சட்ட நிருபண சபையில் அங்கத்துவம் வகிக்கும் உரிமை முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட பின்பும் கூட, முஸ்லிம்களில் அதிகமானோர் தமிழ்ச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு என்று தனிப் பிரதிநிதித்துவம் அவசியமற்றது என்ற கருத்து தொடர்ந்து முன்வைக்கப்பட்டதையே இது காண்பிக்கின்றது. முஸ்லிம்கள் சந்தேகித்தது போல திரு. பொன். இராமநாதனின் இக்கருத்துக்குப் பின்னால் அரசியல் நோக்கம் ஒன்று மறைந்திருந்தது என்பதை மேற்குறித்த மேற்கோள் ஊடாக உணர முடிகிறது. முஸ்லிம்களின் இனம் பற்றிய பிரச்சினை அரசியல் உரிமையோடு பிணைக்கப்பட்டிருந்ததால் இதுபற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது அவசியமாகியது. இதனால் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ், தான் தலைமை வகித்த சோனகர் சங்கத்தில் திரு. இராமநாதனின் கருத்துப்பற்றி விமர்சன ரீதியாகப் பலமுறை உரையாற்றினார். அவ்வுரைகளை உள்ளடக்கி A Criticism of Mr. Ramanathan`s Ethnology of the Moors of Ceylon எனும் தலைப்பில் ஒரு நூலை 1907 இல் வெளியிட்டார். திரு. பொன். இராமநாதன் மொழி வரலாறு, பழக்கவழக்கம், உடலமைப்பு எனும் நான்கு அம்சங்கள் ஊடாக இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாத்தை ஏற்ற தமிழர்களே என்று நிறுவ முயற்சித்தார். இக்கருத்து பிழையானது என்பதை இந்நூலில் தர்க்க ரீதியாக எடுத்துக் காட்டி இலங்கை முஸ்லிம்களின் முன்னோர்கள் அறேபியர்களே என்ற கருத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். திரு. இராமநாதனின் கருத்தை விமர்சித்து ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் எழுதிய கட்டுரை ஒன்று ஸிலோன்டைம்ஸ் பத்திரிகையில் 1889 புரட்டாதி 12ஆம் திகதி வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கித் தொப்பிப் போராட்டம்

ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அவர்களின் ஆளுமை வெளிப்பட்ட மற்றொரு நிகழ்வு துருக்கித் தொப்பிப் போராட்ட நிகழ்ச்சியாகும். அட்வகேட் எம்.சி. அப்துல்காதர் மேற்கத்திய உடையுடனும் துருக்கித் தொப்பியுடனும் மேன்முறையீட்டு வழக்கொன்றிற்காக 1905.05.02 ஆம் திகதி உயர் நீதி மன்றத்தில் ஆஜரானார். அப்போது நீதியரசர். ஸேர்.சி.பி. லயட் நீதிமன்றத்துக்கு மரியாதை செலுத்தும் முகமாகத் தாம் அணிந்திருந்த துருக்கித் தொப்பியை அல்லது சப்பாத்துக்களைக் கழற்ற வேண்டும் என அப்துல் காதரைக் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்காது தனது எதிர்ப்பைக் காண்பிக்குமுகமாக நீதி மன்றத்தைவிட்டு அவர் வெளியேறினார். ஓய்வு நேரத்தில் நீதியரசரை சந்தித்து தனது நியாயங்களை எடுத்துக் கூறிய போதும் நீதியரசர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

துருக்கித் தொப்பி நிகழ்வு தனி மனிதர் ஒருவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியாக இருந்தபோதும், அது முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம் பேணுவது பற்றிய ஒரு பிரச்சினையாகவும் இருந்தது. தொப்பி அணிதல் சமயக் கட்டளை அல்லாத போதும், முஸ்லிம் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சின்னமாக இருந்தது. இதனால் சட்டமன்ற உறுப்பினர். அப்துல்ரகுமான் உட்பட முஸ்லிம் சமூகப் பிரமுகர்கள் நால்வர் நீதியரசரை அவரது டொரிங்டன் இல்லத்தில் 1905.06.17 ஆம் திகதி சந்தித்தனர். அக்குழுவின் பேச்சாளராக ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் பணிபுரிந்தார். நீதியரசர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளாத போதும் அவர்களது கோரிக்கைகளை எழுத்து வடிவில் உயர் நீதி மன்றத்தில் சமர்பிக்குமாறு ஆலோசனை கூறினார். அதற்கிணங்க உயர் நீதிமன்றத்துக்குத் தம் கோரிக்கையைச் சமர்ப்பித்தனர். நீதியரசர் திரு. லயட் தன் கட்டளையை மாற்ற விரும்பாததால் துருக்கித் தொப்பியுடன் நீதிமன்றத்தில் ஆஜராகும் உரிமையை மறுத்து உயர் நீதிமன்றம் 1905-09-19 ஆம் திகதி ஒரு கட்டளையைப் பிறப்பித்தது. இதனால் முஸ்லிம் பிரமுகர்கள் கொழும்பில் எஸ்.எல்.எம். நைனா மரைக்கார் வீட்டில் 1905.10.27 ஆம் திகதி கூடி ஆலோசனை செய்தனர். அங்கு முஸ்லிம் சமூக நலவுரிமையைக் காக்கும் நோக்கில் செயற்படுவதற்காக உயர்மட்ட உறுப்பினர்கள் 21 பேரை உள்ளடக்கிய துருக்கித் தொப்பிக் குழு என்று உருவாக்கப்பட்டது. (ஸாஹிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஸி.எம். - நம்முன்னோர்) அக்குழுவின் காரியதரிசியாக ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அவர்களே நியமிக்கப்பட்டார். இக்குழுவை இயங்கவைத்து, துருக்கித் தொப்பி விவாகரத்தை பொதுமக்கள் பிரச்சினையாகப் பரிணமிக்கச் செய்து, பிரிடிஷ் அரசின் கவனத்துக்குக் கொண்டு வரும் பெரும் பணியை ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் திட்டமிட்டுத் திறம்பட செயற்படுத்தினார்.

இக்காலப் பகுதியில் சிங்கள மக்களிடையேயும் அரசுக்கு எதிரான உணர்வுகள் துளிர்க்க ஆரம்பித்திருந்தன. மது ஒழிப்பு இயக்கம் அரச நடவடிக்கைகள் பற்றிய அதிருப்தியை மக்களிடையே தோற்றுவித்திருந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த படித்த சிங்கள மக்கள், சட்ட நிருபண சபையின் காலியான இடத்தை தமக்குப் பெற்றுக் கொள்ள எடுத்த முயற்சி தோல்வியடைந்தமை அரசின் மீதான வெறுப்புணர்வை அவர்களிடம் ஏற்படுத்தியிருந்தது. தொழிற்சங்க நடவடிக்கைகளும் இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வுகள் இலங்கையரிடம் தேசிய உணர்வையும் ஆங்கிலேயர் மீது அதிருப்தியையும் தோற்றுவித்திருந்தன. இத்தகையதொரு சூழலில் தான் துருக்கித் தொப்பி விவகாரம் இடம் பெற்றதால் ஆங்கில அரசுக்கு எதிராக சிங்கள சமுகத்தின் படித்த மக்களின் ஆதரவையும் திரட்டிக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இதனால் அரச நடவடிக்கைக்கு எதிராக முஸ்லிம்கள் நடத்த முயற்சித்த பொதுக் கூட்டத்தில் முஸ்லிம்களுடன் சிங்களவர்களும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. (Sameer M.A. Short Sketch of the life of I.L.M. Adul Azeez)

பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட அயல் நாடான இந்தியாவில் பல இலட்சம் முஸ்லிம்கள் பிரிடிஷ் பிரஜைகளாக இருந்தனர். துருக்கித் தொப்பிப் பிரச்சினையில் அவர்களையும் பங்கு கொள்ளச் செய்து, இலங்கை முஸ்லிம்கள் பிரச்சினை என்ற குறுகிய எல்லைக்கு அப்பால் கொண்டு சென்று, ஆங்கில அரசின் கீழ் வாழும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக இதனை அறிமுகப்படுத்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் விரும்பி, இப்போராட்டத்தில் இந்திய முஸ்லிம்களையும் பங்காளியாக்க முயற்சித்தார். இந்நோக்கில் இந்திய சட்ட அறிஞர்களில் ஒருவரும் மௌலவிப் பட்டம் பெற்றவருமான பரிஸ்டர் ரபிஉத்தீன் அஹமது அவர்களுக்கு 1905 டிசம்பர் 31 ஆம் திகதி மருதானையில் நடக்க உள்ள ஆங்கில ஆட்சியாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தை ஈர்ப்பதற்கான கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

துருக்கித் தொப்பிப் பிரச்சினை இலங்கை முஸ்லிம்களை நேரடியாகப் பாதித்ததால் அதுபற்றி அவர்களுக்கு அறிவுறுத்த விரும்பி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்திருந்த முப்பது முக்கிய நகர்களில் பிரச்சாரக் கூட்டங்களை ஒழுங்கு செய்தார். அக்கூட்டங்களில் பங்குகொண்ட மக்களிலிருந்து பேராளர்களைத் தெரிவு செய்து மருதானையில் நடக்கவுள்ள கூட்டத்துக்கான ஏற்பாடுகளையும் பிரதேச மட்டத்தில் மேற்கொண்டார். முஸ்லிம்கள் வெளியிட்ட முஸ்லிம் நேசன். இஸ்லாம் மித்திரன், முஸ்லிம் பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளில் இவ்விவகாரம் பற்றி எழுதச் செய்தார்.

இத்தகைய ஏற்பாடுகளைத் திட்டமிட்டு ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் மேற்கொண்டதால், மருதானையில் 1905.12.31 ஆம் திகதி W.M. அப்துல்றகுமானின் தலைமையில் கூடிய கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் ஒன்று கூடினர். 30 ஆயிரம் மக்கள் இக்கூட்டத்தில் திரண்டிருந்ததாக இஸ்லாம் மித்திரன் பத்திரிகை (1906-1-28 ஆம் திகதி) செய்தி வெளியிட்டுள்ளது. இக் கூட்டத்தில் பம்பாயைச் சேர்ந்த வக்கீல் ரபிஉத்தீன் உரையாற்றும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "தாம் இந்திய உயர் நீதிமன்றத்தில் , எப்பொழுதும் தலையணி அணிந்தே ஆஜரானதாகவும், அதுபற்றித் தான் ஒருபோதும் கேட்கப்படவில்லை என்றும், விக்டோரியா மகாராணியின் முன் அவரது வீட்டுக் கோயிலில் துருக்கித் தொப்பியணிந்து தோன்றியதாகவும் அவர் கூறினார். அவ்வாறிருக்க துருக்கித் தொப்பி அணிந்து நீதிமன்றத்தில் ஆஜராவது எப்படி நீதிமன்றத்தை அவமதிப்பதாக நீதியரசர் லயட் கருத முடியும் என்பது தமக்கு விளங்கவில்லை என்றும் எடுத்துரைத்தார்.
>
> (ஸாஹிர் எம்.ஸி.எம். நம்முன்னோர்)

ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ்தான் இப்பெருங் கூட்டத்தைக் கூட்டுவதற்கு அயராதுழைத்தார். அனுபவம் மிக்க வக்கீல் ஒருவரிடம் காணப்படும் திறமையுடன் தம் பக்க நியாயத்தை அவர் முன்வைத்தார். பிரிடிஷ் ஆட்சியாளரின் கவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே முன்மொழிந்தார். இத்தகு முயற்சிகள் முஸ்லிம்களின் குரலை இங்கிலாந்து வரை எட்டச் செய்தன. அதன் விளைவாக குடியேற்ற நாட்டுச் செயலாளர் முஸ்லிம்களின் மரபு ரீதியான உடையுடன் உயர் நீதிமன்றத்தில் தோன்ற அனுமதி அளித்தார். இப்போராட்டத்தை அட்வகேட் எம்.சி. அப்துல்காதர் ஆரம்பித்து வைத்த போதும் அதனை மக்கள் பிரச்சினையாகப் பரிணமிக்கச் செய்து அப்போராட்டத்தில் வெற்றி காண அயராதுழைத்தவர் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் என்பது மிகையான கூற்றல்ல.

## அஸ்றாருள் ஆலம் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கான மறுப்புரை

முஸ்லிம் சமூக முன்னேற்றம் பற்றி ஆழ்ந்து சிந்தித்துச் செயற்பட்ட எம்.சி. சித்திலெப்பை, மூட நம்பிக்கைகளைக் களைந்து, நவீன கல்வியை வழங்குவது மட்டும் முஸ்லிம்களின் நலன்களை மேம்படுத்தப் போதுமானதல்ல என்றும், அதற்காக ஒழுக்கவியல் மேம்பாட்டுடன் ஆன்மீகத்துறை எழுச்சியையும் முஸ்லிம்களிடையே ஏற்படுத்துவது அவசியம் என்றும் கருதினார். இதனால் முஸ்லிம் நேசனில் ஞானம், ஆலமிதால் போன்ற தலைப்புகளில் ஆன்மீகத் துறை அறிவை மேம்படுத்தும் கட்டுரைகளை எழுதினார். அதற்காகவே ஞானதீபம் எனும் மாதாந்த சஞ்சிகையையும் வெளியிட்டார் அவற்றிற்கெல்லாம் மணிமடி சூட்டியதுபோல தனது இறுதிக் காலப்பகுதியில் சாதாரண அறிவுடையோரும் விளங்கிக் கொள்ளத்தக்கவிதமாக "அஸ்றாறுள் ஆலம்" எனும் நூலை 1897 இல் வெளியிட்டார்.

இந்நூலில் அல்லாஹ்வைக் குறிக்க 'சத்து' எனும் தமிழ்ப்பதத்தை பிரயோகித்திருப்பதை விமர்சித்து சுதேச வைத்தியரான முகம்மது லெப்பை மரிக்கார் சித்திலெப்பைக்கு ஒரு கடிதம் எழுதினார். அப்போது அவர் கடும் நோய்வாய்ப் பட்டிருந்தபோதும் அதற்கு ஒரு பதிலை எழுதினார். அதில் திருப்தியடையாத அவ்வைத்தியர் சித்திலெப்பை இறந்த ஏழாம் நாளில் 1898.02.14 ஆம் திகதி அஸ்றாருள் ஆலத்தை விமர்சித்து தத்துவப்பரகண்டனம் எனும் நூலை வெளியிட்டார் அதில் அவரைக் காபிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குற்றம் சுமத்தினார். சித்திலெப்பை உயிருடன் இருந்தால் இத்தகைய விமர்சனங்கட்கு தயங்காமல் பதில் அளித்திருப்பார். உண்மையில் இந்நூலை வெளியிடுமுன்பே இத்தகு விமர்சனம் பற்றி அவர் சிந்தித்துள்ளார். தான் எழுதிய இந்நூலின் இறுதிப்பகுதியில் குறித்துள்ள பின்வரும் கூற்று அதனை உணர்த்துகிறது.

> பொறாமையெனும் கண்ணாடியால் பார்ப்பவர்களின் பார்வைக்கு எனது தெளிவான கருத்து மயக்கமான கருத்தாய்த் தோன்றும். ஒரு அச்சுப் பிழை தமது மார்க்கத்தை அழிக்கும் மகாப்பிழையாய் காணும் இவர்களை நான் கவனிக்க வேண்டியதில்லை
>
> (சித்திலெப்பை எம்.சி. அஸ்றாருள் ஆலம்)

மார்க்கச் சட்டதிட்டங்களில் ஆழமான அறிவுடையவர்கள் சமயத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் வழங்கும் தீர்ப்புக்கள் 'பத்வா'க்கள் எனப்பட்டன. அத்தகு பத்வாக்களுக்கு எவரது சுயநலமும் உந்துதலாக இருக்கவில்லை. சமூக மேம்பாட்டுக்கு வழிகாட்டுவதும் சமூகம் வழிதவறி பாவச் செயல்களில் விழாது தடுப்பதுமே அத்தகு பத்வாக்களின் நோக்கமாக இருந்தது. இந்நடைமுறைக்கு மாற்றமாக, இஸ்லாமிய நாகரிகத்தின் வீழ்ச்சிக் காலப்பகுதியில், சாதாரண அறிவுபடைத்த உலமாக்கள் சிலரும் 'பத்வாக்'களை வழங்கும் நடைமுறை வழக்கிற்கு வந்தது. இந்நடைமுறையைப் பின்பற்றியே இச்சுதேச வைத்தியரும் சித்திலெப்பையை ஒரு 'முர்தத்து' (மதம்மாறியவன்) என்று தனது தத்துவப்பிரகண்டனம் எனும் நூலில் 'பத்வா' (தீர்ப்பு) வழங்கியுள்ளார். அஸ்றாருள் ஆலத்தை வாசிக்கக்கூடாது என்ற ஒரு பத்வாவை முஸ்லிம் நேசனும் தனது இதழில் ஓர் அனுபந்தமாகப் பிரசுரித்தது.

சமூக மேம்பாட்டுக்காகத் தன்னை, தன் செல்வத்தை அர்ப்பணித்து இறையடி சேர்ந்த ஒருவரை அவமானப்படுத்தி அவரது உழைப்பைப் பயனற்றதாக்கும் ஒரு விமர்சனமாக இந்த பத்வா அமைந்தமை அவரது நண்பர்களதும் ஆதரவாளர்களதும் உள்ளத்தை உறுத்தியது. ஆதலால் சித்திலெப்பை முன்வைத்த கருத்துக்களை நிறுவி நியாயப்படுத்த அவர்கள் முனைந்தனர். அவர்களுள் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் குறிப்பிடத்தக்கவராவார்.

சுதேச வைத்தியர் எழுதிய தத்துவப்பரகண்டனத்தை விமர்சித்து ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் "சத்தின் ஞானார்த்தம்" தொகுதி ஒன்றை 1898



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி மாதம் வெளியிட்டார் இது சித்தி லெப்பையின் ஆதரவாளர்களை மகிழ்வித்தபோதும் மற்றும் பலரை வியப்பில் ஆழ்த்தியது. ஆதலால் சுதேச வைத்தியர் சில உலமாக்களின் துணையுடன் அஸீஸ் அவர்களைத் தரக்குறைவாக விமர்சித்து "சி தடர்பர மறுப்பு" எனும் பெயரில் ஒருவெளியீட்டை வெளியிட்டார். அத்துடன் அஸ்றாருள் ஆலத்தையும் சத்தின் ஞானார்த்தம் தொகுதி 1 எனும் நூலையும் விமர்சித்து 'தர்ஜுமது அகீதது சுல்தானுல் உலமா பிதத்பிகு அகாயிதுல் உறபா' எனும் பெயரில் நூலும் வெளிவந்தது. இதனால் சளைக்காத அஸீஸ் சத்தின் ஞானார்த்தத்தின் இரண்டாம் தொகுதியை 1898 கார்த்திகை மாதத்திலும் அதே வெளியீட்டின் மூன்றாம் தொகுதியை 1899ஆனி மாதத்திலும் வெளியிட்டார்.

இச்சிறு பிரசுரத்தை வெளியிடுவதன் நோக்கத்தை தொகுதி ஒன்றின் முகவுரையில் அதன் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய அல்லாஹுத் தஆலாவை அறியும் இல்முகளைப் பொதிந்த அஸ்றாருள் ஆலம் என்ற தவ்ஹீதுப் புத்தகத்தை வாசித்துப் பிரயோசனம் அடையும் முஸ்லிம்களின் மனதைக் குழப்புகிறதற்காக வெளியிட்ட தத்துவப்பரகண்டனம் என்ற பத்திரிகையினாலுண்டாகக் கூடிய பொல்லாங்குகளை விலக்குகிறதும், அதன் விசத்தை முஸ்லிம்களுக்கு செலுத்த விடாமற் தடுப்பதுமே இப்பதிரிகையின் நோக்கம். (அஸீஸ் ஐ.எல்.எம்.எ. சத்தின் ஞானார்த்தம்)

அஸ்றாருள் ஆலத்தை விமர்சித்த சுதேச வைத்தியர் அ.லெ.மு. முகம்மது மரைக்கார் இலக்கண வழுவின்றி எழுதவோ, தர்க்க ரீதயாகத் தன் கருத்துக்களை ஆதாரங்களுடன் முன்வைக்கவோ அறியாதவர். அவர் தனது வெளியீடுகளில் மிகவும் தரக்குறைவாக, தகுதியில்லாத வார்த்தைகளைப் பிரயோகித்து ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அவர்களைச் சாடியுள்ளார் என்பர். இச்சுதேச வைத்தியர் வெளியிட்ட தத்துவப்பரகண்டனம் எனும் நூலை வாசித்த காதிறு பாச்சா என்பவர் அந்நூல் பற்றி எழுதும் போது,

> "அதில் அவர் அந்த சத்தை மறுப்பதற்காக அநேக நியாய வழுக்களும், அடுத்தடுத்துப் பற்பல தூஷணங்களும், எழுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் முதலிய இலக்கண வழுக்களும் ஏனைய எல்லா வழுக்களும் ஒன்றும் குறையாமல் பூரணமாய் வரைந்தது மன்றி .."
என்று குறித்துள்ளார்.

(காதிறுபச்சா தத்துவப் பரகண்டன திக்காரக்கண்டனம்)

அவர் தனது நூலில் இச்சுதேச வைத்தியருக்குப் பின்வருமாறு புத்தி கூறியுள்ளார்.

"...... உமது கொள்கைக்கு விரோதமாக இருக்கும் பட்சத்தில், இந்த விசயம் இன்ன இன்ன நியாயத்தால் மார்க்கத்துக்கு விரோதப்படுகிறது என மறுத்து, அதற்கு சுருதிப் பிரமாணமும் சுலோகப் பிரமாணமும் மகாத்துமாக்களது ஆப்த வாக்கியமும் எடுத்துக் காட்டியிருப்பினன்றோ உம்மை மகா வித்துவான் என்று உலகம் மதிக்கும் ........"

(காதிறு பாச்சா தத்துவ பரகண்டன திக்காரக் கண்டனம்)

இதற்கு மாற்றமாக ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் மிகவும் நிதானமாக சித்திலெப்பையின் கருத்துக்களைச் சரிகண்டு, விபரிக்கவும் நிறுவவும் முயற்சித்திருப்பதைக் காண முடிகிறது. அஸீஸ் அவர்களின் பின்வரும் பந்தி நோக்கத்தக்கதாகும்.

"...... சத்து பற்றி முகம்மது லெப்பை மரிக்கார் நிருபிக்கத் துணிந்தது யாது, சத்தின் தன்மையா?' அன்றின் தொழில்களா? சத்தின் தொழில்களைப் பற்றியே பேசியிருக்கிறார் அன்றி இதன் உண்மையான தன்மை இன்னதென்று அவர் சொல்லவில்லை. சத்து சடப்பொருளைப் போல சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பொருள் என்றாவது வெளிப்படையாக சொல்லவில்லை. சடப்பொருள் உள்ள இடத்தில் சத்துண்டு என்று சொன்னாறேயன்றி சத்து சடப்பொருட்களுக்குக் காரணமோ சடப்பொருள் சத்துக்குக் காரணமோ என்று சொல்லவில்லை"

(அஸீஸ் ஐ.எல்.எம்.எ. சத்தின் ஞானார்த்தம்)

இப் பந்தி சுதேசவைத்தியரைப் போலன்றி திரு. அஸீஸ் அவர்கள் மிகவும் நளினமாகவும் நிதானமாகவும் தன் கருத்தை முன்வைக்கிறார். என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்றாருள் ஆலம் எனும் நூலை வாசிக்கக்கூடாது என்ற பத்வா ஒன்று முஸ்லிம் நேசன் 1900.05.06 ஆம் திகதியின் இதழில் வெளியிடப்பட்டது. அந்தப் பத்வாவுக்கான மறுப்புப் பத்திரம் ஒன்றை மிக நேர்த்தியாகத் தயாரித்து முஸ்லிம் நேசனின் அடுத்த இதழில் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் வெளியிட்டார். இதனை மறுத்து எவரும் எதிர்பத்வாக் கொடுக்கத் துணியவில்லை என்பது நோக்கத்தக்கதாகும் .

(முஸ்லிம் பாதுகாவலன் 1901-5-14)

அஸ்ராருள் ஆலம் எனும் நூலுக்கு மறுப்பாகவும் அம்மறுப்பை மறுதலிப்பதாகவும் வெளிவந்த நூல்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

1. தத்துவப் பரகண்டனம்
   அ.லெ.முகம்மது லெவ்வை மரிக்கார் - 1898
2. தத்துவப் பரகண்டனம் திக்கார தண்டணம்
   காதிறுபச்சா சாகிபு - 1898
3. சிதடர் பரமறுப்பு
   அ.ல.மு. முகம்மது லெவ்வை மரிக்கார்
4. சிதடர் மதவாய் ஆப்பு
5. அறக்கட்டை மவுலாவுக்கறிவுறுத்தல்
6. சத்தின் ஞானார்த்தம் தொகுதி I
   ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் - 1898
7. சத்தின் ஞானார்த்தம்தொகுதி II
8. சத்தின் ஞானார்த்தம்தொகுதி IIக்கான அனுபந்தம்
9. சத்தின் ஞானார்த்தம்தொகுதி III

## பத்திரிகை வெளியீடு

எம்.சி. சித்திலெப்பை சமூக வாழ்வில் பல்வேறு துறைகளில் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியையும், மறுமலர்ச்சியையும் குன்றவிடாது பாதுகாக்க வேண்டிய தேவை தொடர்ந்து நீடித்தது. சித்திலெப்பை உயிர்வாழும் போதே முஸ்லிம் நேசன் முன்வைத்த சிந்தனைப் பாங்கிற்கும் சீர்திருத்த முயற்சிகளுக்கும் முற்றிலும் முரணாகவும் மாற்றமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்ட சர்வஜன நேசன் (1886) சஞ்சிகை, பழைமைவாதத்திற்கும் மூட நம்பிக்கைகளுக்குமாக வெளிவந்த கஷ்புற்றான் அல் கல்பில் ஜான் (1890) எனும் பத்திரிகைகள் சமூக சீர்திருத்த சிந்தனைகளுக்கு முரணாக செயற்பட்டன. இஸ்லாம் மித்திரன் (1895) சமூகப் பிரச்சினைகளைக் காண்பிக்கக் கூடிய மேடையாக இருந்தபோதும், சீர்திருத்த முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் உத்வேகத்தை அதனிடம் காண முடியவில்லை. புதிய நிர்வாகத்தின் கீழ் வெளிவந்த முஸ்லிம் நேசன் கூட சீர்திருத்த முயற்சிகளை முன்போல் முன்னெடுத்தும், முதன்மை கொடுத்தும் செயற்படவில்லை. ஆதலால் நவீன கல்வியில் ஆர்வத்தை ஊட்டவும், ஆரம்பித்துள்ள பாடசாலைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் பொது மக்களைத் தொடர்ந்து ஊக்குவிப்பது அவசியமாகியது. இத்தேவையை உணர்ந்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் 'அஸ்ஸவாபு', முஸ்லிம் பாதுகாவலன் (1901), முஸ்லிம் (1909) எனும் மூன்று பத்திரிகைகளை வெளியிட்டார். அறபுத் தமிழ் பத்திரிகையான அஸ்ஸவாபு பார்வைக்குக் கிடைக்காததால் அதுபற்றிய சரியானதொரு மதிப்பீட்டை முன்வைக்க முடியவில்லை.

முஸ்லிம் பாதுகாவலனின் முதல் வெளியீட்டில் இடம்பெற்றுள்ள ஆசிரியர் தலையங்கம் அப்பத்திரிகை வெளியிடப்படுவதன் நோக்கத்தை விரிவாகக் கூறுகின்றது.

> "தமிழ்ப் பாஷையிற்றானே ஓர் தக்க பத்திரிகை லோகோபகாரங் கருதியும் எங்கள் சாதியாரின் கல்விச் சீர்திருத்தம் நாகரிகமாகியவற்றின் தேர்ச்சிக்காயும் நடத்துவது உத்தமம் என்று எமதரிய நேயர்களில் சிலர் எமக்குப் புத்தி கூறியதால் அவர்களின் கருத்தை அங்கீகரித்து இப்பத்திரிகையை நடத்த ஆரம்பித்தோம் ..... தமிழ்ப் பாஷை பேசுகின்ற முஸ்லிம்களுக்கு வேண்டிய நல்லறிவுகளைப் போதிக்கிறதும் அவர்களின் நிலபரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு முயற்சிப்பதும் இப்பத்திரிகையியின் நோக்கமாகும். (முஸ்லிம் பாதுகாவலன் 1901-01-12)

"அறியாமையாலாகும் தீங்குகளை விட்டும் எமது சாகியத்தவர்களை பாதுகாக்கிறதே இப்பத்திரிகையின் நோக்கம்" என்று மற்றொரு இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பாதுகாவலனின் முதல் வெளியீட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் அதன் நோக்கமாகக் குறித்துக்காட்டியுள்ள அம்சங்களைப் பினவருமாறு தொகுத்து அட்டவணைப்படுத்தலாம்.

1. கல்வி கற்பதன் உண்மையான நோக்கத்தை மக்களுக்கு உணர்த்துதல்.

2. ஒற்றுமையாக வாழ்வதால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் ஒற்றுமையின்மையால் ஏற்படும் தீமைகளையும் உணர்த்துதல்.

3. முஸ்லிம் சமுகத்தின் வர்த்தக நலன்களைப் பேணக் கைக்கொள்ள வேண்டிய ஒழுங்குகளைப் போதித்தல்.

4. அறபு ஆங்கில மொழிகளில் வெளிவரும் சஞ்சிகைகளிலிருந்து இலங்கை முஸ்லிம்கள் பயன்பெறக் கூடிய கட்டுரைகளை மொழி பெயர்த்து வழங்குதல்.

5. உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளையும், விவசாயம், கைத்தொழில் என்பன பற்றிய தகவல்களையும் வழங்குதல்.

6. பிரித்தானிய அரசின் நல்ல நேர்மையான செயல்களைப் பாராட்டுதல்.

7. துருக்கிய சுல்தானின் ஸ்திர நிலையில் இஸ்லாத்தின் நலன்கள் தங்கியிருப்பதால் துருக்கிய அரசு பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தத்தக்க துருக்கிய சமாசாரங்களை வழங்குதல்.

8. அரசாங்கத்தினதும் குடிமக்களதும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல்.
9. குடிமக்களின் தேவைகளை அரசுக்குச் சுட்டிக்காட்டி, அவற்றை நிறைவேற்ற அரசைத் தூண்டுதல்.

10. நற்செயல்களைச் செய்ய மக்களைத் தூண்டுதல்

இவ்விலட்சியங்களை நிறைவேற்றத்தக்க கட்டுரைகள், செய்திகள் அப்பத்திரிகையில் தொடர்ந்து வெளியிடப்பட்டன. முஸ்லிம் பாதுகாவலனில் பல்வேறு இதழ்களில் வெளிவந்த கட்டுரைத் தலைப்புகள் சில வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | தொகுதி | இல. |
|---|---|---|---|
| 1. | நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய திவ்விய சரித்திரம் | 1 | 12 |
| 2. | மத்ரஸது ஸாஹிராவின் வருடாந்த பரிசளிப்பு விழா | 1 | 19 |
| 3. | கல்வி | 1 | 21 |
| 4. | தாய்ப்பாலூட்டல் | 1 | 48 |
| 5. | உதுமானிய இராஜ்ய வரலாறு | 1 | 49-53 |
| 6. | கொழும்பு நகர சங்கமும் வீட்டுவரியும் | 1 | 57 |
| 7. | கொழும்பு முஸ்லிம்களும் அவர்களின் மார்க்கப் பரிபாலனமும் | 1 | 57 |
| 8. | இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாறு | 1 | 61-65 |
| 9. | முஸ்லிம் விவாகச் சட்டம் | 1 | 66-71 |
| 10. | சோனகர் சங்கம் | 2 | 5 |
| 11. | ஆலிம்களும் இங்கிலீஷ் பாஷையும் | 2 | 21-31 |
| 12. | இலங்கை முஸ்லிம்களின் இங்கிலீஷ் கல்வி | 3 | 15 |
| 13. | அஸ்றாருள் ஆலமும் அழுக்காற்றுள்ள ஆலிம்களும் | 4 | 2-6 |
| 14. | கொழும்பு சோனகரின் சீதன வழக்கம் | 5 | 4-14 |
| 15. | இலங்கை மக்களின் சீர்திருத்தம் | 6 | 00 |
| 16. | சேர். செய்யது அஹமது கான் | 6 | 11 |

தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமான கட்டுரைகளை உள்ளடக்கிய The Mislim அல்முஸ்லிம் எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றை ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் 1909 பெப்ரவரி 15ஆம் திகதி வெளியிட்டார். அதன் முதல் இதழில் இச்சஞ்சிகை வெளியீட்டின் நோக்கங்களை பின்வருமாறு குறித்துள்ளார்.

> "இப்பத்திரிகையின் நோக்கம் பொதுவாய்ப் பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கத்தின் தன்மைகளையும், குறிப்பாக கொழும்பு முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கத்தின் நலன்களையும் பாதுகாப்பதேயாகும்"
> (அல்முஸ்லிம் 190-02-15)

மாதமிருமுறை வெளிவந்த இச்சஞ்சிகை ஓர் இலவச வெளியீடாகும். இச்சஞ்சிகை முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சினைகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட முயற்சித்துள்ளது. இலங்கை முஸ்லிம் கல்வி வரலாறு, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் தோற்றம் வளர்ச்சி அது எதிர்நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள், ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட நஷ்டம், முஸ்லிம் கல்வி மாநாடு, அறேபியர் வரலாறு இலங்கை முஸ்லிம்களும் அறபுக் கல்வியும் முதலாம் தலைப்புகளில் இச்சஞ்சிகையில் கட்டுரைகள் எழுதப்பட்டன. மருதானை பள்ளி பரிபாலன சபை உறுப்பினர் தெரிவில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கத்தில் ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் இச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது

ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் சிறந்த பேச்சாற்றல் உள்ளவர். தன் கருத்துக்களைத் தொகுத்து கேட்போர் மத்தியில் அழகுற வைக்கும் ஆற்றல் உள்ளவர். துருக்கித் தொப்பி விவகாரத்தில் மருதானையில் நடைபெற்ற பெரும் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை. பழைய சோனகத்தெரு 118 ஆம் இலக்க வீட்டில் 300 பேர் அடங்கிய கொழும்பு முஸ்லிம்களின் பொதுச்சபையில் 1892.01.04 ஆம் திகதி பெண்கள் கல்வியின் அவசியம் பற்றி ஆற்றிய உரை, பப்டிஸ் சொசைட்டியில் 27.09.1907 ஆற்றிய உரை என்பன குறிப்பிடத்தக்கனவாகும். முஸ்லிம் அல்லாதோர் மத்தியில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் பான்மையில் அங்கு அவர் ஆற்றிய ஆங்கில மொழிமூல உரையும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் முஸ்லிம் பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்லாம் பற்றிய தவறான விளக்கத்தை முஸ்லிம்கள் பெறுதற்கான காரணம் அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பன பற்றி சரியான அறிவைப் பெறும் சந்தர்ப்பம் அற்றுப் போனமையே என்று அஸீஸ் கருதினார். இதனால் அல்குர்ஆனுக்கான தமிழ் மொழிபெயர்ப்பு, ஸஹீஹுல் புஹாரியில் இடம் பெற்றுள்ள. ஹதீஸ்களுக்கான தமிழ் மொழி பெயர்ப்பு என்பனவற்றை தனது சஞ்சிகையில் பிரசுரித்து, இஸ்லாமிய மூலாதாரங்கள் பற்றி சரியான அறிவைப் பெருக்க முயற்சித்துள்ளமை நோக்கத்தக்கதாகும்.

அல்குர்ஆன் அல்ஹதீஸ் போதனைகளைத் தாய்மொழி மூலம் வழங்கும் முயற்சி தற்கால இலங்கை முஸ்லிம்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. அல்குர்ஆனினதும், அல்ஹதீஸினதும் தமிழ் மொழிபெயர்ப்பை வழங்கும் முயற்சியை இலங்கையில் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸே ஆரம்பித்து வைத்தார். எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் இஸ்லாம் பற்றிக் கொண்டிருந்த தவறான கருத்துக்களை விமர்சித்து, உண்மைக் கருத்துக்களை முன்வைக்கவும் அவர் தயங்கவில்லை.

"...... இனி எம்மவர்கள் வேதக்கல்வியை அசட்டை செய்வதற்கு எமக்கு விளங்குகிற காரணத்தைச் சொல்கிறோம் ........ எங்கள் வேத அப்பியாசங்களுள் மூன்று காரணங்கள் விஷேடமானவை. 1. குர்ஆன் ஓதுதல் 2. தொழுதல் 3. மவ்லூது முதலியன ஓதுதல்.

இவற்றை நாம் அறபுப் பாஷையில் பொருள் விளங்காது நடாத்துகிறாம். பொருள் விளங்காவிட்டாலும் நன்மை கிடைக்கும் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது மெய்யாயிருப்பின் நாம் அறபைப் படித்து அதில் நாங்கள் ஓதுகின்றவற்றின் பொருளை அறிந்து கொள்கிற கஷ்டத்தை அனுபவிக்க வேண்டிய தேவை என்ன? பொருள் விளங்காத போதும் பலன் கிடைக்கும் என்ற சொல்லே எம்மவர்கள் வேதக்கல்வியை அசட்டை செய்வதற்குக் காரணம்" (அல்முஸ்லிம் 1901-05-07)

முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தில் குறைகண்ட போதெல்லாம் அவற்றை விமர்சித்து மறுப்புரை எழுதவும் அவர் தயங்கவில்லை.

சமூக சேவையில் ஆர்வத்துடன் ஈடுபட்ட ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் பரந்த அளவில் தொடர்ந்து சமூகப்பணிகளில் ஈடுபடுவதற்காக The Moors Union என்றழைக்கப்பட்ட சோனகர் சங்கத்தை 1900ஆம் ஆண்டில் அமைத்தார். முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீக சமூக, அரசியல் நலன்களைப் பேணிக்காத்து மேம்படுத்துவதே சங்கத்தின் இலட்சியமாக இருந்தது இச்சங்கத்தின் ஆயுட்காலத் தலைவராக ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய பிரச்சினைகளைக் கலந்துரையாடும் மேடையாக இச்சங்கம் அமைந்திருந்தது. ஆட்சியாளருடனும் இந்நாட்டின் ஏனைய சமூகங்களுடனும் நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கு ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் இச்சங்கத்தினூடாக முயற்சித்தார். துருக்கி கொள்ஸல் அதா உல்லாபே சிங்கப்பூருக்குச் செல்லும் வழியில் இலங்கையிற் தங்கிய போது, சோனகர் சங்கத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ரீதியில் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் அவரைச் சந்தித்து உரையாடி இலங்கை முஸ்லிம்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். இலங்கையில் முதல் முஸ்லிம் அட்வகேட் ஆக சத்தியப்பிரமாணம் செய்த எம். அப்துல்காதர் அவர்களையும் அச்சங்கத்தின் சார்பில் வாழ்த்தி உரையாற்றினார். சமூகப் பிரச்சினைகளை அறிமுகப்படுத்தும் உரையாடலுக்கான களமாகவும் சோனகர் சங்கத்தைப் பரிணமிக்கச் செய்தார்.

கொழும்பு மாநகரில் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்ந்த மருதானையின் புகையிரத நிலையத்திற்கு அருகே கட்டப்பட்டிருந்த மருதானை ஜும்ஆ மஸ்ஜித் இலங்கையின் மிகப்பழைய மஸ்ஜித்களில் ஒன்றாகும். ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பகாலத்தில் அம்மஸ்ஜிதின் நம்பிக்கைப் பெறுப்பாளராக அப்துல் அஸீஸின் பட்டனாரான சேகாதி மரைக்காயர் கவர்னரினால் நியமிக்கப்பட்டிருந்தார். அதே மஸ்ஜிதின் நம்பிக்கைப் பொறுப்பாளராக 1903-06-19 திகதி மருதானை முஸ்லிம்கள் ஐ.எல்.எம்.ஏ. அஸீஸை நியமித்துக் கொண்டனர். அது முதல் பத்தாண்டுகள் அப்பதவியை அவர் வகித்தார்.

புத்திநுட்பமும் நிர்வாகத்திறமையும் செயற்திறனும் நல்லெண்ணமும் உடையவராக அவர் இருந்ததால் மஸ்ஜிதின் நிர்வாகத்தை திறம்பட நடத்தினார். மஸ்ஜித் வளவைச் சுற்றி மதிலும் கட்டி, சில பகுதிகட்கு கம்பி வேலியும் அமைத்தார். மஸ்ஜிதின் சொத்துக்களை நன்கு பராமரித்ததால் அதன் வருவாயைப் பல மடங்காக அவரால் அதிகரிக்கச் செய்ய முடிந்தது. வருவாய் கூடியதால் தகைமை பெற்றவர்களை "கதீப்" ஆக நியமித்துக் கொள்ளவும் முடிந்தது.

சமூக சேவையாளராக மட்டுமல்லாது பத்திரிகைக் கலைஞராகவும் புகழ் பெற்றிருந்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸை ஆதரிப்போர் பலர் இருந்தது போல, அவரை எதிர்ப்பவர்கள் சிலரும் உருவாகியிருந்தனர். இவர்களின் செயற்பாடு மருதானை ஜும்ஆ மஸ்ஜிதின் நம்பிக்கைப் பொறுப்பாளர் தெரிவு 1908 இல் இடம் பெற்றபோது நன்கு புலனாகியது. மஸ்ஜித் வளவைச் சுற்றி வேலிகட்டு முன்பு அந்நிலத்தைப் பலர் முறையில்லாத வழிகளில் பயன்படுத்தினர். இதனால் பாதிக்கப்பட்டவர்களும் அவரை எதிர்க்கும் குழுவில் அடங்கியிருந்தனர். இவர்கள் முதல் ஐந்து வருட தவணைக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைவதற்கு சில தினங்கட்கு முன்பு, மருதானை மஸ்ஜிதின் பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு பத்திரிகை மூலம் அழைப்பு விடுத்தனர். இவ்வழைப்பு முறையற்றது என்பதால் குடிமக்களில் ஒரு தொகுதியினர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. பங்குபற்றியோர் முன்னாள் சட்ட நிருபண சபை உறுப்பினரான எம்.சி. அப்துல்றகுமானின் புதல்வர் எம். இஸ்மாயில் முதலியாரை புதிய நம்பிக்கைப் பொறுப்பாளராக தெரிவு செய்து கொண்டனர். இதற்கு சில தினங்கட்கு பின்பு கூடிய மறுகுழுவினர் ஐ.எம்.எல்.ஏ. அஸீஸ் அவர்களையே மீண்டும் நியமித்துக் கொண்டனர் இதன் விளைவாக நீதிமன்றத்தின் துணையை நாட வேண்டியதாயிற்று. இங்கிலாந்தின் பிரைவி கௌன்சில் (Privy Council) ஐ.எம்.எல்.ஏ. அஸீஸுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கியதால் அவரே தொடர்ந்து 1913 வரை நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். இரண்டாவது தவணைக் காலத்தில் மஸ்ஜித் பரிபாலன சபைக்காக ஒரு யாப்பைத் தயாரித்து நடைமுறைப்படுத்தினார். இந்த யாப்பின் பிரகாரமே அடுத்த நம்பிக்கைப் பொறுப்பாளர் 1913இல் தெரிவு செய்யப்பட்டார்.

ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் காலப்பிரிவில் மரபுரீதியான சிந்தனைப்பாங்கு ஒரு பெரும் சவாலை எதிர்நோக்கியது. இக்காலப்பகுதியில் இந்தியாவில் மார்க்கக் கல்வியைப் படித்து வந்த உலமாக்கள் எனப்படுவோரின் சிந்தனைச் செல்வாக்கு சமயத்துறையில் முதன்மை பெற்றிருந்தது போல, அரசியல், சமூகவியல் நடவடிக்கைகளில் வர்த்தக சமூகத்தின் செல்வாக்கே ஓங்கியிருந்தது. இதனால்தான் படித்த முஸ்லிம்கள் சட்ட நிருபண சபையில் முஸ்லிம்களுக்கு என்று அங்கத்துவ உரிமைகோரி வெற்றி கண்ட போதும், வர்த்தக சமூகம் அவ்வாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டது. சமயப் பிரச்சினைகளிலும் உலமாக்களின் கருத்துக்களே அங்கீகாரம் பெற்றன. நீண்ட காலம் இந்நிலை நீடித்தபோதும், 1880களின் போது ஏற்பட்ட மறுமலர்ச்சிக் காலப் பிரிவில் இவ்விரு குழுவினரதும் ஆதிக்கத்துக்கு சவால் விடப்பட்டதைக் காண முடிகிறது.

1880 களில் விவாகப் பதிவு மசோதா முன்வைக்கப்பட்ட போது அதனை எதிர்த்தவர்கள் உலமாக்கள் சிலரும் வர்த்தகர்கள் சிலருமே ஆவர். சித்திலெப்பை தனது அஸ்றாருள் ஆலம் எனும் நூலில் அல்லாஹ்வைக் குறிக்க ‘சத்து’ என்ற தமிழ் பதத்தைப் பிரயோகித்த போதும் அதனை எதிர்த்து நின்றவர்களும் உலமாக்கள் சிலரேயாவர். விவாகப் பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசோதாவை ஆதரித்தவர்களும் பெருமளவில் நவீன கல்வியைக் கற்றவர்களேயாவர். இவ்விரு நிகழ்வுகளிலும் ஏற்பட்ட கருத்து மோதல் மரபுரீதியான சிந்தனைப் பாங்கிற்கு எதிரான ஒரு புதிய வர்க்கத்தினர் உருவாகினர் என்பதைக் காண்பிக்கின்றது. ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் பின்வரும் கூற்று இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றது.

''கிதாப் ஓதியவர்கள் சொல்வது மெய் மற்றவர்கள் சொல்வது பொய். என்று மனிதர்கள் விசுவாசித்துக் கொண்டிருந்த காலம் கழிந்து போயிற்று. மற்றவர்களுடைய பேச்சைப் போலவே கிதாப் ஓதினவர்களுடைய பேச்சையும் சீர்தூக்கிப் பார்த்து, நேராயிருந்தால் ஏற்றுக் கொள்வதும் அல்லாதிருந்தால் தள்ளிவிடுவதும் இக்காலத்து மகிமையாக இருக்கிறது,

(முஸ்லிம் நேசன் 1900-06-27)

அஸ்றாருள் ஆலம் பற்றி எழுந்த வாதப்பிரதிவாதங்கள் இக்காலத்தில் வெளிவந்த முஸ்லிம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. அவை ஆலிம்களுக்கும் அல்லாதோருக்கும் இடையே குறிப்பிட்டுக் காட்டக்கூடிய அளவு முரண்பாடுகள் தோன்றியிருந்தன என்பதைக் காட்டுகின்றன. இதன் வளர்ச்சிக் கட்டமாகவே நவீன கல்வியைப் படித்தவர்கள் தேசிய சூழலில் தேசிய உணர்வுடன் சிந்திக்கவும் செயற்படவும் ஆரம்பித்தனர்.

நவீன சிந்தனைக்கு சார்பான எம்.சி. சித்திலெப்பையின் செயற்பாட்டை ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் தொடர்ந்ததால் அவரை விமர்சிக்கவும் எதிர்க்கவும் சிலர் முன்நின்றனர். ஆயின் சித்திலெப்பையைப் போலவே அஸீஸ் அவர்களும் மிக நளினமாக அவர்களை எதிர் கொண்டார் என்பதை ஐ.எல்.எம்.ஏ. அஸீஸின் பின்வரும் கூற்றில் இருந்து அறிய முடிகிறது.

''....... நாம் எமது சாகியத்தாரின் பகிரங்க அலுவல்களைப் பார்க்கத் தொடங்கிய காலமுதல் எமது முன்னோரின் சிரசுகளிலும் சுமத்தப்பட்ட நிந்தனைகளுக்கு எண்ணிக்கையுண்டா? ...... மனிதர்களின் புகழை (நாம்) விரும்புவதுமில்லை. அவர்களின் இகழை அஞ்சுவதும் இல்லை .......... (அல் முஸ்லிம் 1909.03.01)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் ஏற்பட்டு வரும் புதிய அரசியல் சீர்திருத்தம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை மையமாக வைத்து எழும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு, நவீன கல்வி உருவாக்குகின்ற புதிய சமூக தலைமைத்துவம் என்பனவற்றை மரபு ரீதியான முஸ்லிம் சிந்தனையாளர்களும் தலைவர்களும் புரிந்து கொண்டு, ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் போன்றவர்களுக்கு உதவி செய்யாத போதும், உபத்திரவமாவது செய்யாதிருந்திருப்பின் சீர்திருத்தவாதிகளின் முயற்சிகள் இரட்டிப்பாவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்க முடியும்.

1880 களில் எம்.சி. சித்திலெப்பை இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக, வாழ்வியற்துறைகளில் ஆரம்பித்து வைத்த சீர்திருத்த முயற்சிகள் அணையாது தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கு ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் காரணகர்த்தராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை லெப்பை ஆலிம்

(கி.பி. 1816 - 1898)

தென் இந்தியாவின் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காயல்பட்டணம் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் பிறந்த ஊர் ஆகும். காயல்பட்டணம் நீர் நில வளம் மிக்கது. தாம்பிரவரணி ஆறு அந்நகரை அலங்கரிக்கின்றது. அறபு வர்த்தகர்கள் தமது வர்த்தகப் பண்டங்களை விநியோகிப்பதற்கும், தேவைப்படும் பண்டங்களை வாங்குவதற்குமாக இங்கு தங்கிச் செல்வது வழக்கம். இஸ்லாம் அரசியல் ரீதியாகச் செல்வாக்குப் பெற்றபோது, முஸ்லிம்களுக்கும் காயல்பட்டணத்துக்கும் இடையிலான தொடர்பு வலுவடைந்தது.

உமையா ஆட்சியாளரான கலீபா அப்துல் மலிக் அவரது மகன் வலீத் என்பவர்களது காலத்தில் கவர்னராகக் கடமையாற்றிய ஹஜ்ஜாஜ் பின்யூசுபின் கொடுமைகளுக்கு அஞ்சி அறேபியர் பலர் வெளிநாடுகளில் குடியேறினர். இவ்வாறு எகிப்தில் இருந்து வெளியேறி வந்த அறேபியர்களின் குழுத் தலைவராக இருந்த ஜமாலுத்தீன் என்பவர் தென் இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் இறங்கினார். குறித்த பிரதேசத் தலைவரிடம் பன்னீராயிரம் தங்க நாணயங்களைக் கொடுத்து ஒரு நிலப் பிரதேசத்தைப் பெற்று, தன்னுடன் வந்தவர்களோடு அந்நிலத்தில் தங்கினார். தமது தாய் நாட்டின் முக்கிய நகர்களில் ஒன்றான காஹிராவின் பெயரை இந்நிலப்பரப்புக்குச் சூட்டினார். காஹிரா எனும் இப்பெயரே மருவி நாளடைவில் காயல்பட்டணம் என்று வழங்கி வருகின்றதென்று ஒரு கருத்து நிலவுகிறது. குழுத் தலைவர் ஜமாலுதீன் உடன் வந்த பலர். சமய அறிவைப் பெற்ற அறிஞர்களாக இருந்ததால் காயல்பட்டணத்தில் கல்விச் சூழல் ஒன்று தொடர்ந்து நீடித்தது. அதன் காரணமாக அயல் பாக கிராமங்களைச் சேர்ந்த பலர் இஸ்லாத்தால் கவரப்பட்டனர். இதனால் காயல்பட்டணத்தின் அறிவியற் பாரம்பரியங்கள் அயல் பாக நகர்களிலும் செல்வாக்குப் பெற ஆரம்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் காயல்பட்டணம் இலங்கை உட்பட தமிழ் பேசும் பிரதேசங்களில் எல்லாம் அறிமுகமாகியது.

காயல்பட்டணத்தில் குடியேறிய ஜமாலுத்தீன் என்பவரின் வழித்தோன்றலில் வந்த வெள்ளை அஹமது லெப்பை ஆலிம் என்பவருக்கும் ஆமினா உம்மா என்பவருக்கும் குழந்தையாக மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஹிஜ்ரி 1232 முஹர்ரம் பிறை பதினெட்டில் (கி.பி.1816) பிறந்தார். பெற்றார்கள் இவருக்கு வைத்த பெயர் செய்யத் முஹம்மத் லெப்பை என்பதாகும். தனதாரம்பக் கல்வியை காயல்பட்டணத்திலேயே பெற்றார். சிறுவராக இருக்கும் போதே குர்ஆனையும் மார்க்க நூல்களையும் கற்றதுடன், அறபு இலக்கண இலக்கிய அறிவையும் பெருக்கிக் கொண்டார். தனது பதினெட்டாவது வயதில் கீழக்கரை எனும் நகருக்குச் சென்று, அங்கு புகழ் பெற்றிருந்த தைகா சாஹிப் என்றழைக்கப்படும் சே.். அப்துல் காதிர் லெப்பை ஆலிம் (கி.பி. 1778 - 1850) எனும் அறிஞரிடம் பல கலைகளைப் பயின்றார். குணங்குடி மஸ்தான் ஸாஹிப் புலவர் நாயகம், செய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் முதலானோர் இவர்களது வகுப்புத் தோழர்கள் ஆவார்கள். இதன்பின் இவர்கள் கேரளத்துக்கு சென்று அங்குள்ள அறிஞர்களுடன் கலந்துரையாடினார்கள் 'முர்சித்' என்ற பிரபல்யம் பெற்ற நூலின் ஆசிரியரான செய்னுதீன் ஆலிம் மக்தூம் அல்மஹ்பரி என்பவரையும். பத்ஹுல் முஈன் எனும் பிரபல நூலின் ஆசிரியரான மகுதூம் செய்னுதீன் ஆலிம் என்பவரையும், செய்யித் முஹம்மத் புகாரித்தங்கள் போன்றோரையும் கேரளாவில் தங்கியிருந்த காலத்தில் சந்தித்துக் கலந்துரையாடி, தன் அறிவைப் பெருக்கி கொண்டார்கள்.

கீழக்கரையில் தனக்குப் பாடம் போதித்த செய்கு அப்துல் காதிர் ஆலிமின் மகளான சாரா என்பவரை ஹி. 1253 - ரபிஉல் அவ்வல் மாதத்தில் விவாகம் புரிந்தார்கள். அது முதல் அவர் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (இமாம் அல் அரூஸ்) என்று அழைக்கப்பட்டார். விவாகத்தின் பின் தன் மனைவியுடன் கீழக்கரையில் தொடர்ந்து வசிக்கலானார். ஆதலால் கீழக்கரை அவரது வாசஸ்தலமாகியது. இத்தம்பதிகட்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூவர் பெண்கள், இருவர் ஆண்கள் ஆவர். செய்யித் அப்துல் காதர் மூத்தமகன் ஆவார் (கி.பி. 1848 - 1913) இவரே கல்வத் நாயகம் என்றழைக்கப்படுகின்றார். ஆழ்ந்த சூபிச ஈடுபாடு கொண்டவர். தனது இறுதிக் காலப்பகுதியில் நீண்டகாலம் தனிமையில் சமூகத்தை விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கி வாழ்ந்தார். முப்பத்தி மூன்று வருடங்களைக் ஃகல்வத்தில் கழித்தார். இரண்டாவது மகன் ஷாஹுல் ஹமீத் ஆலிம் ஒரு ஹாபிஸ். ஒரு வர்த்தகர். இவர் ஜல்வத் நாயகம் என்றழைக்கப்படுகின்றார். மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் ஒரு மகளை பல்லாக்கு வலியுல்லாஹ் என்றழைக்கப்படுகின்ற அல்லாமா ஹபீப் முஹம்மது சதகதுல்லா என்பவர் விவாகம் புரிந்திருந்தார். ஹிஜ்ரி 1291 இல் கி.பி. 1873 இல் ஹஜ்ஜுக்கு சென்று வந்தார். இவை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அறிவும் ஆன்மீக சிந்தனையும் பயிற்சியும் உடைய ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்துள்ளார் என்பதைக் காண்பிக்கின்றன.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஒரு வர்த்தகர். மதுரையில் 'தைகா ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்' எனும் பெயரில் ஓர் இரும்புக் கடை வைத்திருந்தார். இதன் கிளை ஒன்று கீழக்கரையிலும் இருந்தது. இவற்றின் மூலம் பெறும் வருமானத்தைக் கொண்டே குடும்பச் செலவுகளை மேற்கொண்டார். வர்த்தகத்திற்காகவே ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்தார்.

நீரிழிவு நோயினால் தாக்குண்டிருந்த இவர்கள் கி.பி.1898 நவம்பர் 19ஆம் திகதி (ஹி. 1316 றஜப் பிறை ஐந்து) இறையடி எய்தினார்கள். கீழக்கரையில் தனது மாமனாகிய முத்துவாப்பா என்று அழைக்கப்பட்ட தைகா சாஹிப் என்பவரின் அடக்கத் தலத்துக்கு அருகே மறுதினம் லுஹர் நேரத்துக்கு சற்று முன் அடக்கம் செய்யப்பட்டார்கள். அடுத்து வந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பின் பல மஸ்ஜித்களில் அவருக்காக ஜனாஸா தொழுது பிரார்த்தித்தார்கள். மதுரையைச் சேர்ந்த பிரபல அறிஞர் ஸாலிம் அப்துஸ்ஸலாம் என்பவரும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் சமகாலத்தவரான நூஹ் லெப்பை ஆலிம் சாஹிப் அவர்களும் இவரது சேவைகளைப் பாராட்டி கஸீதா பாடியுள்ளார்கள்.

காயல்பட்டணத்தில் பிறந்து கீழக்கரையில் வாழ்ந்து வந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம் இலங்கை முஸ்லிம்களுடனும் சமய, கலாசார ரீதியாக நெருக்கமான தொடர்பை வைத்திருந்தார். அவரது பணிகள் தென்னிந்தியாவையும் இலங்கையையும் மையமாகக் கொண்டிருந்தன. அவரது பணிகளை அறிவியல் பணிகள், கலாசாரப் பணிகள் எனும் இரு தலைப்புகளில் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியற்பணிகள்

ஆழ்ந்த அறிவும் ஆன்மீகப் பயிற்சியுமுடைய ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவர், அவ்விரு பண்புகளையும் தனதணிகலன்களாகக் கொண்டிந்தார்கள். முஸ்லிம் சமூகத்தின் சிறப்புப் பண்பான அறிவியல் பணியை தென்னிந்தியாவையும் இலங்கையையும் மையமாக வைத்து அவர் மேற்கொண்டார். இவ்விரு இடங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழை தம் பேச்சு மொழியாகவும் அறபுத் தமிழை எழுத்து மொழியாகவும் கொண்டிருந்தார்கள். தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் இலங்கையின் கரையோரத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுக்குமிடையே இரத்த உறவும் வர்த்தக உறவும் இருந்தன. இதனால் தென்னிந்தியாவில் பிறந்து வளர்ந்திருந்தாலும் இலங்கை அவர்களுக்கு அந்நியமானதாக இருக்கவில்லை. அதனால் அவர் இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சியில், குறிப்பாக கல்வி, கலாச்சார மேம்பாட்டில் பெரும் அக்கரை கொண்டிருந்தார்கள். இதனால் கீழக்கரையில் தாம் நடாத்தி வந்த அறபு மத்ரஸாவைப் போன்று இலங்கையிலும் ஒரு மத்ரஸாவை அமைக்க வேண்டும் என்று ஆவல் கொண்டார். அதற்காக முயற்சித்ததன் விளைவாக கி.பி. 1884 இல் வெலிகமையில் 'மத்ரஸதுல் பாரி பிமஸ்ஜிதில் புகாரி அலா நஹ்ரில் ஜாரி' என்றழைக்கப்படுகின்ற அறபு மத்ரஸாவை ஆரம்பித்தார்.

அதற்கு முன்பே பலமுறை இலங்கைக்கு வந்து சென்று மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இலங்கையின் தெற்கு, தென்மேற்கு கரையோர நகர்களுக்கு இவர்கள் பலமுறை வந்து சென்று நேரடியாக மக்களுடன் உறவாடியதாலும், உள்நாட்டுப் பகுதிகளில் 'முரீத்' எனப்பட்ட ஆன்மீகத் துறை சார்ந்த சிஷ்யர்களைக் கொண்டிருந்ததாலும் இலங்கை முஸ்லிம்களின் பின் தங்கிய நிலையை நன்கறிந்திருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இலங்கையில் படித்த முஸ்லிம்கள் முகம்மது காஸிம் சித்திலெப்பையின் தலைமையில் இஸ்லாமிய சூழலில் நவீன கல்வியை வழங்கியும், சமூக சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டும், முஸ்லிம் சமூகத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல முயற்சித்தனர். முஸ்லிம்களுக்கு கல்வியையும் கலாசார பயிற்சியையும் வழங்குவதன் மூலமே முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தலாம் என்று அவர்கள் கருதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவ ஆட்சியாளர்களின் கொடுமைகளுக்கு பல நூற்றாண்டுகள் இலங்கை முஸ்லிம்கள் உள்ளாகி அவதிப்பட்டு, அடிப்படையான மார்க்கக் கடமைளைச் சரிவர நிறைவேற்றப் போதுமான அறிவையேனும் பெற்றிருக்கவில்லை என்று மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கருதினார். அறபுத் தமிழை மட்டும் வாசிக்க அறிந்திருந்த பாமர மக்கள் சாதாரண மார்க்கக் கடமைகளையும் அறிந்திருக்கவில்லை. படித்த முஸ்லிம்கள் மேனாட்டுக்கல்வியை சமய சூழலில் வழங்கவே முயற்சித்தார்கள் அவர்கள் ஏற்படுத்துகின்ற பாடசாலைகள் ஆழ்ந்த சமய அறிவை வழங்கும் ஸ்தாபனங்களாக இருக்கப் போவதில்லை. அதனால் அவற்றினூடாக சமய அறிவை அறபு மொழி மூலம் பெற்ற அறிஞர்களைப் பெறுவது சாத்தியமில்லை என்று மாப்பிள்ளை லெப்பை ஆலிம் உட்பட, மரபு ரீதியான சிந்தனைப் பாங்குடையவர்கள் சிந்தித்தனர்.

இலங்கையின் கரையோர நகர்களிலும், மதுரையிலும், ஏனைய நகர்களிலும் உள்ள முஸ்லிம்களுக்கு அறபு மொழியை விளங்க முடியாதிருந்த போதும், சமய சட்டங்களையும் ஏனைய சமய ஞானங்களையும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றதொரு தாகம் அவர்களிடம் இருப்பதை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவதானித்தார். மேனாட்டுக் கல்வியை சந்தேகக் கண்கொண்டு நோக்கிப் புறக்கணித்தது போலல்லாது, சமயக் கலைகளைக் கட்டாயமாக அறிய வேண்டும் என்ற உணர்வும் அவாவும் அவர்களிடம் இருந்தன என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆயினும் அறபு மொழிமூலம் சமய அறிவைக் கற்பிக்கும் மத்ரஸாக்கள் இலங்கையில் இருக்கவில்லை. அத்தகு கல்வி நிலையங்கள் இந்தியாவில் இருந்த போதும் அங்கு சென்று கல்வி பயில்வதற்கான வாய்ப்புக்கள் இலங்கை மாணவர்க்கு போதியளவு இருக்கவில்லை. ஆதலால் இலங்கையில் ஒரு மத்ரஸாவை ஆரம்பிப்பதற்காக தென்மாகாணத்தில் உள்ள தன் நண்பர்களிடம் உதவி கேட்டு கடிதம் ஒன்று எழுதினார் அதில் பின்வருமாறு குறித்திருந்தார்.

> "உலமாக்கள் அருகி, அறிவும் உதாசீனம் செய்யப்பட்ட இற்றை நாளில் மார்க்கக் கல்வியில் உறுதியாய் நிற்பது பர்லு ஐனாகும். மஷ்ரிகு முதல் மஃரிபு வரையுள்ள பல்வேறிடங்களில் மத்ரஸாக்கள் அமைக்கப்பட்டு, மார்க்கக் கல்வியூட்டப்படுவதை நாம் அவதானிக்க வேண்டும். இந்தியாவிலும் சென்னை, வேலூர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி, காயல்பட்டணம் போன்ற இடங்களில் மத்ரஸாக்கள் நடைபெறுகின்றன. இங்கெல்லாம் ஆசிரியர் மாணவர் அனைவரதும் அனைத்துத் தேவைகளும் கவனிக்கப்படுகின்றன. இப்படியான வசதியான மத்ரஸாக்கள் இலங்கையில் இல்லை."

(அறிஞர் மாப்பிள்ளை லெப்பை ஆலிமின். கடிதத்தின் தமிழாக்கம் - மிஷ்காதுல்பாரி நூற்றாண்டுவிழா சிறப்பு மலர் 1984. பக் 107)

முஸ்லிம் உலகெங்கும் இருக்கின்ற மதுரஸாக் கல்விக் கூடம் இலங்கையில் இல்லை. ஆதலால் அத்தகைய கலாநிலையம் ஒன்றை நிறுவுவது ஒரு கட்டாயமான கடமைதான் என்றுணர்த்தி, நெருக்கமான உறவு வைத்திருந்த தென் இலங்கை மக்களிடம் உதவி கோரிப் பெற்று, கி.பி. 1884 இல் மத்ரஸதுல் பாரி பிமஸ்ஜிதில் புஹாரி அலா நஹ்ரில் ஜாரி எனும் பெயரில் ஓர் அறபு மத்ரஸாவை வெலிகமையில் ஆரம்பித்தார். தான் வாழ்ந்த கீழக்கரை, பிறந்து வளர்ந்த காயல்பட்டணம் போன்ற இந்திய நகர்களில் இருந்த அமைப்பில் அம்மதுரஸாவை அவர் வழிநடத்தியிருக்க முடியும்.

இவ்வாண்டு (கி.பி.1884) இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில், பொன் எழுத்துக்களால் பொறிக்கவேண்டிய ஓர் ஆண்டு ஆகும். கண்டியிற் பிறந்த சித்திலெப்பை கொழும்பிற் குடியேறி, மேனாட்டுக் கல்வியை இஸ்லாமியச் சூழலில் முஸ்லிம்களுக்கு வழங்க மத்ரஸதுல் கைரிய்யதுல் இஸ்லாமிய்யா எனும் பாடசாலையை இவ்வாண்டு கொழும்பில் ஆரம்பித்தார். இந்தியாவின் கீழ்க்கரையில் வாழ்ந்த மாப்பிள்ளை லெப்பை வெலிகமைக்கு வந்து இலங்கை முஸ்லிம்களிடையே மரபுரீதியான கல்வியை வழங்கி, சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதற்காக, மத்ரஸதுல்பாரி எனும் அறபு மதுரஸாவை இதே ஆண்டில் தோற்றுவித்தார். இவ்விரு அறிஞர்களும் சமூக முன்னேற்றம் கருதிக் கல்லூரிகள் அமைத்து, நூல்களை எழுதி, மக்களைச் சீர்திருத்த முயற்சித்தார்கள். ஆயினும் தமது இலக்கை அடைய இருவரும் இருவேறுபட்ட சிந்தனை வழியிற் செயற்பட்டுள்ளார்கள். அறபு மொழிக் கல்வியூட்டும் மதுரஸா மூலம் ஆழ்ந்த சமய அறிவையும், உணர்வையும் பூரணமாக ஊட்டுவதாலேயே சமய, சமூக, சீர்திருத்தத்துக்கு உதவ முடியும் என்று மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சிந்தித்திருப்பது நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரஸாக்கள் காலத்தின் தேவையாக இருந்ததால், அவை சமூகத்தின் ஆதரவைப் பெற்றன. மதுரஸதுல் பாரி ஆரம்பிக்கப்பட்ட அதே ஆண்டில், கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட மத்ரஸதுல் கைரிய்யதுல் இஸ்லாமிய்யாவை மக்களிடை தோன்றிய வேற்றுமை காரணமாகவும், பணப் பற்றாக்குறை காரணமாகவும், ஆரம்பித்த ஓரிரு வருடங்களில் மூடிவிடவேண்டியேற்பட்டது. இப்பாடசாலையின் ஆசிரியர்க்கான சம்பளத்தை வளங்கப் போதிய பணம் சேராதிருந்த நேரத்தில் மத்ரஸதுல் பாரியின் ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும் மாணவர்களுக்கான இலவச உணவையம் வழங்க மக்கள் ஒத்துழைப்பு நல்கினார்கள். இதே அமைப்பில் இன்றுவரை இயங்கும் அந்நிலையத்தை மக்கள் எவ்வளவு ஆதரித்தார்கள் என்பதையும், மரபுரீதியான கல்வியை மக்கள் எவ்வளவு விரும்பினார்கள் என்பதையும் இவை காட்டுகின்றன. இந்த மதுரஸாவின் அமைப்பு முறையைப் பின்பற்றி, மேலும் பல மதுரஸாக்கள் நாட்டின் பல பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த 125 வருடங்களாக மார்க்க அறிஞர்களை உருவாக்கிவரும் இந்நிலையத்தினூடாக இந்நாட்டு முஸ்லிம்கள் அடைந்துள்ள பயன்கள் அதிகம் எனலாம்.

அவரது அறிவியற் பணியின் மற்றொரு முக்கிய அம்சம் பொதுமக்களின் அறிவைப் பெருக்கும் நூல்களை எழுதி வெளிட்டமையாகும் அவர் எழுதியுள்ள நூல்களைப் பின்வரும் தலைப்புகளில் கீழ் அட்டவணைப்படுத்த முடியும்.

1. சட்டத்துறை (பிக்ஹ்)
2. மெய்ஞ்ஞானம் (தஸவ்வுப்)
3. வரலாறு (தாரிஹ்/ ஸீராஹ்)
4. அவ்ராதுத்தொகுப்பு
5. ஞானோபதேச நூல்கள்
6. இரங்கற்பாக்கள் (மர்சிய்யா/ கஸீதா)

♦ **சட்டத்துறை**

1. பத்ஹு"ல் மதீன்
2. பத்ஹு"ஸ் ஸலாம்
3. பத்ஹு"த் தையான்
4. ம.'.கானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஃகானி என்று சுருக்கமாக வழங்கப்பட்டுவரும் இந்நூலுக்கு அவர் இட்ட பெயர் 'மஃகானி முல்ஹித் திப்யான் பீ ஷரஹி மஆனி பத்ஹுத் தையான்' என்பதாகும். அறபுத் தமிழில் எழுதப்பட்ட இந்நூல் நூலாசியரியரின் மிக முக்கிய ஆக்கமாகும். மேலே சுட்டிக் காட்டிய முதல் மூன்று நூல்களின் விளக்கமாகவே மஃகானி எனும் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலில் ஈமான் தவ்ஹீது, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், வியாபாரம், வட்டி, கடன், பாகப் பிரிவினை, நிகாஹ் விவாகரத்து, திக்ருகள், தஸ்பீஹ்கள் முதலாம் தலைப்புகளின் கீழ் ஒவ்வோர் அம்சமும் விரிவாக நோக்கப்பட்டுள்ளது. தொழுகை பற்றி எழுதும் போது; ஐந்து நேரத் தொழுகை, சுத்தம், வுழு, தயம்மும், நஜீஸ், அதான், இகாமத், தொழுகையின் பர்ளுகள், சுன்னத்துகள், கழாத் தொழுகை, சுன்னத்தான தொழுகை, ஜும்ஆ, ஜனாஸா தொழுகை போன்றன பற்றி எல்லாம் விபரித்துள்ளார். தவ்ஹீத் பற்றி எழுதும் போது; மஃரிபா, முஷாஹதா, முராகபா முதலானவற்றையும் உள்ளடக்கி விளக்கியுள்ளார். இதைப் போலவே ஏனைய தலைப்புக்களையும் விளக்கமாக எழுதியுள்ளார். மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய ஏவல், விலக்கல் உள்ளடக்கிய சரீஆ விதிகளை சாபிஇ மத்ஹபினரின் சிந்தனைச் செயற்பாட்டு வழிமுறையில் தொகுத்துத் தந்துள்ளார். இலங்கையிலும் தென்னிந்தியக் கரையோரங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் சாபிஇ மத்ஹபைச் சேர்ந்தவர்களானதால், அவர்களின் பயன்பாடு கருதி சாபிஇ மத்ஹப் வழிமுறையில் இந்நூலை எழுதியுள்ளார். அறபுத் தமிழில் எழுதப்பட்டுள்ள இந்நூலை தமிழ்பேசும் தற்கால முஸ்லிம்களின் நலனைக் கருத்திற் கொண்டு தமிழ் மொழியில் சென்னையைச் சேர்ந்த சுலைமான் ஆலிம் அறக்கட்டளை நிறுவனத்தினர் கி.பி. 1994 இல் வெளியிட்டுள்ளனர். இந்நூலாசிரியரின் பத்ஹுத்தையான் எனும் நூலை சைபுத்தீன் ஜே. அனிப் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1963இல் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ஞ்ஞானத்துறை

மெய்ஞ்ஞானம் சார்ந்த அவரது பிரசித்தி பெற்ற நூல் '.'கனீமதுஸ்ஸாலிகீன்' என்பதாகும். மெய்ஞ்ஞானத்துறை ஈடுபாடு கொண்டு செயற்படுபவர்களையே 'ஸாலிகீன்' என்ற பதம் சுட்டுகின்றது. இத்தகையோருக்கான வழிகாட்டு நூலாக இந்நூல் உள்ளது. இந்நூலிலும் சட்ட விளக்கமும் ஆன்மீக வழிகாட்டலும் உண்டு. ம.'.கானியிலும் கூட ஆன்மீகத்துறை வழிகாட்டல்கள் ம.'.ரிபா, ஷுஹுத், முராகபா, முஷாஹதா போன்ற தலைப்புகளில் வளங்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய அஸ்ராருஸ்ஸலாத் (தொழுகையின் இரகசியங்கள்) எனும் நூலிலும் மெய்ஞ்ஞானத்துறை சார்ந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ருகூஉ, சுஜுது முதலானவற்றை விளக்கும் போது அதனை மெய்ஞ்ஞான சிந்தனையுடன் இணைத்து விளக்கம் அளித்துள்ளதாக அறிய முடிகிறது.

தவ்ஹீதுக் கோட்பாட்டை மையமாக வைத்து அவர் எழுதிய மற்றொரு மெய்ஞ்ஞான நூல்"றிஸாலதுத் தஸவ்வுப்" என்பதாகும்.

## வரலாற்றுத்துறை

வரலாற்றுத் துறை சார்ந்த சில நூல்களையும் அவர் எழுதியுள்ளார். அவற்றுள் சில தனிநபர்களின் வரலாறாக அமைய, மற்றும் சில மவ்லித் நூல்கள் வடிவில் அமைந்துள்ளன. பின்வருவன அவற்றுள் குறிப்பிடத்தக்கன.

### 1. ஜவ்ஹரதுல் ஸமீன் - பி - முன்த.:.கபி சீரதில் அமீன்

இது நபிகளார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக தரும் ஒரு நூலாகும்.

### 2. மரா.:.கிப் அல்மவாஹிப் பி மனாஹிப் உலில் மதாஹிப்

இந்நூலில் இமாம் அபூஹனீபா (ரஹ்), இமாம் மாலிக் (றஹ்), இமாம் சாபிஇ (றஹ்), இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்) ஆகியநால்வரது வாழ்க்கை வரலாற்றையும் அவர்கள் சேவைகளையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பய்லுல் மஜீத் பி. மனாகிப் இப்ராஹீம் அஷ்ஷஹீத்

மதீனாவில் பிறந்து வளர்ந்து கீழக்கரைக்கு அருகே உள்ள ஏர்வாடியில் அடங்கப்பட்டிருக்கும் செய்யத் இப்றாகிம் அஷ்ஷஹீத் (கி.பி. 1135 - 1199) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் தருகின்றது.

### 4. அத்தலத்துக் அலா ஃகலபி - பி ஈஜாதி மன்ஹு வ மின் அஉயானிஸ்ஸலப்

இது சே:. சதகதுல்லா (கி.பி. 1632 - 1702) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தருகிறது

### 5. மவாஹிபுல் மஜீத் பி மனாகிபி ஷாஹில் ஹமீத்

இது ஆன்மீக ஞானியான சாஹுல் ஹமீத் (கி.பி. 1504 - 1570) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் போதனைகளையும் உள்ளடக்கிய நூலாகும்.

### 6. ஷஜரதுன் பாதிரிய்யா - வஸில்ஸிலதுன் காதிரிய்யா

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் ஆன்மீகத்துறை வழிகாட்டிகள் பற்றிய வரலாற்றைத் தரும் ஒரு கவிதை நூல். இதனை முரீத்கள் மனனம் செய்து கொள்வதுண்டு.

**பின்வருவன மவ்லித்களின் வடிவில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களாகும்.**

### 1. மின்ஹதுஸ்ஸரன்திப் - பி - மத்ஹில் - ஹபீப்

இது நபிகளார் (ஸல்) அவர்களின் பெயரில் எழுதப்பட்ட ஒரு மவ்லித் நூலாகும். இந்நூலின் பிரதி ஒன்றை மக்கா நகர நூல் நிலையத்தில் வைத்திருந்ததைத் தான் மக்காவுக்குச் சென்ற போது கண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களே குறிப்பிட்டுள்ளார் என கலாநிதி தைகா சுஐப் ஆலிம் அவர்கள் கலாநிதிப் பட்டத்துக்கான தனது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

**2. அல்பஹ்ஜியதுல் வஹிஜா பி. வலிஜதி ஸித்தி கதிஜா**

இது நபிகளார் (ஸல்) அவர்களின் மனைவி கதீஜா நாயகி பற்றி எழுதிய மவ்லித் நூலாகும்.

**3. மவ்லிதுஷ் ஷாபிஅதி - பி - மித்ஹதி பாதிமதி பின்திர்ரசூல்**

இது நபிகளார் (ஸல்) அவர்களின் மகள் பாத்திமா நாயகி பற்றி எழுதிய மவ்லித் நூலாகும்.

**4. மவாஹிபுஸ்ஸைன் - பி மனாகிபில் ஹஸனைன்**

இது நபிகளார் (ஸல்) அவர்களின் பேரப்பிள்ளைகளான இமாம் ஹஸன் இமாம் ஹுஸைன் பற்றி எழுதிய மவ்லித் நூலாகும்.

**5. மவ்லிதுஷ் ஷஹதாஇல் பத்ர் வல் உஹத்**

இது பத்ர், உஹத் போர்க்களங்களில் உயிர் நீத்த சஹாபாக்கள் பற்றி எழுதிய மவ்லித் நூலாகும்.

**6. தன்ஜபிலு ஸலாபதின் குறைஷிய்யா ஸஜன்ஜலி மிர்ஆதின் முத்தலபிய்யா**

இது இமாம் ஷாபி (றஹ்) அவர்கள் பற்றி எழுதிய மவ்லித் நூலாகும்.

**7. மனாஇஹ் ரப்பில் அர்பாப் பி மதாஇஹி குதுபுல் அக்தாப்**

இது அப்துல் காதிர் ஜிலானி (றஹ்) அவர்கள் பற்றி எழுதிய மவ்லித் நூலாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. மரா ஃகிப் உலில் லஸன் பிமனாகிபி குதுபி அபில் ஹஸன்**

இது அபுல் ஹஸன் அலி அஷ்ஷாதூலி என்பவர் பற்றிய மவ்லித் நூலாகும். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் காதிரிய்யா தரிகாவைச் சேர்ந்தவராக இருந்த போதும் சாதுலி தரிகாவைத் தோற்றுவித்த அபுல்ஹசன் அலி அஷ்ஷாதுலி அவர்களைப் புகழ்ந்து எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**9. மவத்தது ரப்பில் பைது பி. மஹப்பதி அஹ்லில்பைத்**

அஹ்லுல் பைத்கள் மீது அன்பு காட்ட வேண்டும். கண்ணியப்படுத்த வேண்டும் என்ற கருப்பொருளை மையமாக வைத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இஃதன்றி பின்வருவோர்கள் பற்றியும் தனித்தனியான மவ்லித் நூல்களை எழுதியுள்ளார்.

1. அஜ்மீரைச் சேர்ந்த காஜா முஇனுத்தீன் ஜிஸ்தி (கி.பி.1142-1236)
2. ஞானி ஸின்தாஷா
3. காஜா பன்த் நவாஸ் என்றழைக்கப்படுகின்ற சேகு மஸ்ஊத் (கி.பி 1592 ல் மரணம்) தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்.
4. சேகு சதகதுல்லாஹ் அவர்களின் சகோதரரான சேகு சலாகுதீன் (கி.பி 1641 - 1686)
5. தொண்டியைச் சேர்ந்த சேகு அபூபக்கர் றஹ் (கி.பி. 1717 - 1788)
6. பாசிப்பட்டனத்தவரான சேகு அபூபக்கர் வலி (கி.பி. 1717 - 1788)
7. குருநாகலில் அடங்கியிருக்கும் சேகு இஸ்மாயில் ஒலியுல்லாஹ் (கலேபண்டார தெவியோ) (ஆட்சி கி.பி. 1284 - 1287)
8. இலங்கையைச் சேர்ந்த சேகு ஹஸனில் மகுதூமி (கி.பி. 1785-1866)
9. காயல்பட்டணத்தில் அடங்கப்பட்டுள்ள சேகு மகுதூமி தங்கள்
10. பெரிய லெப்பை அப்பா அப்துல்காதிர் வலி (கி.பி. 1680 - 1737)
11. இலங்கை பேருவளையைச் சேர்ந்த சேகு முஸ்தபா வலியுல்லாஹ் (கி.பி. 1836 - 1888)
12. கன்னூரைச் சேர்ந்த செய்யித் முஹம்மத் புஹாரித் தங்கள் (கி.பி. 1731 - 1792)
13. காயல் பட்டிணம் தைகா ஸாஹிப் வலி (கி.பி. 1778 - 1855)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கொழும்பு தெவட்டகஹவில் அடக்கப்பட்டுள்ள உதுமான் ஒலியுள்ளாஹ்
15. கொழும்பு கட்டக்களை மரத்தடியில் அடக்கப்பட்டுள்ள (மினன்மஸ்ஜித்) செய்யித் இஸ்மாயில் கிந்தீல்
16. அழுக்காமத்தில் அடங்கப்பட்டுள்ள அசனா லெப்பை ஒலியுள்ளா.

ஜாஹிலியாக் காலத்திலும் இஸ்லாமிய வரலாற்றுக் காலத்திலும் இறையடியெய்தியோர் மீது இரங்கற்பாக்கள் மர்சிய்யாக்கள் பாடப்பட்டுள்ளன. இவ்வழிமுறைகளைப் பின்பற்றி மாப்பிள்ளை லெப்பை ஆலிமும் ஞானிகள் பலர் மீது இரங்கற்பாக்கள் பாடியுள்ளார். பின்வருவோருக்காக அவர்கள் (மர்ஸிய்யாக்களை) இரங்கற்பாக்களைப் பாடியுள்ளார்கள்.

1. தைகா ஸாஹிப் வலியுள்ளாஹ் (கி.பி. 1778 - 1850)
2. தனது பெற்றோர் சகோதரர் சகோதரிகள் மீது பாடிய மர்சிய்யா. இது 329 வரிகளைக் கொண்டது.
3. அப்துல் காதிர் வலி
4. காலி கிந்தொடையில் அடங்கப்பட்டுள்ள முஹம்மத் ஹுஸைன் வலி (கி.பி. 1733 - 1822)
5. தனது தாய்வழிப் பாட்டனான அப்துல் காதிர் வலி (கி.பி. 1733-1822)
6. காயல்பட்டணம் சின்ன முத்துவாப்பா எனப்படும் அபூபக்கர் வலியுல்லாஹ் (கி.பி 1795 - 1886)
7. கச்சிமலையில் வாழ்ந்த சேகு அஷ்ரப் வலியுல்லாஹ்
8. மாத்தறையில் அடங்கப்பட்டுள்ள செய்யித் யஹ்யா அல்யமனி (மர. கி.பி. 1883)
9. வலிகமயைச் சேர்ந்த சேகு இனாயதுல்லாஹ் வலியுல்லாஹ்
10. அகுரஸ்ஸ போர்வையில் அடக்கப்பட்டுள்ள செய்யித் பக்கீர் முஹியிதீன் பக்காதி.

அல்லாஹ்வுடனான தொடர்பைக் கூட்டிக் கொள்ள விரும்பும் பக்தர்கள் காலையிலும் மாலையிலும் இறைவனை நினைவுறுத்துவர். அவனை திக்று செய்வர். இ..தன்றி திங்கள், வெள்ளி இரவுகளில் ம..ரிப் தொழுகையின் பின் அவ்ராதுகள் என்றழைக்கப்படுகின்ற பல பிரார்த்தனைகள் உள்ளடக்கிய தொகுப்புகளை ஓதுவர். இத்தகு தொகுப்புகளை பொது மக்கள் ராதிப் கிதாப் என்பர். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் திங்கள் வெள்ளி இரவுகளில் ஓதுவதற்காக றாதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜலாலியா என்றழைக்கப்படும் தொகுப்பு ஒன்றைக் கோர்வை செய்தார். அவர் யாத்த அறபுக் கவிதைகள் சிலதையும் றாதிபது ஜலாலிய்யா எனும் இந்நூலில் காணமுடியும். இக்கவிதை அல்லாஹ்வையும் இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் புகழ்வதாகவும் உள்ளன. இவர் கோர்வை செய்த இந்த றாதிபது ஜலாலியா இந்தியா இலங்கை மலேசியா தாய்லாந்து பர்மா முதலான நாடுகளிலும் பிரபல்யம் பெற்றுள்ளமை குறிப்பிட்டுக் காட்டத்தக்கதாகும். இந்நூல் அறபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 1949 இல் அச்சிடப்பட்டுள்ளது.

## ஞானோபதேச நூல்கள்

மக்கள் தம் நடத்தையைச் சீர்படுத்திக் கொள்வதற்கும் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கும் துணை செய்யும் நல்லுபதேசங்களை கவிதை வடிவிலும் உரை நடை வடிவிலும் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் பின்வருவன குறிப்பிட்டுக் காட்டத்தக்கனவாகும்.

### 1. அஹ்ஸனுள் மவாஇழ் வஅஸ்யனுள் மழாபிழ்

இக்கஸீதா 380 பைத்துகளைக் கொண்டது. மறுமைக்குத் தயாராவதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. ஒவ்வொரு பைத்தும் ஒவ்வொரு ஹதீஸின் கருத்தைப் பொதித்துள்ளது.

### 2. மவ்இழதுன் முஸய்யனதுன் வமுழப்பழதுன் முஹஸ்ஸனதுன்.

இதில் 53 பைதுகள் உண்டு. ஒவ்வொரு பைதும் ஒவ்வொரு ஹதீஸின் பொருளைப் பொதிந்துள்ளது.

### 3. தலைப்பாதிஹா

இதில் 78 பைதுகள் உண்டு. ஒவ்வொரு பைதுக்கும் இடையில் அதன் கருத்து அறபுத் தமிழில் பைதாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்நிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சாரத்தின் தாக்கத்தில் இருந்து முஸ்லிம் பெண்களைக் காப்பதைக் கருத்திற் கொண்டு இக்கவிதைகள் பாடப்பட்டுள்ளன. இந்நூல் இலங்கை முஸ்லிம் பெண்களிடத்தில் மிகவும் பிரசித்தமானது. பெண்கள் குழுக்கள் குழுக்களாக சேர்ந்தும் இலங்கையில் இதனைப் பாடி மகிழ்வர்.

## 4. ஹதியா மாலை

ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்ற வேண்டியதும், ஆன்மீக விருத்திக்கு உதவுவதுமான நாற்பது நல்லுபதேசங்களை இது உள்ளடக்கியுள்ளது. தமிழ் நாட்டைச் சேர்ந்த கதீப் எம்.கே. செய்யித் முஹம்மத் புஹாரி என்பவர் இதனைத் தமிழில் மொழிபெயர்த்து ஹத்யா ஷரீப் எனும் பெயரில் வெளியிட்டுள்ளார். இதன் ஐந்தாம் பதிப்பு 2003 ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது.

## 5. அல்குத்பதுல் முப்கிய்யா லில் மவ்இழதுன் முத்மிய்யா

உள்ளத்தை உருக்கும் நல்லுபதேசங்களை இந்நூல் கொண்டுள்ளது.

நல்லுபதேசங்களை உள்ளடக்கியதாக மட்டுமன்றி, வேறு பல கருப்பொருட்களை உள்ளடக்கியதாகவும் கஸீதாக்களைப் பாடியுள்ளார். நபிகளார் (ஸல்) அவர்களை (மஉசூக்) அன்புக்குரியவராக வெளிப்படுத்தும் கஸீதா ஒன்றைப் பாடியுள்ளார். அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) அவர்கள் மீதும் ஒரு கஸீதா புனைந்துள்ளார். மவ்லானா ரூமி பாடிய மஸ்னவியின் கருத்துக்களை உள்ளடக்கியதாக பிறிதொரு கஸீதாவைப் பாடியுள்ளார்.

அப்துல்லாஹ் இப்னு அஹமத் அல்மதனி எனும் அறபி கீழக்கரைக்கு வந்திருந்தார். இவர் அறபு மொழியிலும் மார்க்க ஞானங்களிலும் புலமை பெற்றிருந்தார். அவர் கீழக்கரை உலமாக்களின் அறபுமொழிப் புலமையை விமர்சித்தார். அதனால் கீழக்கரை உலமாக்கள் மனம் வருந்தினர். இதனை அறிந்திருந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் 76 வரிகளைக் கொண்ட "மின் பாரிகாத்" என்ற தொடர் கொண்டு ஆரம்பிக்கின்ற கஸீதா ஒன்றை யாத்தார். இதனை அந்த அறபி படித்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாற் பெரிதும் கவரப்பட்டார். அதன் இலக்கண வழுவற்ற தன்மை அறபு இலக்கிய மரபுடன் இணைந்து செல்லும் பான்மை என்பன அவரை ஈர்த்தன. அதனைப் படித்த பின் அவர் (ஹாதா வல்லாஹி லிஸானு அறபிய்யின் முபீன்) அல்லாஹ்வின் மீது சத்தியமாக இது அறபிகளின் மொழியில் அமைந்துள்ளது என்று பாராட்டினார்.

வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆவின் போது பிரசங்கம் செய்வதற்காக பல குத்பாக்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்பது குத்பாக்களை தான் வாசித்துள்ளதாக கலாநிதி தைகா சுஐப் ஆலிம் தனது நூலில் குறித்துள்ளார். அவற்றுள் ஒரு குத்பாவின் ஒவ்வொரு வாக்கியமும் 'நூன்' எனும் அறபு எழுத்தில் முடிகின்றது. இதனால் இந்தக் குத்பாவை குத்பா நூனிய்யா என்பர். மற்றொரு குத்பாவின் ஒவ்வொரு வாக்கியமும் 'ற' எனும் எழுத்தில் முடிகிறது அதனால் அது குத்பா றாஇய்யா எனப்படுகிறது. இமாம் அவர்களின் குத்பாக்களில் மூன்று அச்சிடப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் அவர் தனிப் பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் பல மிகச்சில வரிகளைக் கொண்டவை. சிலவேளை அல்குர்ஆன் அல்லது அல்ஹதீஸின் அல்லது ஒரு பழமொழியின் கருத்தைச் சுட்டிக் காட்டுவதாக அந்த பைத்து இருக்கும். மற்றும் சில தைக்காவுக்கு அல்லது மஸ்ஜித் ஒன்றுக்கு அடிக்கல் நடும்போது, அல்லது மஸ்ஜிதுக்கு காணி ஒன்றை வாங்கும் போது, அல்லது நூல் நிலையத்துக்கான நூல் ஒன்றை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளும் போது, தனது 'முரீத்' ஒருவரின் திருமண வைபவத்தின் போது, தனக்காகப் பிரார்த்திக்குமாறு ஒருவர் கேட்டுக் கொண்ட போது பாடிய தனிப் பாடல்களாகும். மஸ்ஜித்களின் சுவர்களில், புத்தகத்தின் முன்புறத்துள்ள தாள் ஒன்றில், தனது டயரியில் இவ்வாறான சிறிய பைத்தை எழுதும் பழக்கம் அவரிடம் இருந்துள்ளது. எந்த ஒரு நிகழ்வையும் கவிதையில் வடித்து வழங்கும் ஆற்றல் அவருக்கிருந்தது. என்பதையே இது காட்டுகின்றது.

இவ்வாறு பாடிய சுமார் இருநூறு தனிப்பாடல்களை மிகச்சிரமத்துடன் கலாநிதி தைகா சுஐப் அவர்கள் சேகரித்து, கீழக்கரையில் உள்ள மத்ரஸதுல் மவாலியின் நூல்நிலையத்தில் பாதுகாத்து வைத்துள்ளார். (மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் ஆக்கங்கள் பற்றி விபரமாக அறிய விரும்புவோர் கலாநிதி தைகா சுஐப் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arabic Arwi and Persian in Serandib and Tamil Nadu நூலைப்பார்க்கவும்.)

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் "மதீனதுன் நுஹ்ஹாஸ்" எனும் பெயர் கொண்ட ஒரு கதையை எழுதியுள்ளார். பாரசிக எழுத்தாளரான பாகிரி எதித் இப்னு மாலிக் அத்தாயி என்பவர் எழுதிய அறபு ஆக்கம் ஒன்றைத் தழுவியதாக இதனை கி.பி. 1858 இல் எழுதியுள்ளார். செய்யித் முஹம்மத் ஆலிம் என்பவர் கி.பி 1900 இல் இந்நூலை வெளியிட்டார். இதனை தமிழ்மயயப்படுத்தி, எம்.கே.இ. மௌலானா என்பவர் 1979 இல் சென்னையில் வெளியிட்டுள்ளார். இதனை கலாநிதி தைகா சுஐப் ஆலிம் அவர்கள் தமிழ் பேசும் மக்களால் வெளியிடப்பட்ட முதல் நாவல் என்று அறிமுகப்படுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத் தக்கது. இக்கதை சமய போதனைகளை முன்வைப்பதற்காகவே எழுதப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

முஸ்லிம் உலகில் பிரசித்தி பெற்றிருந்த இப்னு நபாதா (கி.பி. 946 - 984) என்பவர் கோர்வை செய்த குத்பாத் அந் நபாதிய்யாவையே உலமாக்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் ஜும்ஆ தினங்களிலும், இரு பெருநாள் தினங்களிலும் ஓதி வந்தனர். அறபு மொழியில் அழகிய மொழிநடையில் ஓசை நயமிக்கதாக எழுதப்பட்டிருந்த, இந்த குத்பாவைச் செவிமடுத்த போதும் அறபு மொழியை அறியாதிருந்ததன் காரணமாக பொது மக்களால் அதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆதலால் அவர்களால் ஜும்ஆவின் மூலம் பெற முடிந்த பயன்களைச் சரியாக அடைந்து கொள்ள முடியவில்லை. இதனைத் தவிர்க்கும் முகமாக மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் இந்த குத்பாவை அறபுத் தமிழுக்கு மொழி பெயர்த்தார்கள்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கி.பி. 1883 இல் கீழக்கரையில் பரகாதிய்யா எனும் பெயரில் லிதோ அச்சகம் ஒன்றைத் திறந்தார். தமிழ் நாட்டில் அறபுத் தமிழ் நூல்கள் அச்சிடுவதற்காக ஆரம்பித்த ஆரம்ப அச்சகசாலைகளில் இதுவும் ஒன்றாகும். ம்:.கானியின் முதற்பதிப்பு இவ்வச்சகத்தில் இருந்தே கி.பி. 1886 இல் வெளிவந்தது. அவரது ஏனைய பல நூல்களும் இவ்வச்சகத்திலே அச்சிடப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரத் துறைப் பணிகள்

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கீழக்கரையில் வாழ்ந்து வந்த போதும், இலங்கை - வட, தென் இந்தியாவின் முக்கிய நகர்கள் போன்ற இடங்களை தரிசித்து வந்துள்ளார். அவரது வர்த்தக முயற்சிகள் இதற்குத் துணை செய்தன. சென்ற இடங்களில் எல்லாம் வர்த்தகத்தையும் இஸ்லாமியப் பிரசாரப் பணியையும் மேற்கொண்டார்கள். வர்த்தக நோக்கத்திற்காக அவ்விடங்களில் பல நாட்கள் தொடர்ந்து தங்கினார்கள். இதனால் அவ்வவ் இடங்களில் வாழ்ந்த மக்களின் சமய, சமூக நிலைகள் பற்றியும் தேவைகள் பற்றியும் அவர்களால் அறிந்து கொள்ள முடிந்தது. இதுவே அவரை முஸ்லிம்களின் சமய, சமூக, கலாச்சாரத் துறைப் பணிகளில் ஈடுபடத் தூண்டியது. பல இடங்களில் அவர் மஸ்ஜிதுகளையும் தைக்காக்களையும் நிர்மாணிக்கத் தூண்டுகோளாய் இருந்தார். சுமார் 355 மஸ்ஜித்கள் அவர்களின் தூண்டுதலால் நிர்மாணிக்கப்பட்டதாக கலாநிதி அஜ்மல் கான் என்பவர் எழுதிய தமிழ்நாட்டு முஸ்லிம்கள் போர்த்துக்கீசருக்கு முன்பும் பின்பும் எனும் நூலை ஆதாரமாகக் காட்டி கலாநிதி தைக்கா சுஐப் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த, கொழும்பு மாவட்டத்தின் மருதானை நகரில் மஸ்ஜித் ஒன்றை நிர்மாணிக்க கொழும்பு முஸ்லிம்கள் தீர்மாணித்து, அதற்கு அடிக்கல் நடுவதற்காக கீழக்கரையில் வாழ்ந்த புகழ்பூத்த மெய்ஞ்ஞானியும் அறிஞருமான தைகா ஸாஹிப் என்பவருக்கு அழைப்பு விடுத்தனர். அவர் தனது மாணவரும் மருமகனுமாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிமை அப்பணியை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டதால், மருதானை மஸ்ஜிதுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். கட்டிடம் நிர்மாணம் பூர்த்தியானதும் அவரே திறந்து வைத்தார். இது பற்றிய குறிப்பு ஒன்றைத் தனது டயரியில் அவர் குறித்துள்ளார். அத்துடன் மஸ்ஜித் திறப்பு விழா பற்றி ஏழு வரிகளைக் கொண்ட ஒரு கவிதையையும் பாடியுள்ளார். இக்கவிதையில் அத்திவாரமிட்ட தினத்தையும் திறப்பு விழா இடம்பெற்ற தினத்தையும் அறபு எழுத்தினூடான நாசூக்காகக் குறித்துள்ளார் என்பர். பம்பலப்பிட்டி ஜும்ஆ மஸ்ஜித், பலாமரச்சந்தி மஸ்ஜித், திக்வல்லை மஸ்ஜித், வலஸ்முல்ல மஸ்ஜித் போன்றவற்றை நிர்மாணிக்கவும் இவர் தூண்டுதலாக இருந்தார் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வணக்கத் தலங்கள் அவரால் உருவாக்கப்பட்டவை என்று கருதப்படுகின்றன.

| | மஸ்ஜிதின் பெயர் | நிர்மானித்த ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| 01 | ம.'.னமுஸ்ஸஅதா | கி.பி 1881 | பழைய சோனகத் தெரு |
| 02 | புஹாரி தைக்கா | கி.பி 1883 | மருதானை |
| 03 | ஹுஸைன் தைக்கா | கி.பி 1884 | காலி கிந்தொட்ட |
| 04 | புஹாரி மஸ்ஜித் | கி.பி 1884 | வெலிகாமம் |
| 05 | அருஸிய்யா தைக்கா | கி.பி 1885 | வெலிகாமம் வெலிப்பிடி |
| 06 | அருஸிய்யா தைக்கா | கி.பி 1886 | மாத்தளை கோட்டகொட |
| 07 | முஹியித்தீன் மஸ்ஜித் | கி.பி 1887 | காலி மில்துவ |
| 08 | அருஸியா தைக்கா | கி.பி 1888 | மாத்தறை கடை வீதி |
| 09 | ம.'.னமுல் அப்ளல் தைக்கா | கி.பி 1889 | காலி கட்டுகொட |

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் தன் ஆன்மீகப் பயிற்சிக்காக காதிரியா தரிகா வழிமுறையைப் பின்பற்றினார்கள். இத்தரிகா பக்தாதில் வாழ்ந்த முகியத்தீன் அப்துல் காதிர் ஜிலானி (றஹ்) (கி.பி. 1077 - 1166) அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இவரது முரீத்கள் அவரது ஆயுட் காலத்திலேயே காதிரி தரிகாவை அறபு நாடுகளில் அறிமுகப்படுத்தினர். இந்திய உபகண்டத்தில் கி.பி. 1482 இல் மரணித்த முஹம்மது கவுஸ் என்பவர் அறிமுகப்படுத்திய போதும் கி.பி. 1746 இல் கள்ளிக் கோட்டையில் குடியேறிய யெமன் நாட்டவரான சேகு முஹம்மது அல் ஜிப்ரி என்பவர் தான் கேரளாவில் காதிரியா தரிகா பரவுவதற்கு துணையாக இருந்தார். இவர் ஊடாகவே கி.பி. 1778 இல் பிறந்த காயல்பட்டணத்தைச் சேர்ந்த சேகு அப்தல் காதர் தைகா ஸாஹிப் காதிரியா தரிகாவில் சேர்ந்தார். இவர் பிற்காலத்தில் தன் மருமகனான மாப்பிள்ளை லெப்பை ஆலிமை காதிரியா தரிகாவின் கலிபாவாக நியமித்தார். அது முதல் அவர் இலங்கையிலும், தான் சென்ற தென் இந்திய நகர்களிலும் காதிரியா தரிகாவை அறிமுகப்படுத்தினார். இத்தரிகாவைச் சேர்ந்தவர்கள் ஜலாலியா ராதிப் போன்ற அவ்ராத் தொகுப்புகளை வெள்ளி திங்கள் இரவுகளில் ஓதினர். தமது ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்காக தைக்காக்களை நிர்மாணித்தனர். மாப்பிள்ளை லெப்பை ஆலிமும் இலங்கையில் தான் நிர்மாணித்த தக்கியாக்களிலும், மஸ்ஜித்களிலும் இப்பயிற்சியை வழங்க ஏற்பாடு செய்தார். நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்த தனது முரிதுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, அவரவர் ஊர்களிலும் இப்பயிற்சிகளை மேற்கொள்ள தூண்டுகோலாக இருந்தார்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் மாமனாரான தைகா சாஹிப் தியானம் செய்வதற்காக கீழக்கரையில் அமைத்திருந்த மண்டபத்தில் கி.பி. 1809 இல் ஒரு மத்ரஸாவை ஆரம்பித்தார். இங்குதான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் கல்வி பயில சேர்க்கப்பட்டார் (இம்மத்ரஸாவில் தான் அக்குரணையைச் சேர்ந்த கசாவத்தை ஆலிம் என்றழைக்கப்படுகின்ற முஹம்மத் லெப்பை எனும் அறிஞரும் கல்வி பயின்றார்.) தமது மாமனாரான தைகா ஸாஹிப் வபாத்தானதும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் 1851 அளவில் அதனைப் பொறுப்பேற்று மறுசீரமைத்தார். அது முதல் தான் அம்மத்ரஸா "மத்ரஸதுல் அரூஸிய்யா" என்றழைக்கப்படுகின்றது. இதன் அயலில் ஒரு நூல் நிலையத்தை அமைத்தார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து கிடைக்கும் நூல்களை வாங்கினார். நூல்களுக்கான பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்தன. அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களில் அதுபற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றிருந்தன. கரையான்களில் இருந்து காப்பதற்காக இராக்கைகளில் வேப்பம் இலைகளை வைத்திருந்தார். இம்மத்ரஸாவுக்காக இலங்கை முஸ்லிம்களும் நிதியுதவி செய்தனர் என்பதும், பல நூற்றுக்கணக்கான இலங்கை மாணவர்கள் இம்மத்ரஸாவில் கல்வி பயின்று வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தக்லீத் சிந்தனை செல்வாக்குப் பெற்று, இஸ்லாமியச் சட்டக்கலையின் வளர்ச்சி தேக்கமடைந்து, இஜ்திஹாத் முயற்சிகள் ஊக்குவிக்கப்படாதிருந்த காலப் பகுதியில், மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் வாழ்ந்தார்கள். இதனால் நவீன சிந்தனையின் தாக்கத்திற்கு அவர் உட்படவில்லை. வழக்கிலுள்ள சமய, சமூக சிந்தனைச் சூழலில் இருந்து கொண்டே முஸ்லிம்களை நெறிப்படுத்தி நல்வழிப்படுத்த முயற்சித்துள்ளார் என்பதை அவரது வாழ்க்கை வரலாறு காண்பிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி - துவான் புர்ஹானுத்தீன் ஜாயா

(கி.பி. 1890 - 1960)

இலங்கை முஸ்லிம் சமூக மறுமலர்ச்சியின் முன்னோடிகள் என்று இனங்காட்டத்தக்கவர்களான மர்ஹூம் எம்.சி. சித்திலெப்பை முதல் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் என்பவர்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றிய பிரமுகர்கள் சிலர் உள்ளனர். அவர்களில் கலாநிதி அல்ஹாஜ் டி.பி. ஜாயா அவர்களும் கலாநிதி அல்ஹாஜ பதிஉத்தீன் மஹ்முத் அவர்களும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்காக கல்லூரி அதிபர்களாகப் பணியாற்றியதுடன், பாராளுமன்றத்தில் அமைச்சர் பதவிகளையும் வகித்து, முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமன்றி, பொதுவாக இலங்கை மக்களுக்குப் பெருந் தொண்டாற்றியவர்களுமாவர். தேசிய காங்கிரசின் உபதலைவர்களில் ஒருவராக கலாநிதி டி.பி. ஜாயாவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காரியதரிசியாக கலாநிதி பதிஉத்தீன் மஹ்மூத் அவர்களும் செயற்பட்டு, தேசியத் தலைவர்களாகவும் அங்கீகாரம் பெற்றிருந்தனர். இவ்விருவரில் காலத்தால் முந்தியவராக மட்டுமன்றி அல்ஹாஜ் பதிஉத்தீன் மஹ்மூத் அவர்களின் ஆசிரியராகவும் டி.பி. ஜாயா இருந்துள்ளார். முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுப் பணியை டி.பி. ஜாயா முன்னெடுத்தார். கோல்புரூக் கமரன் அரசியற் சீர்திருத்தத்தின் வழி உருவான சட்ட நிருபண சபையிலும், டொனமூர் சீர்திருத்தத்தின் வழி உருவான சட்ட சபையிலும் சோல்பரி சீர்திருத்தத்தின் வழி உருவான பாராளுமன்றத்திலும் உறுப்பினராக இருந்த ஒரே ஒரு முஸ்லிம் தலைவர் டி.பி.ஜாயா அவர்களாவர். இவ்வாறான முக்கியத்துவம் பெற்ற ஒரு முதன்மைப் பிரஜையான டி.பி. ஜாயா அவர்களின் வரலாற்றைத் தமிழ் பேசும் மக்கள் முன்வைப்பது காலத்தில் தேவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி.பி. ஜாயாவின் பெயர் துவான் புர்ஹானுத்தீன் ஜாயா என்பதாகும். கி.பி. 1890 ஜனவரி முதலாம் திகதி காலை பத்துமணி அளவில் மத்தியமாகாணத்தைச் சேர்ந்த கலகெதர எனும் ஊரில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் காஸிம் ஜாயா என்பதாகும். அவர் பொலிஸ் ஸார்ஜன்ட் ஆகக் கடமையாற்றினார். டி.பி. ஜாயாவின் பாட்டனின் பெயர் பரிஸ்தீன் என்பதாகும். டி.பி. ஜாயா அவர்கட்கு துவான் ஆரிபின் என்ற மூத்த சகோதரரும், துவான் பரிஸ் என்ற இளைய சகோதரரும், தேவி என்ற ஒரு சகோதரியும் இருந்தனர். அவரது மனைவியின் பெயர் ஜெரி என்பதாகும். ருவெனா எனும் ஒரு மகளும் துவான் அன்வர், துவான் மஸ்னவி ஜாயா, எனும் இரு ஆண்மக்களும் இவருக்குள்ளனர். அவர்கள் ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையிற் குடியேற்றப்பட்ட மலாய் வம்சாவழியைச் சேர்ந்தவர்களாவர். இவ்வம்சாவழியினர் தமது தனித்துவத்தைத் தொடர்ந்து பேணி வந்த போதும், இலங்கையர் என்ற சிந்தனைக்கு முதன்மை கொடுத்து பெரும்பான்மை மக்களுடன் சோனகர்களை விடவும் நெருக்கமாக வாழ்ந்தனர்.

சிறுபராயத்தில் முதலில் குருநாகலையைச் சேர்ந்த நூர்தீன் ஆலிம் என்பவரும், பின் ஒமர்தீன் லெப்பை என்பவரும் வீட்டில் வைத்து இவருக்குக் குர்ஆன் ஓதிக் கொடுத்தனர். கொழும்பிற் குடியேறிய பின் மலே றெஜிமெண்ட் இல் இருந்து ஓய்வு பெற்ற கப்டன் மோசத் என்பவரிடம் குர்ஆனை நன்கு ஓதக் கற்றுக் கொண்டார். 1901 ஆம் ஆண்டு கொட்டஹேனையில் உள்ள S.P.G. பாடசாலையின் சிறுவர் வகுப்பில் சேர்க்கப்பட்டார். சிறுவனது அபார திறமை காரணமாக இருவருடங்களில் பன்மடங்கான வகுப்பேற்றத்தைக் கொடுத்து தற்போதைய ஏழாம் ஆண்டிற்கு சமனான வகுப்பிற் சேர்க்கப்பட்டார். அதன்பின் புலமைப்பரிசில் ஒன்றைப் பெற்று மோதரையில் இருந்த புனித தோமஸ் கல்லூரியில் 1904 இல் சேர்ந்தார். அங்கிருந்து 1906 இல் கேம்பிரிஜ் ஜுனியர் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்ததுடன், கணிதவியலுக்கான J.A.C. மென்டிஸ் உபகாரப் பரிசிலையும் பெற்றார். 1907 இல் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையிலும், 1909 இல் லண்டன் பல்கலைக்கழகத்தின் மெற்றிகுலேசன் பரீட்சையிலும் தேர்ச்சியடைந்தார்.

கண்டியில் உள்ள தர்மராஜ கல்லூரியில் 1910 ஜனவரியில் உதவி ஆசிரியராக இணைந்து நாற்பது ரூபாவை மாதாந்த சம்பளமாக பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1910 மே மாதத்தில் மொரட்டுவையில் உள்ள பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு மாதாந்தம் அறுபது ரூபா சம்பளம் கொடுத்தனர். 1913 இல் லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பரீட்சையின் இடைநிலைப் பரீட்சையில் தேர்ச்சியடைந்தார். அப்பரீட்சையின் போது லத்தின், கிரிக்கம், கணிதவியல், வரலாறு, ஆங்கிலம், பொருளியல், எனும் பாடங்களுக்குத் தோற்றினார்.

1916 இல் லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பரீட்சையில் தேர்ச்சியடைந்தார். பட்டப் பரீட்சையின் போது லதீன், கிரேக்கம், வரலாறு பொருளாதாரம் எனும் பாடங்களுக்குத் தோற்றினார். 1917 ஆம் ஆண்டில் ஆனந்தாக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார். அதே ஆண்டில் இலங்கைச் சட்டக் கல்லூரியில் அப்புக்காத்துப் பரீட்சைக்காகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

ஸாஹிராக் கல்லூரியின் அதிபராகவும், முஸ்லிம் லீகின் தலைவராகவும் பணியாற்றிப் புகழ் பெற்ற இவர், ஓர் அரசியல் வாதியுமாவார். மலாயர் பரம்பரையில், ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த அவர் சோனகர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்ட முஸ்லிம்களுடன் நெருக்கமாகப் பழகினார். கிறிஸ்தவப் பாடசாலையில் கல்வி பயின்று பௌத்த, கிறிஸ்தவ கல்லூரிகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவரது இப்பின்னணி சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் என்ற பாகுபாடின்றி சகலருடனும் சுமுகமாக வாழ உந்துகோலாக அமைந்தது. பக்தியுள்ள ஒரு முஸ்லிமாக வாழ்ந்து கொண்டே பல்லின சமூகங்களுக்கு மத்தியில் இணக்கமாக வாழ்ந்து காட்டிய முன்மாதிரி மனிதராக இருந்தார். இறைபக்தியுள்ள நல்லடியானாக வாழ்ந்த அவர் ஹஜ்ஜாஜிகளின் நலன்களைப் பேணுவதற்காக மதீனா சென்றிருந்த போது 1960.05.30 ஆம் திகதி இறையடி சேரந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வித் துறைப் பங்களிப்பு

டி.பி. ஜாயா பிறந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கால் நூற்றாண்டில் அறிஞர் சித்திலெப்பையும் அவரது நண்பர்களும் இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருந்தனர். இப்பணியில் படித்த முஸ்லிம்கள் சிலரும், எகிப்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட சுதந்திர வீரனான அறபி பாச்சாவும், கொடைவள்ளலான வாப்பிச்சி மரைக்கார் போன்றவர்களும், சில உலமாக்களும் அவருக்குத் துணையாக இருந்தனர். எம்.சி. சித்திலெப்பை இறையடியெய்திய பின்னர் சித்திலெப்பைக்கு பெருந் துணையாக இருந்த ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் இம்முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அதனால் 1910 இல் தனது இருபதாவது வயதில் டி.பி. ஜாயா ஆசிரியப் பணியை ஏற்கின்ற போது கொழும்பு, கண்டி, கம்பளை, போன்ற முக்கிய நகர்களில் தமிழ் மொழியில் கல்வி வழங்கும் உதவி நன்கொடை பெறும் முஸ்லிம் பாடசாலைகள் சில தோற்றம் பெற்றிருந்தன. முஸ்லிம் நேசன், இஸ்லாம் மித்திரன், அல்முஸ்லிம், முஸ்லிம் பாதுகாவலன், போன்ற சில பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஜம்இய்யதுல் இஸ்லாம், இலங்கை முஸ்லிம் சங்கம் போன்ற அமைப்புக்கள் சமூக சீர்திருத்தம் மேற்கொள்ள மக்களைத் தூண்டின. 1905 இல் இடம் பெற்ற துருக்கித் தொப்பிப் போராட்டம் இஸ்லாமிய உணர்வலைகளைப் பொதுமக்களிடத்தில் ஏற்படுத்தின. இவை இளைஞரான டி.பி. ஜாயாவுக்கு முஸ்லிம்களின் பின் தங்கிய நிலையை எடுத்துக் காட்டின. கண்டி தர்மராஜ கல்லூரி மொரடுவ வேல்ஸ் கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி என்பவற்றின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த போது, பௌத்த சமயத்தவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வத்தை அவரால் நேரடியாக அவதானிக்க முடிந்தது. 1892 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தாக் கல்லூரி அடைந்துள்ள முன்னேற்றத்தையும் அதே ஆண்டில் ஆரம்பித்த ஸாஹிராக் கல்லூரியின் தேக்க நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க அவருக்கு அவகாசம் கிடைத்தது. சிங்கள சகோதரர்களும் தமிழ் சகோதரர்களும் கல்வியில் நாள் தோறும் முன்னேறுவதையும், கல்விப்பாரம்பரியம் ஒன்றைத் தன் அணிகலனாகக் கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தின் வாரிசுகளான இலங்கை முஸ்லிம்கள் நவீன கல்வியின் வாடையும் கிடைக்கப் பெறாது பின்தங்கியிருப்பபையும் அவதானித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள தமிழ் சமூகங்கள் தமக்கென அரசாங்கப் பாடசாலைகளையும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளையும் நூற்றுக்கணக்காக வைத்துப் பராமரிக்கின்ற போது, இலங்கை முஸ்லிம் சமூகத்தினர் தமக்கென்று உள்ள ஒரே ஒரு முஸ்லிம் பாடசாலை ஆகிய மருதானை ஸாஹிராவைத் தானும் தரமுள்ள ஒரு பாடசாலையாக வளர்த்துக் கொள்ளாதிருப்பதை அவர் அவதானித்தார். இது அவரது உள்ளத்தில் பெரும் கவலையைத் தோற்றுவித்தது. இக்கவலையை இலங்கை முஸ்லிம் சங்கத்தில் அவர் ஆற்றிய உரையும், Ceylon Muslim Review எனும் சஞ்சிகையில் 1919 இல் Ceylon Muslim and Education முஸ்லிம்களும் கல்வியும் எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையும் நன்கு புலப்படுத்துகின்றன.

ஆங்கிலக் கல்வியின் தேவையை வலியுறுத்தி அவர் ஆற்றிய உரை, எழுதிய கட்டுரைகள் என்பன இலங்கை முஸ்லிம் சமூகம் பற்றி மட்டுமன்றி, உலக முஸ்லிம் சமூகத்தின் தேக்க நிலை பற்றியும் அவர் நன்கு அறிந்திருந்தார் என்பதை உணர்த்துகின்றன.

பௌத்த சமூகத் தலைவர்கள் ஆங்கில மொழி மூலக்கல்வியை வழங்குவதற்காக தம்மை அர்ப்பணித்து கொண்டுள்ளார்கள் என்றும், அதன் விளைவாக கல்வியில் முன்னேறியது மட்டுமன்றி, தமது அரசியல் உரிமைகளைக் கோரிப் பெற்றுக் கொள்ளவும் சக்தி பெற்றுள்ளார் என்பதையும் சுட்டிக் காட்டி, இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மீள் எழுச்சியை நவீன கல்வியின் ஊடாகவே பெறமுடியும் என்று எடுத்துக்காட்ட முனைந்துள்ளார். இந்தியாவின் சேர் செய்யிது அஹமது கானின் கடும் முயற்சியால் உருவான அலிகார் கல்லூரியில் முஸ்லிம்கள் சேர்ந்து பயின்றதன் காரணமாகவே இந்தியாவின் ஹிந்து சகோதரர்கள் போல தாமும் வளர முடிந்தது என்றும், இலங்கை முஸ்லிம்களான எமக்கும் ஓர் அலிகார் தேவை என்றும் வலியுறுத்தினார். முஸ்லிம் சமூகத்தில் சிலர் மட்டும் ஆங்கிலக் கல்வியை கற்பதைக் கொண்டு திருப்தியடைய முடியாது என்றும், பொது மக்களுக்குப் பரவலாக ஆங்கிலக் கல்வி ஊட்டப்படவேண்டும்; அதற்காக சமகாலத்தில் உயர்தரக் கல்லூரிகளையும் ஆரம்பப்பாடசாலைகளையும் நிறுவ முடியாத விடத்து, இஸ்லாமியக் கோட்பாடுகட்கு இயைபான தரமான ஓர் உயர்தரக் கல்லூரியையாவது நிறுவ வேண்டும் என்றும், இங்கு பயிலும் மாணவர்கள் நாடளாவிய ரீதியில் சென்று கல்வி மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கலாம் என்றும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கங்கள், எழுத்துக்கள் என்பனவூடாக எடுத்துக்காட்டினார். 1921-11-27 ஆம் தினம் டென்ஹாம் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் போது, முஸ்லிம்கள் பின்தங்கியவர்களாகக் கருதப்படுவது. அவர்களிடம் பணமோ, தொழிலோ, சமய தத்துவமோ இல்லாமையினால் அல்ல என்றும், நவீன கல்வியைப் புறக்கணித்ததன் காரணமாகவே அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள் என்றும் சுட்டிக் காட்டினார். முஸ்லிம் சிறார்கள் பாடசாலை செல்லாது பாதைகளில் சுற்றித் திரிவதற்குக் காரணம் முஸ்லிம்களே என்றும் எடுத்துக்காட்டி, நவீன கல்வி பற்றிய முஸ்லிம்களின் மனப்பாங்கை மாற்றுவதற்கு முயற்சித்தார்.

## ஸாஹிராவின் அதிபர்

முஸ்லிம் சமூகத்திற்கு நவீன கல்வியை வழங்க வேண்டும் அதற்காக முஸ்லிம்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற கருத்துக்களை மக்கள் மேடைகளில் டி.பி. ஜாயா முன் வைத்ததாலும், ஆனந்தாக் கல்லூரியில் அனைவராலும் பாராட்டப்படும் வகையில் மாணவர்களை வழிநடத்துவதிலும் பாடபோதனையை வழங்குவதிலும் ஈடுபட்டிருந்ததாலும், கொழும்புப் பிரமுகர்களிடையே அவர் நன்கு பிரபல்யமானார். இதனால் ஸாஹிராக் கலிலூரியின் பரிபாலனத்துக்கு பொறுப்பாக இருந்த மருதானை ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலனக்குழு 1921.09.01 ஆம் திகதியில் இருந்து ஸாஹிராக்கல்லூரிக்கு அதிபராக கலாநிதி டி.பி. ஜாயா அவர்களை நியமித்தது.

மருதானை ஸாஹிராக் கல்லூரி எம்.சி. சித்திலெப்பை, வாய்ப்பிச்சி மரைக்கார், அறபிபாச்சா, ஐ.எல்.எம்.ஏ. அஸிஸ் ஆகியோரின் கூட்டு முயற்சியால் கி.பி. 1892 இல் ஆரம்பிக்கப் பட்டது. உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக 'மருதானை முஸ்லிம் ஆண்கள் பாடசாலை' எனும் பெயரில் இது பதிவு செய்யப்பட்டது. 31 மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையின் பரிபாலகராக வாப்பிச்சி மரைக்கார் செயற்பட்டார். கி.பி. 1911 இல் இப்பாடசாலை இடைநிலைப் பாடசாலையாக (Secondary School) தரம் உயர்த்தப்பட்டது. 1913 இல் ஸாஹிராக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஓ.இ. மார்டினஸ் (O.E. Martinus) எனும் பட்டதாரி அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக நியமிக்கப்பட்டார். தரம் உயர்த்தப்பட்ட கல்லூரியில் முதல் அதிபர் இவரே. 1917 இல் வாப்பிச்சி மரைக்கார் இக்கல்லூரியின் பரிபாலனத்தை மருதானை ஜாமிஆ மஸ்ஜித் பரிபாலனத்திடம் ஒப்படைத்தார். இச்சபை அப்போதைய சட்ட நிருபண சபையின் உறுப்பினராக இருந்த N.H.M. அப்துல் காதர் என்பவரை மனேஜராக நியிமித்தது. 1919 இல் இலங்கையின் ஆங்கில மொழி மூல முதல் முஸ்லிம் பட்டதாரியான A.S. அப்துல்காதரை அதிபராக அவர் நியமித்தார். இதை அடுத்தே 1921 - செப்டெம்பர் முதலாம் திகதி டி.பி. ஜாயா அதிபராக நியமிக்கப்பட்டார்.

கடந்த பதினொரு வருட காலமாக உதவி ஆசிரியராக, பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் கடமையாற்றிப் பெற்ற அனுபவம் டி.பி ஜாயாவுக்கு இருந்தது. கற்பித்தலை மட்டுமன்றி மாணவர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதிலும், அதிபருடன் நல்லுறவைப் பேணுவதிலும், பாடசாலை நிருவாகத்திலும் அனுபவம் பெற்றிருந்த ஜாயா, ஆனந்தாக் கல்லூரி அதிபர் P.D.S. குலரத்னாவின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். நல்லாசிரியர் ஒருவரின் சேவையைத் தனது கல்லூரி இழக்கலாம் என்றும், நிருவாகமும் பிறவளங்கலும் அற்ற ஒரு கல்லூரியைப் பொறுப்பேற்று சாதிப்பது சிரமம் என்றும் நினைத்த அவ்வதிபர் ஸாஹிராக்கல்லூரியின் அதிபர் பதவியை டி.பி. ஜாயா பொறுப்பேற்பதை ஊக்குவிக்கவில்லை.

தனது சமூகத்தின் முன்னேற்றம் அது பெறும் கல்வியிலேயே தங்கியுள்ளது என்று டி.பி. ஜாயா உறுதியாக நம்பியிருந்தார். தங்களுக்கும் ஓர் அலிகார் தேவை. இலங்கையின் சேர் செய்யித் அஹமதாக செயற்படப் போகிறவர் யார்? என்று மேடைகளில் பலமுறை வினாக்கள் எழுப்பி, முஸ்லிம்களின் கல்வி ஆர்வத்தைப் பல சந்தர்ப்பங்களில் தூண்டியிருந்தார். ஆதலால் முஸ்லிம் சமூகத்துக்கு தான் ஆற்ற வேண்டிய கடமை அது என்று உணர்ந்து ஸாஹிராவின் தேக்க நிலையைக் கருத்திற் கொள்ளாது அதன் அதிபர் பதவியைப் பொறுப் பேற்றார்.

1892 இல் 33 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் 1921 இல் 59 மாணவர்களும் ஆறு ஆசிரியர்களும் மட்டுமே இருந்தனர். ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பாடசாலைக்குப் போதுமான ஒரு கட்டிடமும் நல்ல நிலையில் இல்லாத சில தளபாடங்களுமே இருந்தன. முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற மருதானையில் ஜும்ஆ மஸ்ஜிதுக்கு அருகே அப்பாடசாலை அமைந்து இருந்தபோதும், அதன் புறச்சூழல் பொருத்தமற்றதாக இருந்தது. இரவு நேரங்களில் நடைபாதை வாசிகள் அதிற் தங்கினர். விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டோரின் இரவு விடுதியாக அது அமைந்திருந்தது. பாடசாலைக் கட்டிடத்தில் இருந்து இருபது முப்பது யார் தூரத்தில் பற்றைக்காடு இருந்தது. இப்பற்றைக்காடு விரும்பத்தகாத செயலில் ஈடுபடுவோரின் ஒதுங்கு தலமாக இருந்தது. மருதானை மஸ்ஜிதின் கம்பீரத் தோற்றம் மட்டுமே பாடசாலைச் சூழலில் இருந்த ஒரு நல்லங்கமாகும்.

ஸாஹிராவின் அதிபர் பதவியை ஏற்ற டி.பி. ஜாயாவின் மனக்கண் முன் தான் ஏற்கனவே கற்பித்த கல்லூரிகளின் வளர்ச்சி நிலையும், ஸாஹிராவின் தேக்க நிலையும் தோன்றியிருக்க முடியும். ஸாஹிராவின் முன்னேற்றத்தைத் தனது சமூகத்தின் முன்னேற்றத்துக்கான அத்திவாரமாக அவர்கருதி, ஸாஹிராவின் வளர்ச்சிக்காக சில நடவடிக்கைகளை எடுத்தார். அவரது நடவடிக்கைகளை இருதலைப்புக்களின் கீழ் அவதானிக்க முடியும்.

1. மாணவர்களின் கல்வித்தரத்தையும் ஏனைய திறன்களையும் வளர்த்தல்
2. ஸாஹிராவின் பௌதிக வளங்களைப் பெருக்குதல்

## ஸாஹிராவின் கல்வித் தரத்தை உயர்த்துதல்

கி.பி.1892 இல் 33 மாணவர்களைக் கொண்டிருந்த ஸாஹிராவின் மாணவர் தொகை 1905 இல் 51 ஆகவும் 1907 இல் 142 ஆகவும் உயர்ந்தது. ஆயினும் 1917 முதல் மீண்டும் மாணவர் தொகை குறைந்தது. டி.பி.ஜாயா அதிபர் பதவியைப் பொறுப்பேற்ற 1921 இல் 59 மாணவர்களும் 06 ஆசிரியர்களும் மட்டும் இருந்தனர். இவ்வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி நாட்டின் பிரபல்யம் மிக்க கல்லூரிகளுக்கு சமனாக ஸாஹிராவை மேம்படுத்தும் நோக்கில், அதன் கல்வித்தரத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டார்கள். அதன் ஓர் அம்சமாக பாலர் வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் லண்டன் மேற்றிகுலேசன் பரிட்சைக்குரிய வகுப்புகள் வரையிலான எல்லா வகுப்புகளையும் ஆரம்பித்ததுடன், அதற்குத் தேவைப்படும் ஆசிரியர்களையும் நியமனம் செய்தார். இதனால் அவர் ஸாஹிராவைப் பொறுப்பேற்ற ஒரு வருடத்தில் மாணவர் தொகை 450 ஆகவும் ஆசிரியர் எண்ணிக்கை முப்பதாகவும் அதிகரித்தது.

ஸாஹிரா கட்டணம் அறவிடும் ஒரு கல்லூரியாக இருந்தது. இதனால் திறமை மிக்கவர்களாக இருந்த போதும், வறிய மாணவர்கள் பலருக்கு அங்கு கல்வியைத் தொடர முடியவில்லை. இச்சூழலை அனுதாபக் கண்ணோடு டி.பி. ஜாயா நோக்கி, திறமை மிக்க வறிய மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்க ஏற்பாடு செய்தார். மற்றும் சிலருக்கு அவர்களுடைய பொருளாதாரத்தரத்திற்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் கல்வி பெற வாய்ப்பை அளித்தார். இரவு நேரத்தில் பாட போதனை செய்யும் இலவச வகுப்பு ஒன்றை 1927 - ஒக்டோபர் 18 ஆம் திகதியில் ஆரம்பித்தார். ஸாஹிராவுக்கு வரும் வறிய மாணவர்களைக் கருத்திற் கொண்டு, பத்து சதத்துக்கு பகற் போசனமாக சோறும் கறியும் சேர்ந்த உணவை வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

1928 இல் வர்த்தகப் பிரிவை ஆரம்பித்து, London Chamber of Commerce பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தினார். இதற்கான நிதி உதவியை குருநாகலைச் சேர்ந்த மடிகே முகாந்திரம் M.K.A. ஹாமித் என்பவர் வழங்கினார். ஸாஹிராவின் வர்த்தகப் பிரிவை 1928 - 10 - 28 ஆம் திகதி கவர்னர் சேர் ஹேர்பட் ஸ்டான்லி திறந்து வைத்தார்.

மாணவர்களின் திறன்களை வளர்ப்பதிலும் அவர் ஆர்வம் காட்டினார். ஸாஹிராவில் மல்யுத்தம், கிரிகட், முதலான விளையாட்டுத் துறைகளையும் அறிமுகப்படுத்தினார். கால்ப்பந்தாட்டம், ரக்பி, கடட் பயிற்சிகளையும் மாணவர்க்கு வழங்கி ஊக்குவித்தார். முதன் முறையாக 1932 இல் கண்டி டிரினிட்டி கல்லூரியைக் கால் பந்தாட்டம், றகர் போட்டிகளில் ஸாஹிராக் கல்லூரி வெற்றி கண்டது. மல்யுத்தப் போட்டிகளில் ஸஹிரா மாணவர்கள் ஈடுபட்டு 1937 இல் Stubs Shield ஐயும் T.Y. Wright Cup ஐயும் வென்றெடுத்தனர். 1937 கடட் பயிற்சியில் அகில இலங்கை ரீதியாக ஸாஹிரா மாணவர்கள் முதலிடம் பெற்றனர். ஸாஹிராவின் கிரிகட் குழு முதன் முறையாக 1927 இல் இந்தியாவில் ஒரு சுற்றுலாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டது. அது முதல் பல முறை இந்தியாவில் சுற்றுலாக்களை ஸாஹிரா கிரிகட் குழு மேற்கொண்டது.

விளையாட்டுத் துறையில் ஸாஹிரா புகழ் பெற்றது போலவே, கல்வித் துறையிலும் சில சாதனைகளைப் படைத்தது. 1933 - 36 இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற லண்டன் மெற்றிகுலேசன், கேம்பிரிஜ் ஸீனியர் முதலாம் பரீட்சை பெறுபேறுகளில் நாட்டின் ஏனைய பிரபல கல்லூரிகளையும் மிஞ்சிய பெறுபேறுகளைப் பெற்றது. டி.பி. ஜாயா அதிபராகப் பதவியேற்ற காலமுதல் ஸாஹிரா கல்வித்துறையில் அடைந்த வளர்ச்சி காரணமாக உள்ளூர் மாணவர்கள் மட்டுமன்றி வெளியூர் மாணவர்களும் சஹிராவில் சேர்ந்து படிக்கலாயினர். இதனால் பௌதிக வளங்களைப் பெருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு டி.பி. ஜாயா உள்ளானார்.

## பௌதிக வளங்களைப் பெருக்குதல்

1892 இல் ஆரம்பிக்கப்பட்ட ஸாஹிராக் கல்லூரிக்கு கரீம்ஜி, ஜபர்ஜி, எனும் இரு தனவந்தர்களின் நிதி உதவியையும் பெற்று இரு மாடிக் கட்டிடம் ஒன்றை வாப்பிச்சி மரைக்கார் நிருமாணித்தார். இதனை அறபி பாச்சா திறந்து வைத்தார். பத்தாயிரம் ரூபா மேலும் செலவு செய்து, இக்கட்டிடத்தின் கீழ்மாடியை அவர் விசாலமாக்கினார். டி.பி. ஜாயா அவர்கள் அதிபர் பதவியை ஏற்றபின், துரிதமாக வளர்ந்த மாணவர் எண்ணிக்கைக்கு ஈடு செய்வதற்காக, மேலும் பல கட்டிடங்களை நிர்மாணிக்க வேண்டியதாகியது. அதனால் முதற்கண் தற்காலிக ஏற்பாடாக தென்னை ஓலைகளைக் கொண்டு ஆறு வகுப்பறைகளை அமைத்தார். மருதானை மஸ்ஜிதின் அறை ஒன்றையும் வகுப்பறையாகப் பயன்படுத்தினார். கி.பி. 1924 இல் P.B. உம்பிச்சி எனும் கொடை வள்ளல் நிதியைக் கொண்டு பன்னிரண்டு வகுப்பறைகளையும் ஆசியர்களுக்கான அறை ஒன்றையும் இதே ஆண்டில் ஸாஹிராவுக்கான ஒரு விளையாட்டுத் திடலையும் நிர்மாணித்ததுடன், 1930 இல் பாலர் பிரிவுக்கான வகுப்பறைகளையும் நிர்மாணித்தார். மற்றொரு கொடைவள்ளலான N.D.H. அப்துல்கபூர் ஒரு விஞ்ஞான கூடத்தை தன் சொந்த செலவில் நிர்மாணித்தார். ஸாஹிராவின் பிரதான மண்டபத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிப்பதற்குச் செலவான ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவில் அறுபதாயிரம் ரூபாவை N.D.H. அப்துல்கபூர் அவர்கள் அன்பளிப்புச் செய்தார். 1925 இல் இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை கவர்னர் சேர் வில்லியம் மனிங் நட்டினார். 1928 இல் இக்கட்டிடத்தை கவர்னர் சேர் ஹேர்பட் ஸ்டான்லி திறந்து வைத்தார்.

அல்ஹாஜ் N.D.H அப்துல் கபூர் அவர்கள் வழங்கிய ஒரு இலட்சம் ரூபாவைக் கொண்டு டி.பி ஜாயா ஒரு புதிய விடுதி, 'பவிலியன்' ஓய்வறை என்பவற்றுக்கான அத்திவாரத்தை இடுவதற்கு, இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக வந்திருந்த பாகிஸ்தானின் தொடர்புச் சாதன அமைச்சரைக் கொண்டு அடிக்கல் நட வைத்தார். வெளியூர் மாணவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்ததுடன், மாணவர்களின் சுகநலனைப் பேணுமுகமாக பற்சிகிச்சை நிலையம் ஒன்றையும் ஸாஹிரா வளவில் அமைத்துக் கொடுத்தார். இதனை நிறுவுவதற்கான நிதியை A.M.M. அப்துல்காதர் வளங்கினார். இப்பற்சிகிச்சை நிலையத்தை அப்போதைய சுகாதார அமைச்சரான டி.பி. பான பொக்க 1934 இல் திறந்து வைத்தார். ஸாஹிராவுக்கும் முஸ்லிம் பொதுமக்களுக்கும் இடையே உறவை வளர்த்துக் கொள்ளும் முகமாக Cresent - இளம் பிறை எனும் சஞ்சிகை ஒன்றை 1922 வெளியிட்டார்.

## ஸாஹிராவின் கிளைகள்

1929 முதல் ஏற்பட்ட நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஸாஹிராவைப் பாதித்தது. மாணவர் எண்ணிக்கை குறைந்தது. வருகின்ற மாணவர்களும் தமது கட்டணங்களைக் குறைக்குமாறு அல்லது நிதியுதவி தருமாறு கோரினர். இதனால் நிதிஉதவி தேவைப்படும் மாணவர்களின் கட்டணங்களைக் குறைத்தார். அதனை ஈடு செய்ய மருதானை மஸ்ஜித் நிருவாகம் ஓரளவு கை கொடுத்தது. டி.பி. ஜாயா தனது உதவி ஆசிரியர்களின் துணையுடன் வறிய மாணவர்களுக்கு உதவும் நோக்கில் உபகார நிதி ஒன்றை ஆரம்பித்தார். முஸ்லிம் வர்த்தகர்களிடம் உதவிகோரி விடுக்கப்பட்ட வேண்டுகோளும் சாதகமான பிரதிபலனைத் தந்தது. நிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிக்கு மத்தியிலும் ஸாஹிரா தொடர்ந்து இயங்கியது. ஸாஹிராவின் வளர்ச்சிப் பாதையில் 1939ல் ஆரம்பித்த முதலாம் உலக மகாயுத்தம் மற்றொரு தாக்கத்தைத் தோற்றுவித்தது. பிரித்தானிய கூட்டணிக்கு எதிராக ஜப்பான் போரில் பங்கு கொண்டது. 1942 ஏப்ரல் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்புத் துறைமுகம், ரத்மலானை பகுதிகளில் ஜப்பானிய போர்விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. இதனால். உயிர்ச் சேதங்கள் ஏற்படாத போதும், பொது மக்கள் கொழும்பை விட்டு வெளியேறலாயினர். ஸாஹிராக் கட்டிடங்களில் அரசு இராணுவத்தினரை தங்க வைத்தது. அதனால் மாணவர்களுக்கு விடுமுறை கொடுத்து ஸாஹிராவை மூடினர்.

ஸாஹிரா மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது ஜாயாவுக்குப் பெரும் மனவேதனையைக் கொடுத்தது. அதனால் மாற்றுவழி பற்றி யோசித்து முஸ்லிம்கள் செறிவாக வாழும் பகுதிகளில் ஸாஹிராவின் கிளைகளை ஆரம்பிக்கத் தீர்மாணித்தார். குறித்த பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் தனவந்தர்களின் ஆதரவைப் பெற்று மாத்தளை, புத்தளம், கம்பளை, அழுத்கம, ஸ்லேவ் ஐலன்ட் எனும் இடங்களில் ஸாஹிராவின் கிளைகளை ஆரம்பித்தார். ஸஹிராவின் நிர்வாகமே இக் கிளைகளை பரிபாலித்தது.

அழுத்கமையில் 1942-5-7ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஸாஹிராவின் கிளைப் பாடசாலைக்கு M.B. நூர்தீன் பொறுப்பாக இருந்தார். இவர் ஒரு லண்டன் பட்டதாரி ஆவார். 1942-5-15 ஆம் திகதி கம்பளைக் கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அலிகார் பல்கலைக்கழகப் பட்டதாரியான சையித் ரவுப் பாச்சா இக்கிளைக்கு பொறுப்பாக இருந்தார். இவர் சுகயீனம் காரணமாக சிறிது காலத்தில் நீங்கிக் கொண்டார். இதனால் ஜாயா அவர்கள் அலிகார் பல்கலைக்கழகத்தின் மற்றொரு மாணவரான பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை (பிற்காலத்தில் இலங்கையின் கல்வி அமைச்சாராக பணியாற்றியவர்) உப அதிபராக நியதமித்தார். இவர் தன் பணியைத் தொடர்வதற்குத் துணையாக சட்டக் கல்லூரி மாணவர்களாக இருந்த M.M. அப்துல் காதர் (பிற்காலத்தில் அப்பில் நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றியவர்) மாவனல்லையைச் சேர்ந்த A.L.M. ஹாசிம் (பிற்காலத்தில் பரிஸ்டர், ஜனாதிபதி சட்டத்தரணியாகவும், முஸ்லிம் லீக் தலைவராகவும் செயற்பட்டவர்), A.L.M. றதீன் (பிற்காலத்தில் பிரபல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணியாகப் புகழ் பெற்றவர்) ஆகிய மூவரையும் டி.பி. ஜாயா நியமித்து கம்பளைக் கிளைக்கு உயிர் ஊட்டினார்.

1944 இல் மாத்தளை ஸாஹிராவும், 1945 - 2 - 21 ஆம் திகதி புத்தளம் ஸாஹிராவும், 1945 மார்ச் முதலாம் திகதி ஸ்லேவ் ஐலன்ட் ஸாஹிராவும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

புத்தளம் ஸாஹிரா செயற்பட கொழும்பு ஸாஹிராவின் பழைய மாணவர்களான M.H. நைனா மரைக்கார் (பிற்காலத்தில் அமைச்சராகக் கடமையாற்றியவர்), S.A.M. ஹனிபா மரைக்கார், H.S. இஸ்மாயில் (பிற்காலத்தில் சபாநாயகராக கடமையாற்றியவர்) துணையாக இருந்தனர். ஸ்லேவ் ஐலன்ட் ஸாஹிரா இல்வச பாடசாலையாக இயங்கியது. ஸ்லேவ் ஐலன்டில் இயங்கிய முஸ்லிம் கல்விச் சங்கம் அதற்கு நிதியுதவி செய்தது.

டி.பி. ஜாயா விமர்சிக்கப்பட்ட போதும் கூட, அவரது காலத்தில் ஸாஹிரா அடைந்த பௌதீக வளங்களின் பெருக்கம், மாணவர்களின் எண்ணிக்கையின் பெருக்கம், விளையாட்டுத் துறைகளிலும் கல்வித்துறைகளிலும் அடைந்த முன்னேற்றம் என்பன சித்திலெப்பையின் கனவுக்கு செயல்வடிவம் கொடுத்து வளர்ச்சியடைந்தது என்பதைக் காண்பிக்கின்றன.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி ஐவர் ஜன்னிங்ஸ் ஸஹிராவின் பொன் விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி ஸஹிராவின் வெளியீடான இளம் பிறைக்கு எழுதிய வாழ்த்துச் செய்தியில் ஸாஹிரா கல்வித்துறையில் படைத்த சாதனையை 1921-46 வரையிலான பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அடைந்த வளர்ச்சியினூடாக எடுத்துக்காட்டி நிறுவியுள்ளார். அவர் சுட்டிக் காட்டியுள்ள தகவல்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

| ஆண்டு | பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர் எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1921 | 01 | - |
| 1922 | 02 | - |
| 1928 | 03 | 315 |
| 1942 | 25 | 904 |
| 1946 | 37 இவர்களில் இருவர் முஸ்லிம் பெண்களாவர் | 1902 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகவலை அவர் கொடுத்துவிட்டு, பல்கலைக்கழக மாணவர் எண்ணிக்கை 1921 - 46 இடைப்பட்ட காலத்தில் 184 வீதமாக அதிகரிக்க, இதே காலப்பகுதியில் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை 800% வீதமாக அதிகரித்துள்ளது என்று சுட்டிக் காட்டியுள்ளார். முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியின் அதிகரிப்புக்கு ஸாஹிராவின் பங்களிப்பே முக்கிய காரணம் என்பது அவரது கணிப்பாகும்.

ஸாஹிராக் கல்லூரி தனது கல்வி முன்னேற்றத்தால் மட்டுமன்றி, விளையாட்டுத்துறையில் படைத்த சாதனைகள் காரணமாக இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் புகழ்பெற்றது. ஸாஹிராவின் கிரிகட் குழுவினர் இந்தியாவில் சுற்றுலா சென்று படைத்த சாதனை. இந்திய உபகண்ட சிந்தனையாளர்கள், அரசியல் தலைவர்கள் என்பவர்களுடன் ஜாயா கொண்டிருந்த தொடர்பு என்பனவும் ஸாஹிராவின் பிரபல்யத்துக்குக் காரணமாயின. இதனால் உள்நாட்டுப் பிரமுகர்களும், மஹாத்மா காந்தி, ஜவர்ஹலால் நேரு, மௌலானா சவ்கத் அலி போன்ற இந்தியப் பிரமுகர்களும் ஸாஹிராவைத் தரிசித்துச் சென்றனர். இவ்வகையில் நோக்கும் போது ஸாஹிரா முஸ்லிம் சமூகத்தின் நெற்றிப் பொட்டாகப் பிரகாசித்ததைக் காண முடியும்.

ஸாஹிராவின் அதிபர் பதவியை ஏற்று இருபத்து ஏழு வருடகால சேவையை முடித்து, 1948 இல் புதிய 'அதிபரிடம் ஒப்படைக்கும் போது ஸாஹிராவில் ஏற்பட்டிருந்த வளர்ச்சியை அவர் பொறுப்பேற்ற போதிருந்த ஸாஹிராவுடன் ஒப்பு நோக்கினால் ஸாஹிராவின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு எத்தகையது என்று இலகுவாக அறியலாம்.

59 மாணவர்களையும் ஆறு ஆசிரியர்களையும் ஒரே ஒரு கட்டிடத்தையும் மாத்திரம் கொண்டிருந்த ஸஹிராவையே 1921ல் பொறுப்பேற்றார். 1948ல் அதனை விட்டுச் செல்லும் போது 3500 மாணவர்களையும், 150 ஆசிரியர்களையும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் பத்துக் கிளைகளையும் கொண்ட நாட்டின் பிரதம கல்லூரிகளில் ஒன்றாக இக்கல்லூரி வளர்ச்சி கண்டிருந்தது. மூவினத்தையும் சேர்ந்த மாணவர்கள் அங்கு கல்வி பயின்றனர். 1921 இல் பொறுப்பேற்கும் போது ஆங்கிலம் கற்பதில் ஆர்வம் காட்டாத முஸ்லிம் சமூகம் 1948 இல் ஆங்கிலக்கல்வியில் ஆர்வம் காட்டுகின்ற ஒரு சமூகமாக மாறியிருந்தது. பெற்றார் செலவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியை ஊட்ட முனைந்தனர். தியாக உணர்வுடன் செயற்படும் ஆசிரியர் குழாம் ஒன்றையும் விட்டுச் சென்றார். தனக்குப் பின்பு ஸாஹிராக் கல்லூரி தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும் என்ற பேரவாவைக் கொண்டிருந்த ஜாயா, சாதாரண ஒருவரிடம் அதனை ஒப்படைக்காது இலங்கையின் நிருவாகச் சேவையில் இருந்த ஒரே ஒரு முஸ்லிமான A.M.A. அஸீஸ் அவர்களை அதன் அதிபராக்கியமையும் சுட்டிக்காட்டத்தக்க ஒன்றாகும்.

மாணவர்க்குப் போதிக்க வேண்டிய கல்வி பற்றியும் அவருக்குத் தெளிவான ஒரு சிந்தனை இருந்தது. கிளிப் பிள்ளைகளைப் போல பாடங்களை ஒப்புவிக்கும் பிள்ளைகளை அன்றி, சிந்தித்துச் செயற்படும் மாணவர்களை உருவாக்கவே அவர் முயற்சித்தார். அதனால் தான் அவர். ஸாஹிராவின் சிரேஷ்ட மாணவர்களுக்காகவும், கனிஷ்ட மாணவர்களுக்காகவும் வெவ்வேறான இரு முஸ்லிம் மஜ்லிஸ்களை ஏற்படுத்தி, பாராளுமன்ற வடிவில் அவர்களில் இருந்தே தெரிவு செய்யப்பட்ட ஒரு சபாநாயகரின் கீழ் இயங்க ஏற்பாடு செய்தார். மாணவர்களின் திறன்களை வெளிக்கொண்டுவர இது ஒரு சிறந்த களமாகியது. விளையாட்டு, பண்பாட்டு, கலாசார ரீதியான நிகழ்வுகள், என்பனவற்றின் மூலமாக எல்லாம் பல்வேறு துறைகளில் ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்க முனைந்தார்.

மாணவர்களுக்கு சமய சூழலில் கல்வி வழங்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தை அவர் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். பிள்ளைகளின் ஆரம்பக்கல்வி தாய் மொழி மூலமாக அமைதல் வேண்டும் என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். ஆயினும் ஆங்கில மொழிப் பயிற்சியை அவர் இரண்டாம் தரமானதாகக் கருதவில்லை. சமூக முன்னேற்றத்திற்கும் இலங்கையரின் கூட்டு மொத்தமான வளர்ச்சிக்காகவும் ஆங்கிலம் மிக அவசியமானது என்ற கருத்தை அவர் தெளிவுபடுத்தினார். அன்னை ஆயிஷா, அன்னை பாதிமா, போன்றவர்களின் முன்னுதாரணத்தை எடுத்துக்காட்டி முஸ்லிம் பெண்களுக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

ஸாஹிராவில் டி.பி. ஜாயாவிடம் கல்வி பயின்ற புகழ்பெற்ற மாணவர்கள் சிலரின் பெயர்களை ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சருமான அல்ஹாஜ் A.H.M. அஸ்வர் அவர்கள் 31-5-2009 ஞாயிறு ஒப்சொவரில் எழுதிய கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். அப்பெயர்கள் வருமாறு, முன்னாள் சபாநாயகர் எம்.ஏ. பாக்கிர் மாக்கார், முன்னாள் அமைச்சர்களான கலாநிதி பதியுதீன் மஹ்மூத், எம்.எல்.எம். அபூசாலி, M.H.M. நைனா மரைக்கார் நீதிபதிகளான அப்துல்காதர், ஏ.எம். அமீன், எம்.ஏ.எம் ஹுஸைன், முன்னாள் சட்டமா அதிபர் ஏ.சீ.எம். அமீர், பரிஸ்டர் ஏ.எல்.எம். ஹாஷிம் (சவூதி அரேபியாவில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றியவர்) பேராசிரியர் ஏ.எம்.எம். மகீன் (மலேசியப் பல்கலைக்கழகம்)

இ·தன்றி ஆனந்தாக் கல்லூரியில் அவர் கற்பிக்கும் போது இலங்கையில் இடதுசாரிச் சிந்தனையை வளர்த்த கலாநிதி என்.எம். பெரேரா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க, பிலிப் குணவர்த்தன, றொபர்ட் குணவர்தன போன்ற மாணவர்களும் அவரிடம் கல்வி பயின்றார்கள். பாடசாலைப் பருவத்தில் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக பிலிப் குணவர்தன ஆனந்தாக் கல்லூரிக்கு வருவதை நிர்வாகம் தடை செய்தது. அச்சந்தர்ப்பத்தில், பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த அவரை டி.பி ஜாயா தனது வீட்டுக்கு அழைத்து அவருக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தார். இந்த நன்றியை மறவாத பிலிப் குணவர்த்தன ஐக்கிய அமெரிக்காவின் பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்டதும் "சேர்... நீங்கள் இல்லை என்றால் இந்நிலைக்கு இன்று நான் வந்திருக்க முடியாது" என்று குறிப்பிட்டு தனது ஆசிரியரான ஜாயாவுக்கு நன்றிக் கடிதம் எழுதினார்.

மலாயர் பரம்பரையில் பிறந்த அவர் சோனகர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்ட முஸ்லிம்களுடன் நெருக்கமாகப் பழகினார். கிறிஸ்தவப் பாடசாலையில் கல்வி பயின்று பின் பௌத்த, கிறிஸ்தவக் கல்லூரிகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி ஜாயா செயற்பட்டார். பக்தியுள்ள ஒரு முஸ்லிமாக வாழ்ந்து கொண்டே பல்லின சமூகங்களின் மத்தியில் இணக்கமாக வாழ்ந்து காட்டிய ஒரு முன்மாதிரி மனிதனாக ஜாயாவைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை நாட்டில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்த டி.பி.ஜாயா, தான் பெற்ற கல்விச் செல்வத்தின் காரணமாகவே சமூகத்தின் தலைவர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டார். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கமான மலாய இனக்குழுவைச் சேர்ந்தவராக இருந்த போதும் மலாயர் அல்லாத முஸ்லிம்களாலும் கௌரவிக்கப்பட்டார்.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தின் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கத்தாலும், முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்படுத்திய பொருதாரத் தாக்கத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் மாணவர் சமூகத்தின் கல்வி நலன் பாதிக்கப்பட விடாது தொடர்வதற்கு உழைத்தார். முஸ்லிம் சமூகத்தின் கல்வி நலனைக் கருத்திற் கொண்டு தொடர்ந்து செயற்பட்டார். கி.பி 1921 முதல் ஸாஹிராவின் அதிபராகக் கடமையாற்றும் போதே, 1924 இல் இருந்து சட்ட நிரூபண சபையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டதால் நாட்டினதும், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினதும் அரசியல், சமூக நலன்களைப் பேணுவதற்காக உழைத்தார். இதனால் அவர் அன்றைய சமூகத்தின் முதற் பிரஜைகளில் ஒருவராக அரசாங்கத்தால் கணிக்கப்பட்டார்.

## முஸ்லிம் லீகின் தலைவர்

அவர் சமூகப்பணிகளில் அக்கறை காட்டிச் செயற்பட்ட அகில இலங்கை முஸ்லிம் லீகில் இணைந்து கொண்டார். இலங்கை முஸ்லிம் சங்கம் (Ceylon Muslim Association) என்று 1903 இல் ஆரம்பிக்கப்பட்ட சங்கமே பின் இளம் முஸ்லிம் லீக் என்ற பெயரில் செயற்பட்டிருக்க முடியும் என்றும், அதுவே 1924 இல் முஸ்லிம் லீக் என்ற பெயரில் இயங்க ஆரம்பித்தது என்றும் அறிய முடிகிறது. முஸ்லிம் லீக் ஒரு சமூக சேவை இயக்கம் ஆகும். இக்காலப் பகுதியில் சமூக சேவை இயக்கங்கள் இன்னும் சில இருந்தன. அறிஞர் சித்திலெப்பையின் காலத்தில் சமூக சேவைப் பணிகளை மேற்கொள்ள ஜம்இய்யதுல் இஸ்லாஹ் எனும் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் செயலாளராக செயற்பட்ட ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் 1900 இல் சோனகர் சங்கத்தை ஆரம்பித்தார். இச்சங்கமே பின் 1922 இல் அகில இலங்கைச் சோனகர் சங்கம் என்ற பெயரில் புதிய முகமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமளித்தது. இவ்விரு சங்கங்களும் இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தில் இருந்து முஸ்லிம் சமூகத்தை வழிநடத்துவதிலும், கல்வி வாய்ப்பை வளம்படுத்துவதிலும், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நலனைப் பேணுவதிலும் அக்கறை செலுத்தின. இதற்காக இலங்கையில் முஸ்லிம்கள் பரவலாக வாழும் பகுதிகளில் இவ்விரு சங்கங்களும் தத்தம் கிளைகளை அமைத்துக் கொண்டன. டி.பி. ஜாயாவின் அரசியல் பிரவேசத்துக்கு முஸ்லிம் லீக்கும் ஸாஹிராவில் கல்வி கற்ற மாணவர்களும் பெரும் துணையாக இருந்தனர். டி.பி. ஜாயா அவர்களின் அரசியற் பிரவேச காலம் முதல் பாகிஸ்தானுக்குத் தூதுவராகச் செல்லும் காலம் வரை (1924 - 1951) முஸ்லிம் லீக்கிற்கு அவரே தலைமை தாங்கினார். இக்காலப்பகுதியில் முஸ்லிம் சமூகத்திற்கான கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதிலும் அரசியல் உரிமைகளைப் பெறுவதிலும் இவ்விரு இயக்கங்களும் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டன. இவ்விரு சங்கங்களும் இரு அடிப்படைக் கருத்துக்களை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றிருந்தன.

திரு. பொன்னம்பலம் இராமநாதன் 1888 இல் இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாத்தை ஏற்ற தமிழர்கள் என்ற கருத்தை வலியுறுத்திய போது முஸ்லிம்கள் அதனை கடுமையாக விமர்சித்தனர்.

இராமநாதனின் கருத்து, இலங்கை முஸ்லிம்கள் இந்தியாவில் இருந்து வந்த இஸ்லாத்தை ஏற்ற தமிழர்கள். என்ற கருத்தைக் கொடுத்தது. இது முஸ்லிம்களின் இலங்கைக் குடியேற்றம். அவர்களின் பூர்வீகம். அவர்களின் அறபுப் பரம்பரையுடனான் தொடர்பு என்பன பற்றிய முஸ்லிம்களின் நம்பிக்கைக்கு முற்றிலும் மாற்றமான விளக்கத்தைக் கொடுத்ததால், எம்.சி. சித்திலெப்பை இராமநாதனின் கருத்தை விமர்சித்தார். எம்.சி. சித்திலெப்பையின் மாணவனான ஐ.எல்.எம்.ஏ. அஸீஸ் திரு. பொன் இராமநாதனின் கருத்தை விமர்சித்து சோனகர் சங்கத்தில் உரையாற்றியதுடன் நூல் ஒன்றையும் கி.பி. 1907 இல் வெளியிட்டார். இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத் தன்மையையும் அறபுப் பரம்பரைத் தொடர்பையும் காட்டுவதற்காக சோனகர் என்ற பதத்தை அவர்கள் கையாண்டனர். அதனால் தான் ஆரம்பத்தில் சோனகர் சங்கம் என்றும், பின் 1923 இல் அகில இலங்கைச் சோனகர் சங்கம் என்றும் அழைக்கப்பட்ட சங்கம் ஒன்றை ஆரம்பித்து முஸ்லிம்களின் நலனுக்காக உழைத்தனர். இத்தொடரில் தான் சேர் றாசிக் பரீத் (A.R.M. றாசிக்) சோனகர் சங்கத்திற்குத் தலைமை தாங்கி வழி நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர்களான பிரிடிஷார் இலங்கை முஸ்லிம்களை கரையோரச் சோனகர் (Coast moors) என்றும் இலங்கைச் சோனகர் (Ceylon Moors) என்றும் பிரித்து வேறுபடுத்தினர். இவ்வடிப்படையிலேயே சனக் கணக்கெடுப்பையும் மேற்கொண்டனர். கரையோரச் சோனகர் இந்திய உபகண்டத்தில் இருந்து அண்மைக் காலங்களில் வந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் குடியேறிவர்களைக் குறித்தது. சோனகர் என்ற பதம் இலங்கை முஸ்லிம்களின் ஒரு தொகுதியினரான கரையோரச் சோனகர்களை உள்ளடக்கவில்லை என்று சிலர் கருதினர். ஆதலால் அனைத்து முஸ்லிம்களையும் உள்ளடக்கி அவர்களின் பிரச்சினைகளை அணுகுவது நலம் என்ற கருத்தை முஸ்லிம் லீக் கொண்டிருந்தது. அதனால் தான் அது சோனகர் என்ற பதத்துக்குப் பதிலாக முஸ்லிம் என்ற பதத்தைச் சேர்த்து முஸ்லிம் லீக் என்று பெயர் சூட்டிக் கொண்டிருந்தது. சோனகர் என்ற பதம் முஸ்லிம்களின் வரலாற்றுப் பூர்வீகத்தன்மையையும் அதன் தேசியத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆயின் முஸ்லிம் என்ற பதமோ பரந்த பொருளில் இஸ்லாத்தை ஏற்றுச் செயற்படும் அனைவரையும் உள்ளடக்கிப் பொருள் தந்தது. மலாயர்கள், பிரிடிஷ் ஆட்சிக் காலத்தில் குடியேறிய இந்திய முஸ்லிம்கள், பிறநாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் முதலான அனைவரையும் முஸ்லிம் என்ற பதம் உள்ளடக்கிப் பொருள் தந்தது. இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் உள்ளடக்கியதான ஒரு பதத்தால் முஸ்லிம்களை அழைப்பதே பொருத்தமானது என்று டி.பி. ஜாயாவின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் லீக்கினர் கருதினர். இவ்விரு இயக்கத்தின் தலைவர்களும் 1936 முதல் அரசியலில் நேரடியாகப் பங்கு கொண்டு, நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்டனர். இவ்விருவருக்கும் பக்கபலமாக அவர்கள் தலைமை தாங்கிய இயக்கங்கள் இருந்தன. அதனால் சேர். றாசிகின் பணிகள் சோனக சங்கத்தோடு இணைந்து அமைந்தது போல, டி.பி. ஜாயாவின் பணிகள் முஸ்லிம் லீக் உடன் இணைந்ததாக இருந்தது. அரசியற் கட்சிகள் போல முஸ்லிம் லீக்கும் சோனகர் சங்கமும் போட்டி இயக்கங்களாக இல்லாதபோதும், இவ்விரு இயக்கங்களதும் தலைவர்களும் அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்பவர்களாக இருந்தனர். இதனால் சோனகர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் டி.பி. ஜாயாவை ஸாஹிராவை மையமாக வைத்து விமர்சித்தனர்.

டி.பி. ஜாயா அரசியலில் ஈடுபட்டதால் ஸாஹிராவில் கவனம் செலுத்த முடியவில்லை என்பது அவர்களது முக்கிய குற்றச்சாட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சபை அமர்வுகளில் கலந்து கொள்வதாலும், பல்வேறு ஆணைக்குழுக்களில் அவர் பங்கு வகித்ததாலும் பாடசாலை நிர்வாகத்தில் நேரடியாக பங்கு கொள்ளும் கால அவகாசம் குறைகிறது என்றும், அவரது உதவியாசிரியர்கள் கூட அரசியலில் ஈடுபடுபவர்களாக இருக்கின்றனர் என்றும், பாடசாலைப் பெறுபேறுகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன என்றும் குற்றம் சுமத்தினர். ஆதலால் அதிபர் பதவியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று கோரினர். அக்காலம் வெளிவந்த The Search Light எனும் பத்திரிகையின் 1936-06-27, 1936-07-25 ஆம் திகதிகளின் வெளியீட்டில் சிலர் புனைப் பெயரில் மறைந்து நின்று விமர்சனக் கடிதங்கள் பலவற்றை வெளியிட்டனர். ஸாஹிராவின் அதிபர், உதவி ஆசிரியர்கள், பரிபாலன சபை உறுப்பினர்களும் விமர்சிக்கப் பட்டனர். Ceylon Moors National Service Association எனும் சங்கத்தின் சார்பாக ஒரு தூதுக்குழு 1948 மார்ச் ஏழாம் திகதி சாஹிராக் கல்லூரியின் மனேஜரை நேராக சந்தித்து ஸாஹிராவில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது. அரசியல் ஈடுபாடில்லாத ஒரு அதிபர் தான் தமக்குத் தேவை என்பதையும் அக்கலந்துரையாடலின் போது அவர்கள் சுட்டிக் காட்டினர். டி.பி. ஜாயாவின் அரசியல் ஈடுபாடே ஸாஹிராவில் அவர் மேற் கொண்ட செயற்பாடுகள் விமர்சிக்கப்படக் காரணமாயின என்று அனுமானிக்க முடியும்.

## இலங்கை அரசியலில் டி.பி ஜாயா

இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் சிங்கள மன்னர்கள் காலத்தில் இருந்து அரசியலில் பங்கு கொண்டு அமைச்சர்களாகவும், திணைக்களத் தலைவர்களாகவும் கடமையாற்றினர். போத்துக்கீச, ஒல்லாந்த ஆட்சியாளர்களின் ஆதிக்க காலத்தில் முஸ்லிம்கள் தமது அரசியல் உரிமைகளை முற்றாக இழந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கி.பி 1806 இல் இருந்து கலாசார உரிமைகள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

கோல்புறூக் ஆட்சிக் குழுவின் சிபாரிசுக்கமைய இலங்கையில் முதன் முதல் கி.பி 1833 இல் உருவாக்கப்பட்ட சட்ட நிரூபண சபையில் ஏனைய சிறுபான்மையினருக்கு உறுப்பு உரிமைகள் கிடைத்த போதும், முஸ்லிம்களுக்கு அவ்வுரிமை வழங்கப்படவில்லை. எம்.சி சித்திலெப்பையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் படித்த முஸ்லிம்கள் மேற் கொண்ட முயற்சிகள் காரணமாக கி.பி 1889 இல் தான் முதன் முதலில் அவர்கள் அச்சபையில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டனர். 1889 முஹம்மது காசிம் அப்துல் ரகுமான் (முன்னாள் சபாநாயகர் அல் ஹாஜ் M.H முஹம்மத் அவர்களின் தாய் வழிப் பாட்டன்) சட்ட நிருபண சபையின் முதன் முஸ்லிம் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். கி.பி 1897 வரை அவர் அப்பதவியை வகித்தார். பின்வருவோர் அவரையடுத்து அச்சபையில் உறுப்பினராக நியமிக்கப் பட்டனர்.

01. மட்டக்களப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ.எம். சரீப் (1897 - 1900)
02. வாப்பாச்சி மரைக்காரின் மகன் அப்துர் றகுமான் 1900 -1916
03. N.H.M அப்துல் காதர் (1916 - 1924 - நியமன அங்கத்தவர் 1924 - 1931 - மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்)

கோள்புறூக் கொமிஷன் கொடுத்த சட்ட நிருபண சபையின் அரசியல் ஆதிக்கத்தில் திருப்தி காணாத இலங்கை மக்கள், தமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக் கடுமையாக உழைத்தனர். இதனால் குறூ - மக்கலம் சீர்திருத்தத்தின் ஊடாக 1910 இல் படித்தவர்களுக்கும், சொத்துடையவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இவர்கள் தமது பிரதிநிதியை வாக்களித்துத் தெரிவு செய்தனர். இப்புதிய சீர்திருத்தமும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. அதனால் இலங்கை முஸ்லிம் சங்கத்தினர் (Ceylon Muslim Association) அப்போது கவர்னராக கடமையாற்றிய சேர் ஹென்றி மனிங் என்பவரிடம் ஒரு தூதுக் குழுவாகச் சென்று முறையிட்டனர். இந்தத் தூதுக் குழுவில் சட்டத்தரணி கமர் தாஸிம், A.M புவாத், M.L.M ரியாழ், கப்டன் S.L முஹம்மத், டி.பி ஜாயா என்போர் அடங்கியிருந்தனர். சட்ட நிருபண சபைக்கு முஸ்லிம் பிரதி நிதியை நியமிப்பது அறவே திருப்தி இல்லை என்றும், அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் தூதுக் குழுவினர் வலியுறுத்தினர். கவர்னர் ஹென்றி மனிங்கின் ஆலோசனையை ஏற்று பிரிடிஷ் அரசு முஸ்லிம்கள் சார்பாக மூவரை அகில இலங்கை ரீதியான வாக்களிப்பின் ஊடாக தெரிவு செய்யுமாறு அறிவுறுத்தியது. இதனால் 1924 இல் முஸ்லிம்களுக்கு சட்ட நிருபண சபைக்கு மூவரைத் தேர்வு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இம்மூவிடத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் நால்வரும் போட்டியிட்டனர். N.H.M அப்துல் காதர் (இவர் சட்ட நிருபண சபையில் நியமன அங்கத்தவராக இருந்தவர். சமூக நலன்களுக்காக தன் செல்வத்தை வழங்கியவர்.) H.M மாகான் மாகார் (செல்வந்தர், சமூக நலனக்காக உழைப்பவர்.) டி.பி. ஜாயா (B.A பட்டதாரி, ஸாஹிரா கல்லூரி அதிபர்) M.L.M றியாழ் (E.A குணசிங்கம் எனும் தொழில் சங்கவாதியின் தலைமையில் இயங்கிய தொழிற் கட்சியைச் சேர்ந்தவர், ஒரு சிறந்த பேச்சாளர்.) இலங்கை முழுவதும் இருந்த முஸ்லிம் வாக்காளர்களால் இவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தனர். ஒவ்வொரு முஸ்லிம் வாக்காளருக்கும் மூன்று வாக்குகள் இருந்தன. வாக்காளர் அதனைத் தாம் விரும்பிய எவருக்கும் அளிக்க முடியும். இதனால் இந்நால்வரும் இலங்கை முழுவதுமாக பிரயாணம் செய்து முஸ்லிம்களை சந்தித்தனர். இதனால் முஸ்லிம்களுக்கு அரசியல் அறிவு கிடைக்கும் வாய்ப்புக் கிட்டியது. எனினும் மக்கள் அரசியல் ரீதியாகச் சிந்திக்காது, வேட்பாளர்களுடன் தமக்கிருந்த தொடர்புகளை மையமாக வைத்து ஆதரித்தனர். H.M மாகான் மாகார் சாதுலியாத் தரீகாவைச் சேர்ந்தவர். அதனால் கொழும்பு முதல் காலி வரை பரந்த பிரதேசத்தில் வாழ்ந்த சாதுலியா தரீகாவைச் சேர்ந்தவர்கள் அவரை ஆதரித்தனர். காதிரிய்யா தரீக்காவைச் சேர்ந்த வாக்காளர்கள் N.H.M அப்துல் காதரை ஆதரித்தனர். படித்த முஸ்லிம்கள் டி.பி. ஜாயாவை ஆதரித்தனர். அரசியல் சிந்தனை வயப்பட்ட இளம் வாக்காளர்கள் M.L.M றியாழை ஆதரித்தனர். H.M மாகான் மாகார் 10311 வாக்குகளையும், N.H.M அப்துல் காதர் 6705 வாக்குகளையும், டி.பி. ஜாயா 5221 வாக்குகளையும் பெற்றுத் தெரிவாயினர்.

டொனமூர் சீர்திருத்தங்கள் 1931 இல் அமுல் செய்யப்பட்டன. அதற்கமைய வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. இன ரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு, தேர்தல் தொகுதி ரீதியாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கு மேலதிகமாக ஐரோப்பியப் பிரதிநிதிகளாக நால்வரையும், பிரதிநிதித்துவப்படுத்தப்படாத சிறுபான்மையினருக்காக நால்வரையும் அரசாங்க சபைக்கு நியமிக்கும் உரிமை கவர்னர் ஜெனரலுக்கு வழங்கப்பட்டது.

டொனமூர் கொமிஷனின் விதந்துரைப்புக்கு ஏற்ப 1931 இல் நடாத்தப் பட்ட தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியிலிருந்து இருந்து மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் மாகான் மாகார் தெரிவு செய்யப்பட்டார். இத் தேர்தலில் டி.பி. ஜாயா கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிட்டு 11500 வாக்குகளைப் பெற்ற போதும் தோல்வியுற்றார். இதனால் சட்ட நிருபண சபையில் மூவராக இருந்த பிரதிநிதித்துவம் ஒன்றாகக் குறைந்தது. அகில இலங்கை முஸ்லிம் லீக் இத்துர்ப்பாக்கிய நிலையை பிரிடிஷ் அரசுக்கு எடுத்துக் கூறி விமோசனம் பெறுவதற்காக நால்வர் கொண்ட ஒரு குழுவை அனுப்பியது. இத் தூதுக் குழுவில் ஓர் அங்கத்தவராக டி.பி. ஜாயாவும் இடம் பெற்றிருந்தார். 1936 இல் நடைபெற்ற தேர்தலில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் தெரிவு செய்யப்படவில்லை. ஆதலால் முஸ்லிம்கள் இருவரை நியமிக்குமாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் கோரியது. தமது கோரிக்கையை முன் வைக்க கவர்னர் ஜனரலிடம் ஒரு தூதுக் குழு சென்றது. இக்குழுவில் Dr. M.C.M கலீல் இடம் பெற்றிருந்தார். முஸ்லிம்கள் சார்பாக டி.பி ஜாயாவை நியமிக்குமாறு இக்குழு கோரியது. கவர்னர் ஜனரல் சர் ரெஜினல்ட் ஸ்டப்ஸ் ஸாஹிராவின் அதிபராக டி.பி ஜாயா இருப்பதால் அவருக்கு வேலைப்பழு அதிகம் இருக்கும் என்றும் குறிப்பிட்ட போது, Dr. M.C.M கலீல் குறுக்கிட்டு, ஜாயாவுக்கு சார்பாக கருத்துக்களை முன் வைத்ததால் தான் டி.பி. ஜாயா 1936 இல் நியமனம் செய்யப்பட்டார். இக்காலப் பகுதியில் அகில இலங்கை சோனகச் சங்கத்தினரும், முஸ்லிம் லீக்கிற்கு போட்டியாகச் செயற்படும் இயக்கமாக வளர்ந்திருந்தனர். இச்சங்கத்தினர் A.R.M ராசிக் பரீத் அவர்களை அரசாங்க சபைக்கு நியமனம் செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். கவர்னர் ஜனரல் இக்கோரிக்கையையும் ஏற்று கி.பி 1936 இல் அவரையும் அரசாங்க சபைக்கு உறுப்பினராக நியமித்தார்.

டொனமூர் சீர்திருத்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அரசாங்க சபையின் உறுப்பினர்கள் ஏழு செயற்குழுக்க-ளாக்கப்பட்டனர். இக்குழுவினரின் தலைவர் அமைச்சராகக் கருதப்பட்டார். இக்குழுக்கள் பெருமளவில் நிர்வாகத்தை வழி நடத்துவதில் ஈடுபட்டன. கொள்கை மாற்றங்களைச் செய்யும் உரிமை அரசாங்க சபைக்கு இருக்கவில்லை. குழுக்களின் விதந்துரைப்பை ஏற்றுக் கொண்டு, தேசாதிபதியின் அனுமதியோடு நிர்வாகத்துடன் சார்ந்த செயற்பாடுகளை இச்சபை மேற் கொண்டது. அரசாங்க சபையின் நியமன உறுப்பினராகப் பதவியேற்ற டி.பி ஜாயா கல்விக் குழுவின் உறுப்பினராக 1936 - 1947 வரை செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936 இல் அரசாங்க சபைக்கு நியமனம் செய்யப்பட்ட A.R.M றாசிக் பரீத் அவர்களும் கல்விக் குழுவின் உறுப்பினராக இருந்தார். முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும் என்று இவ்விருவரும் இக்குழுவினூடாகச் செயற்பட்டனர்.

பிரபல பாடசாலைகளில் உதவியாசிரியராகவும், ஸாஹிராவின் அதிபராகவும், அகில இலங்கைக்குமான அரசு நியமித்த கல்வி ஆலோசனைக் குழுவில் 1926 முதல் உறுப்பினராகவும் டி.பி. ஜாயா செயல்பட்டுக் கல்வித்துறை சார்ந்த அனுபவங்களையும் ஆழ்ந்த அறிவையும் பெற்றிருந்தார். அதனால் கல்விக் குழுவை வழி நடத்தும் ஒரு முன்னோடியாக அவரால் செயற்பட முடிந்தது. அதன்படி, நாட்டு மக்களின் கல்வி விருத்திக்கும், முஸ்லிம் சமுகத்தின் கல்வித் தேவைக்கும் அவர் ஆக்கபூர்வமான வழிகாட்டுதலை வழங்கினார்.

1936.08.04 ஆம் திகதி A.R.M றாசிக் பரீத் அவர்கள் அறபு ஆசிரியர்களை முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும் என்று முன்மொழிந்து பிரேரணையை, கம்பளை தொகுதியின் உறுப்பினராக இருந்த R.S.S குனவர்தனா அவர்கள் ஆமோதித்தார். இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப்பட்டு, கல்விச் செயற்குழுவின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்ட போது டி.பி. ஜாயா அவர்கள் பக்க துணையாக இருந்து ஊக்குவித்தமை குறிப்பிடத் தக்கது.

அரசாங்க சபையின் காலப்பிரிவில் நடைமுறைப் படுத்தப்பட்ட கல்விச் செயற்குழுவில், 1936 இல் இருந்து 1947 வரை டி.பி. ஜாயா உறுப்பினராக இருந்தார். இக்காலப்பகுதியில் கல்விச் செயற்குழு விதந்துரைத்த எல்லா நடவடிக்கைகளிலும் டி.பி. ஜாயாவுக்கு முக்கிய பங்குண்டு. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளிலும் அவர் பங்கு கொண்டிருந்தார். முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை, முஸ்லிம் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல், அறபுக் கல்லூரிகளை அங்கீகரித்து, அவை வழங்கும் சான்றிதழை அரசு அங்கீகரித்தல், பாடசாலையில் சமய பாடத்தை போதித்தல் போன்ற செயற்பாடுகளில் எல்லாம் டி.பி. ஜாயாவுக்கு முக்கிய பங்கு இருந்தது. 1939 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் நான்காம் பிரிவு பாடசாலைகளில் சமயக்கல்வி போதிக்கப்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று வலியுருத்துகிறது. மாணவர்களின் பெற்றோர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களோ அந்த சமயத்தை அந்த மாணவர்களுக்கு போதிக்க வேண்டும் என்று அச்சட்டம் அறிவுறுத்தியது. இதனால் முஸ்லிம்கள் அச்சமின்றி எந்தப் பாடசாலையிலும் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு மேற்குறித்த கல்விக் குழுவே பக்க துணையாக இருந்தது.

சோல்பரி கொமிஷனின் சிபாரிசுக்கு இணங்க, இலங்கையில் முதன் முதலில் 1947 இல் கட்சி அடிப்படையில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலின் போது கொழும்பு மத்திய தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் டி.பி. ஜாயா போட்டியிட்டார். இத்தொகுதியிலிருந்து மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட ஏற்பாடாகி இருந்தது. பாரளுமன்றத்துக்கு இத் தொகுதியின் இரண்டாம் உறுப்பினராக டி.பி. ஜாயா தெரிவு செய்யப் பட்டார். சுதந்திரத்திற்குப் பின்னான முதலாம் அமைச்சரவையில் தொழில், சமூக சேவை அமைச்சராக டி.பி. ஜாயா நியமிக்கப்பட்டார். இலங்கையின் தேசியக் கொடியை வடிவமைப்பதற்காக பிரதமர் திரு.டி.எஸ் சேனாநாயக 1948-03-06 ஆம் திகதி S.W.R.D. பண்டாரநாயகாவின் தலைமையில் இயங்கும் ஏழுபேர் கொண்ட ஒரு குழுவை நியமித்தார். சேர் ஜோன் கொத்தலாவல J.R. ஜயவர்தன Dr. D.L.A. ராஜபக்ஸ G.G. பொன்னம்பலம் செனட்டர் S. நடேசன் போன்ற முக்கிய பிரமுகர்களுடன் டி.பி. ஜாயாவும் ஓர் உறுப்பினராக அக்குழுவில் நியமிக்கப்பட்டிருந்தார்.

சுதந்திர இலங்கையின் முதற் பிரதமரான டீ.எஸ் சேனானாயக அவர்கள் நாட்டின் நலன் கருதி பாகிஸ்தானின் தூதுவர் பதவியைப் பொறுப்பேற்குமாறு கேட்டதற்கிணங்க, 1951 இல் டி.பி.ஜாயா அமைச்சர் பதவியையும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்தார். 1957 இல் பாகிஸ்தானில் இருந்து நாடு திரும்பிய அவர் பாராளுமன்ற அரசியலில் ஈடுபடாத போதும் சமூக மேம்பாட்டுப் பணிகளில் உழைத்தார். 1960 மார்ச் மாதம் நடை பெற்ற தேர்தலில் டட்லிசேனாநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்றது. பிரதமராகப் பதவியேற்ற டட்லிசேனாநாயக்கா டி.பி. ஜாயா அவர்களை நியமன அங்கத்தவராக பிரதிநிதிகள் சபைக்கு நியமித்தார். பெரும்பான்மைப் பலம் இல்லாததால் மூன்று மாதங்களின் பின் ஆட்சி கலைக்கப்பட்டதால் டி.பி ஜாயா அவர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் முற்றுப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களில் டி.பி. ஜாயா ஒருவர் மட்டும் தான் கோல்புறூக் கொமிஷனின் விதிந்துரைப்புக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட சட்ட நிருபண சபையிலும் (1924 - 1931), டொனமூர் கொமிஷன் சிபாரிசுக்கமைய அமைக்கப்பட்ட அரசாங்க சபையிலும் (1936-1947), சோல்பரி சிபாரிசின் வழி உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்திலும் (1947-1950) உறுப்புரிமை வகித்தவர் என்பது சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

டி.பி. ஜாயா சட்ட நிருபண சபையில் 1924-10-31 ஆம் திகதி, 1924-1925 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு தனது கன்னிப் பேச்சை ஆற்றினார். வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செலவு போக மீதியுள்ள பணத்தை நாட்டு மக்களின் கல்வி நலத்தை மேம்படுத்த உபயோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். முஸ்லிம்கள் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளார்கள் என்றும், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப பெற்றோரை வலியுறுத்த வேண்டும் என்றும், முஸ்லிம் மாணவர்களுக்காக அரச பாடசாலைகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்றும், ஆசிரியர்களின் சம்பளத்தினைக் கூட்டி ஓய்வூதியமும் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 1925-07-25 ஆம் திகதி சட்ட நிருபண சபையில் முஸ்லிம் அரசாங்க உத்தியோத்தர்களுக்கு வெள்ளிக் கிழமை ஜும்ஆவுக்குப் போக லீவு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற மசோதா முன்வைக்கப்பட்ட போது, டி.பி. ஜாயா இக்கோரிக்கையை நிறைவேற்ற அரசு தயங்கத் தேவையில்லை. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் உள்ள ஏனைய நாடுகளின் ஆட்சியாளர்கள் இக்கோரிக்கைக்குச் சாதகமாகவே நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தியாவின் மட்ராஸ் பிரஸிடன்ஸியிலும், வங்காளத்திலும் அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டி, இலங்கையிலும் இவ்வுரிமை முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

1938-10-20 ஆம் திகதி சட்டசபையில் அவர் உரையாற்றும் போது, சமய சூழலில் கல்வி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். சமய சூழலில் கல்வி வழங்கப்படுவதை சில உறுப்பினர்கள் விமர்சித்தனர். இவ்விமர்சனத்தை நிராகரித்த டி.பி. ஜாயா, இலங்கையின் வரலாற்றுக் காலங்களில், குறிப்பாக பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் இருந்து இது கால வரை சமயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியில் கல்வி வழங்கப்பட்டுள்ளது என்ற வரலாற்றை எடுத்துக் காட்டி, பௌத்த மத குருமார்கள் சிறார்களுக்கு இலவசக் கல்வியை வழங்கிய வரலாற்றையும், ஐரோப்பியர் காலத்தில் சமயச் சூழலிலேயே கல்வி வழங்கப் பட்டது என்பதையும், இச்சபையில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் மிஷனரிப் பாடசாலைகளில் பயின்று வந்தவர்களே என்றும் எடுத்துக் காட்டித் தன் கருத்தை நிறுவினார்.

ஆசிரியர்களின் நலன்களைப் பேணுவதற்காக அவர் சட்ட நிருபண சபை, அரசாங்க சபை என்பவற்றிலும், அவற்றுக்கு வெளியிலும் கணிசமான பங்காற்றியுள்ளார். அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதிலும், ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும் அவர் ஆர்வம் காட்டினார். ஆசிரியர் சங்கத் தலைவராக நீண்டகாலமாகப் பணியாற்றியதுடன், அதிபர்கள் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் அவர் ஆசிரியர்களின் நலன்களைப் பேணுவதில் அக்கறை காட்டினார். முஸ்லிம்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், பெண்களுக்கு கல்வியூட்டுவதில் ஆர்வத்தைக் கூட்டவும் மேடைப் பேச்சுகளை நன்கு பயன்படுத்திக் கொண்டார். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற மகாநாடுகளில் கலந்து கொண்டார். கல்வித்துறை மேம்பாட்டுக்காக அரசு நியமித்த ஆணைக்குழுக்கள் பலவற்றில் உறுப்பினராக இருந்தார். அவற்றில் பின்வருவன சிலவாகும். 1926 இல் நியமிக்கப்பட்ட கல்விக் கொமிஷன், ஆசிரியர் பென்ஷன் பற்றிய தெரிவுக்குழு, ஆசிரியர் சம்பளக் குழு, 1943 இன் கல்வி பற்றிய சிறப்புக்குழு என்பவற்றில் உறுப்பினராக இருந்ததுடன், பல்கலைக்கழக கௌன்சிலில் 1939- 42 வரை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டம் சரிஆவை அடிப்படையாக கொண்டது. இதனை அரச அனுசரணையுடன் இலங்கையில் அமுல் செய்ய கி.பி. 1806 முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1806ல் அறிமுகப்படுத்தப்பட்ட விதிகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி, விவாகப்பதிவைக் கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு முயற்சியை எம்.சி. சித்திலெப்பையின் தலைமையிலான படித்த குழுவினர் எடுத்தனர். இதன் காரணமாக கி.பி. 1888 இல் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை எதிர்பார்த்த பலனைத் தராததால் மீண்டும் முஸ்லிம்கள் சீர்திருத்தத்துக்காக குரல் கொடுத்தனர். இதனால் முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாக விவாகப்பதிவுச் சட்டம் பற்றி 1929 இல் சட்ட நிருபண சபையில் கலந்துரையாடி சீர்திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன. சட்டமா அதிபராக இருந்த M.T. அக்பர் தலைமையில் தேவையான திருத்தங்களை சிபாரிசு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் ஓர் உறுப்பினராக டி.பி. ஜாயாவும் நியமிக்கப்பட்டார். இதன் சீர்திருத்தங்கள் அமுல் செய்வதற்குத் தேவையான விதிகளை உருவாக்க, பதிவாளர் நாயகத்தின் தலைமையில் ஒரு குழுவை 1939 இல் அரசு நியமித்தது. அக்காலப்பருவத்தில் அரசாங்க சபையில் அங்கத்தவர்களாக இருந்த டி.பி. ஜாயாவும், A.R.M. அப்துர்றாசிகும் உள்ளிட்ட ஐவர் உறுப்பினர்களாக இருந்தனர். இதன் சிபாரிசுகளின் அடிப்படையில் தான் 1954 முதல் நடைமுறையில் உள்ள 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் ஓரங்கமாக முஸ்லிம் விவாக, விவாகரத்து ஆலோசனை சபை ஒன்று நடைமுறைக்கு வந்தது. இலங்கை முஸ்லிம்களின் விவாக, விவாகரத்து சட்டத்தின் அமுலாக்கலில் டி.பி. ஜாயா அவர்கள் பங்கு கொண்டு உழைத்துள்ளதை இதன் மூலம் அறிய முடியும்.

நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் சீர்திருத்தம் இலங்கையின் பெரும்பான்மைக் குடிமக்களையோ சிறுபான்மையினரையோ திருப்திப்படுத்தவில்லை. முஸ்லிம் சிறுபான்மையினரால் தொகுதிவாரியான பிரதிநிதித்துவத்தின் மூலம் தமது ஒரு பிரதிநிதியையேனும் தெரிவு செய்து கொள்ள முடியவில்லை; இதனால் முஸ்லிம்கள் அரசாங்க சபை அமைப்பில் திருப்தி காணவில்லை. அரசாங்க சபையில் பெரும்பான்மைப் பலத்துடன் மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றும் எந்த ஒரு தீர்மானத்தையும் தேசாதிபதியால் ரத்து செய்து விட முடியுமாகி இருந்ததால் பெரும்பான்மைக் குடிமக்களான சிங்கள மக்களும் அரசாங்க சபை அமைப்பில் திருப்தி காணவில்லை. ஆதலால் டொமினியன் அந்தஸ்து தருமாறு கோரி இலங்கைக் குடிமக்கள் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கை பற்றி ஆராய சோல்பரி பிரபுவின் தலைமையில் இலங்கை வந்த குழுவினர் அரசியல் சீர்திருத்தம் ஒன்றை விதந்துரைத்தனர். சோல்பரி சீர்திருத்தம் 1945/11/09 ஆம் திகதி அரசாங்க சபையின் அங்கீகாரத்துக்காக வாக்களிப்புக்கு விடப்பட்டது. முஸ்லிம் உறுப்பினர் அனைவரும் பிரேரணைக்கு சார்பாக வாக்களித்தனர். அச்சந்தர்ப்பத்திலே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை தத்தம் பேச்சில் டி.பி. ஜாயா அவர்களும் ஏ.ஆர்.எம்.ஏ ராசிக் பரீத் அவர்களும் முன்வைத்தனர். டி.பி. ஜாயா அவர்கள் பேசும் போது பின்வரும் கருத்தை வலியுறுத்தினார். "இலங்கை முஸ்லிம் சமூகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கை முஸ்லிம் லீக் இலங்கையின் பல பகுதிகளையும் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்களுடன் இம்மசோதா பற்றிக் கலந்துரையாடி, அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ஆதலால் முஸ்லிம் சமூகத்தின் முழு ஆதரவுடன் நான் பேசுகின்றேன். இலங்கையின் அரசியல் சுதந்திரத்துக்காக தமது நலன்களையும் வரப்பிரசாதங்களையும் தியாகம் செய்தேனும் எல்லா வகையான நடவடிக்கையையும் எடுக்க முஸ்லிம் சமூகம் தயாராக உள்ளது. சுதந்திரத்துக்காகப் போராடுவது முஸ்லிம்களின் மரபும் கடமையுமாகும்." அச்சபையின் சபை முதல்வரான S.W.R.D. பண்டாரநாயகா உரையாற்றும் போது இந்நாட்டு மக்களிடையே ஐக்கியத்தை உருவாக்கி சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள டி.பி. ஜாயாவின் உரை பெரிதும் உதவும் என்று பாராட்டினர்.

வெள்ளை அறிக்கை ஒன்றால் மறுசீரமைக்கப்பட்ட சோல்பரிப் பிரபுவின் சிபார்சினடிப்படையிலான 1946-05-15 யின் மசோதா அரசாங்க சபையில் அங்கீகரிக்கப்பட்டது. இதனடிப்படையில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள் உருவாக்கப்பட்டன. 1946 செப்டம்பரில் ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்பட்ட போது டி.பி. ஜாயாவின் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் லீக் சங்கத்தினரும், A.R.M.A. றாசிக் தலைமையிலான அகில இலங்கை சோனகர் சங்கத்தினரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். இதன் மூலம் இலங்கை முஸ்லிம்கள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் பெரும்பான்மை மக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டனர். பெரும்பான்மை மக்கள் முஸ்லிம் மக்களிடம் வைத்திருந்த நம்பிக்கையினூடாக பொரலை, கலகெதர, பலாங்கொடை, ஹரிஸ்பத்துவ போன்ற சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த தேர்தல் தொகுதிகளில் இருந்தும் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

## முஸ்லிம் உலக அரங்கில் டி.பி. ஜாயா

டி.பி. ஜாயா அவர்களின் வாலிபப் பருவகாலத்தில் உலகமகா யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. வரலாற்றுப் பாடத்தைத் தனது பட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்கு ஒரு பாடமாக எடுத்த டி.பி. ஜாயா உலக மகா யுத்தம் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் ஊன்றிக் கவனித்தமை புதுமை அல்ல. யுத்தத்தின் முடிவில் முஸ்லிம் உலகுக்குத் தலைமை தாங்கிய துருக்கி தோல்வி அடைந்தது. அதன் கீழ் இருந்த முஸ்லிம் நாடுகளும் பிரதேசங்களும் பறிக்கப்பட்டு துருக்கி அநாதை நிலைக்குத் தள்ளப்பட்டது. பிரித்தானிய கூட்டுப்படை அதிலும் திருப்தியடையாது உலக முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைமைத்துவத்தை தகர்த்து, முஸ்லிம்களின் ஒற்றுமையைக் குலைத்து, முஸ்லிம் நாடுகளைச் சிதறச் செய்யும் நோக்கில் கிலாபத்தை ஒழிக்கவும் நடவடிக்கை எடுத்தது. அதற்காக துருக்கியில் ஆட்சிப் பொறுப்பைப் கைப்பற்றிய தேசியவாதியான முஸ்தபா கமாலின் கிலாபத் ஒழிப்பு முயற்சிக்கு தனது ஆசிர்வாதத்தை வழங்கியது. முஸ்தபா கமாலின் தலைமையில் இயங்கிய தேசிய அசெம்பிளி 1924-03-03 ஆம் திகதி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி கிலாபத்தை ஒழித்தது.

முதலாம் உலகமகா யுத்தத்தில் பிரிடிஷாரின் வெற்றிக்காக இந்தியா பத்து லட்சம் போர்வீரர்களையும், வருடம் தோறும் பத்துகோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதியையும் வழங்கி பிரிட்டனின் வெற்றிக்கு வழிகோலியது. அதனால் இந்தியக் குடிமக்களின் அபிலாசைகளைப் பிரிட்டன் நிறைவேற்ற வேண்டும் என்று இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து இந்தியரும் கருதினர். இதனால் கிலாபத்தை மீளமைக்கும் போராட்டம் ஒன்றை இந்தியக் குடிமக்கள் முன்னெடுத்தனர்.

கிலாபத் இயக்கம் என்று வழங்கப்பட்ட இப்போராட்டத்தை மௌலானா முகம்மதலி முடுக்கிவிட்டார். இவ்வியக்கத்துக்கு மகாத்மா காந்தி தலைமை தாங்கினார்.

இலங்கையில் கிலாபத் இயக்கத்தை டி.பி. ஜாயாவே முன் எடுத்தார். கிலாபத்தை ஒழிக்க எடுக்கும் முயற்சிக்கு எதிராக தனது ஆதரவாளர்களின் துணையுடன் பல கூட்டங்களை நடாத்தினார். 1928 இல் மெட்ராஸில் நடைபெற்ற கிலாபத் இயக்கக் கூட்டத்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று அக்கூட்டத்தில் கலந்து கொண்டார். இவ்வாறு உலக முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் அவர் தன்னை இணைத்துக் கொண்டார். கிலாபத்தை மீள் அமைப்பதற்கு குரல் கொடுத்த கூட்டங்களில் முஸ்லிம்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 1915 இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரத்தினால் கசந்து போயிருந்த இரு சமூகங்களும் ஓரணியாகத் திரண்டு செயற்படும் வாய்ப்பை கிலாபத் இயக்கம் பெற்றுக் கொடுத்தது. 1905 இல் இடம் பெற்ற துருக்கித் தொப்பி விவகாரம் இலங்கை முஸ்லிம்கள் மருதானையில் ஒரு பேரணியாகத் திரண்டு, முஸ்லிம்களின் நலனுக்குக் குரல் கொடுக்க ஓர் இயக்கமாகச் செயற்பட வழிகோலியது. அதன்பின் ஜாயா முன் எடுத்த கிலாபத் இயக்கம் தான் முஸ்லிம்களை ஒரு தலைமையின் கீழ் ஒன்றிணைத்து குரல் கொடுக்க வழியமைத்தது. கிலாபத் இயக்கம் தன் இலட்சியத்தில் தோல்வியடைந்தாலும், இலங்கையில் முஸ்லிம்கள் தம் தனித்துவத்தைப் பேணிக்காத்ததற்கும் சிங்கள, தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஓரணியில் திரண்டு செயற்படுவதற்குமான உணர்வுகளை கொடுத்தது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின போது, துருக்கியரிடம் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவதாகவும், அறபு மண்ணை அறேபியரிடமே ஒப்படைப்பதாகவும் பிரிட்டன் தலைமையிலான நேசப் படையினர் வாக்களித்தனர். இவ்வாக்குறுதியை நம்பிய அறேபியர் தம் சமயத்தவர்களான துருக்கியருக்கு எதிராகப் போராடி, நேசப் படையினரின் கையைப் பலப்படுத்தினர். போரில் வெற்றி பெற்றதும், இவ்வுதவிக்குப் பிரதியுபகாரம் செய்வதற்குப் பதிலாக, அறபுப் பிரதேசங்களை பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் தமக்கிடையே பங்கு போட்டுக் கொண்டது மட்டுமல்லாமல், முஸ்லிம்களின் புண்ணிய தலமும் அறேபியர்களின் தாயகமுமாகிய பலஸ்தீனை யூதர்களுக்குத் தாரைவார்த்து, யூத நாடு ஒன்றை உருவாக்க, தாம் அமைத்துக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை மூலம் ஏற்பாடு செய்தனர். இதனால் முஸ்லிம் உலகெங்கும் கடும் எதிர்ப்பலைகள் தோன்றின.

பலஸ்தீன் குடிமக்களை அகதிகளாக்கி, அவர்களின் தாயகத்தை அபகரித்து, இஸ்ரவேலர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அயோக்கியத்தனம் இலங்கை முஸ்லிம்களின் உள்ளத்தைப் பெரிதும் பாதித்தது. டி.பி. ஜாயா உட்பட்ட பிரமுகர்கள் பலர் நாடளாவிய ரீதியில் இக்கொடுமை பற்றி மக்களை அறிவுறுத்தினர். தமது எதிர்ப்பைக் காண்பிப்பதற்காக மருதானை ஜும்ஆ மஸ்ஜித் முன்றலில் ஒரு பெருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தை நடாத்தினர். இக்கூட்டத்திற்கு அரசாங்க சபை உறுப்பினராக இருந்த சேர் முஹம்மத் மாக்கான் மாகார் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் டி.பி. ஜாயா பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

> "முஸ்லிம்களின் இம்மாபெரும் பேரணி ஆங்கில அமெரிக்க கொமிஷன் பலஸ்தீன் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையைக் கடுமையாகக் கண்டித்து நிராகரிக்கின்றது. அத்துடன் பலஸ்தீன் சுதந்திரமான ஓர் அறபு நாடாக அங்கீகரிக்குமாறு கோருகிறது."

பலஸ்தீனைப் பங்குபோட்டு இஸ்ரவேலுக்கு பகிர்ந்தளிக்கும் ஸியனிட்களின் முயற்சியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக டி.பி. ஜாயாவும், காரியதரிசியாக M.C.M. கலீல் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மலைநாட்டிலும் கரைநாடுகளிலும் உள்ள பல நகர்களில் பொதுக்கூட்டங்களைக் கூட்டி முஸ்லிம்கள் தம் எதிர்ப்பைக் காட்டினர். இந்நடவடிக்கைகளில் முஸ்லிம்களுடன் சிங்களவர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நடவடிக்கைகள் பற்றி Ceylon Daily News 1946 மே மாத வெளியீடொன்றில் எழுதிய போது "பலஸ்தீன் பிரச்சனை முஸ்லிம்களது அனுதாபத்தை மட்டுமன்றி முழுமையான சிங்கள மக்களின் அனுதாபத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. அறபு மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பலஸ்தீனில் யூதர்களைக் குடியேற்றும் சதித்திட்டம் ஒன்றுள்ளது. வெறுமையான நிலப்பரப்புள்ள அவுஸ்திரேலியா, கனடா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் அவர்களை ஏன் குடியேற்ற முடியாது. பலஸ்தீனில் அவர்களைக் குடியேற்றுவது மிகப்பெரும் அநியாயம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் எஜமான்களாக இருந்து ஆட்சி செய்து வரும் பிரித்தானியருக்கு எதிராகவே கிலாபத் ஒழிப்பு விடயத்திலும் பலஸ்தீனைப் பங்குபோடும் விடயத்திலும் இலங்கை மக்கள், குறிப்பாக முஸ்லிம்கள் அணிதிரண்டார்கள். இது காலனித்துவ ஆட்சிக்கு எதிரான உணர்வுகளைத் தோற்றுவித்து சுதந்திரம் பெற வேண்டும் என்ற தாக்கத்தையும் இலங்கை மக்களிடம் ஏற்படுத்த உதவியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் நான்காம் தசாப்தத்தில் இந்திய உபகண்டத்தில் பாகிஸ்தான் என்றொரு புதிய நாடு உதயமாகியது. அல்லாமா இக்பாலின் சிந்தனையில் உருவான இந்நாடு காஇதே அ.'.ழம் முஹம்மதலி ஜின்னாவின் செயற்திறனில் 1947 இல் உதயம் பெற்றது. இதற்கான போராட்டம் ஒன்று இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இருந்தே ஆரம்பமாகியது. இந்தியாவில் ஆட்சிசெய்த காலனித்துவ ஆட்சியாளர்களான ஆங்கிலேயரதும் இந்தியாவின் பெரும்பான்மை மக்களான இந்துக்களதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாகிஸ்தான் பிரதேசம் என்று கணிக்கப்படாத இந்திய பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் ஒத்துழைப்பின்மைக்கு மத்தியிலுமே பாகிஸ்தான் தோன்றியது. ஜின்னாவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அகில இந்திய முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் போராட்டம், இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஜனாப் டி.பி. ஜாயாவின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் லீக் பாகிஸ்தான் போராட்டத்தை இலங்கையின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலிக்கச் செய்தது. பொதுக்கூட்டங்களை நடாத்தியும், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் இலங்கை மக்களை பாகிஸ்தான் கோரிக்கைக்கு சார்பானவர்களாக்க முஸ்லிம் லீக் முயற்சித்தது. 1946 செப்டம்பரில் ஒரு தினத்தில் இந்திய முஸ்லிம் லீக் ஹர்தாலை நடத்தியது. அத்தினத்தில் இலங்கையில் கடைகளை மூடிவிடுமாறு அகில இலங்கை முஸ்லிம் லீக் விடுத்த அழைப்புக்கு இலங்கை மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்கினர். இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த சட்டத்தரணிகள் வர்த்தகர்கள் இளைஞர்கள் இவ்வழைப்புக்கு ஒத்துழைப்பு நல்கினர்.

டி.பி. ஜாயாவின் வழிநடத்தலால் நாட்டின் பல பகுதிகளில் இருந்த முஸ்லிம் லீக்கின் கிளைகள் உந்தப்பட்டன. உள்நாட்டின் பல பகுதிகளில் பாகிஸ்தானின் கோரிக்கையை ஆதரித்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. கொழும்பில் நடைபெற்ற பொதுக்கூட்ட மைதானத்துக்கு ஜின்னா மைதானம் என்று பெயர் சூட்டினர். இக்கூட்டத்துக்கு வருகை தந்த டி.பி. ஜாயாவை இலங்கையின் ஜின்னா என்றழைத்து மக்கள் உற்சாக மிகுதியால் அவரை மேடைக்குத் தூக்கி வந்தனர். கண்டியில் முஸ்லிம் லீக் நிறுவிய மண்டபத்துக்கு ஜின்னா ஹோல் என்று பெயர் சூட்டப்பட்டது. இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் பலர் ஜின்னாத் (ஜின்னா அணிந்தது மாதிரியான தொப்பிகளை) தொப்பிகளை அணிந்திருந்தனர். இக்காலப்பகுதியில் இயங்கிய சோனகர் சங்கம் இயக்க ரீதியாக பாகிஸ்தான் போராட்டத்தில் கலந்து கொள்ளாத போதிலும் இயக்க வேறுபாடு இன்றி அனைத்து முஸ்லிம்களும் இக்கோரிக்கைக்கு ஆதரவு நல்கினர். முஸ்லிம் லீக் மாநாடொன்றில் (1946 இல் நடைபெற்றதாக இருக்க முடியும்) இந்தியா இரு நாடாகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும், இலங்கை ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதனால் தான் இலங்கையில் 1947 மார்ச் 31 ஆம் திகதி வெளிவந்த ஆங்கில நாளேடு ஒன்று முஸ்லிம் லீக் இந்தியாவைப் பிரித்தது, இலங்கையை ஐக்கியப்படுத்தியது என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டது. ஜாயா இலங்கையில் இப்போராட்டத்தை முன்னெடுத்தது போலவே அகில இந்திய முஸ்லிம் லீக்கின் மாநாடுகளிலும் கலந்து கொண்டு ஊக்குவித்தார்.

இலங்கையும் இந்தியாவும் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இருந்தன. ஆதலால் இந்திய முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானைக் கொடு என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை வற்புறுத்தும் நோக்காகவே இலங்கையில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் இப்போராட்டத்தை T.B. ஜாயா முன்னெடுத்ததால் தான் முஸ்லிம் பொதுமக்கள் அவரை இலங்கையின் ஜின்னா என்று அழைக்கலாயினர்.

இப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு டி.பி. ஜாயாவுக்கு பெருந்துணிவு இருந்திருத்தல் வேண்டும். அவர் மேற்கொண்ட இப்போராட்டங்கள் இந்நாட்டை ஆட்சி செய்யும் காலனித்துவ ஆட்சியாளரின் நலன்களுக்கு முரணானவை. அ∴தன்றி இந்தியாவில் இருந்து பாகிஸ்தானை பிரித்து வேறுபடுத்த விரும்பாத இந்தியத் தமிழர்களையும் இந்திய முஸ்லிம்களையும் உள்ளடக்கிய கொழும்பு மத்திய தொகுதியில் வாழ்ந்த பலரது ஆதரவை அவர் இழக்கவும் கூடும். ஓர் அரசியல்வாதி மக்கள் ஆதரவை இழப்பது என்பது அவரின் எதிர்கால அரசியல் வாழ்வையே பாதிக்கக்கூடிய விடயமாகும். அது மாத்திரமன்றி அவரது நெருங்கிய நண்பர்கள் பலர் தமிழர்களாவர். அரசாங்க சபையில் இருந்த அவரது நண்பர்களான தமிழ் உறுப்பினர்கள் பெரிய சுந்தரம், எஸ். நடேசன் பாகிஸ்தான் உருவாக்கத்தை எதிர்த்து அரசியல் மேடைகளில் உரையாற்றினர். அவர்களதும் ஸாஹிராவில் கடமையாற்றிய தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாசிரியர்கள், போன்றவர்களதும் அதிருப்தியையும் அவர் பெற வேண்டியிருந்தது. இந்த இழப்பை எல்லாம் பொருட்படுத்தாது அவர் பாகிஸ்தானின் உருவாக்கத்துக்காகக் குரல் கொடுத்தமை அவரது துணிவையும், தான் சார்ந்த சமூக நலனுக்காக தன் சுய நலத்தை அர்ப்பணம் செய்யும் பக்குவத்தை அவர் அடைந்திருந்தமையையும் காண்பிக்கின்றது.

## இலங்கையின் தூதுவராக பாகிஸ்தானில் டி.பி. ஜாயா

பிரதமர் டி.எஸ். சேனாநாயக்காவின் அமைச் சரவையில் தொழில், சமூக சேவை அமைச்சராக ஜாயா கடமையாற்றி வரும் போது, நாட்டின் நலன் கருதி பாகிஸ்தானுக்கு இலங்கைத் தூதுவராகச் செல்லுமாறு அவரைப் பிரதமர் கேட்டுக் கொண்டார். முஸ்லிம் லீக் ஊடாகவும், அரசியல் பணிகள் ஊடாகவும் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சேவை செய்யும் வாய்ப்பைத் தருவதும், சமூக அந்தஸ்தை சுதேச மக்களிடம் பெற்றுத் தருவதுமான அமைச்சரவைப் பதவியைத் துறப்பது என்பது மனவருத்தத்தைத் தருவதாக இருந்த போதும், நாட்டின் நலனுக்காகத் தூதுவராக நாட்டுக்கு வெளியே செல்லுங்கள் என்று கேட்கப்பட்டதால் பிரதமரின் வேண்டுகோளுக்கு அவர் செவிசாய்த்தார்.

இலங்கையின் அயல்நாடான இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் நல்லுறவைப் பேண வேண்டிய நிர்ப்பந்த நிலை இலங்கைக்குண்டு. இந்துக்களின் விருப்பத்துக்கு மாறாக கடுமையான போராட்டத்தின் மூலம் முஸ்லிம் நாடாக பாகிஸ்தானை இந்திய உப கண்டத்தில் இருந்து பிரித்தெடுத்திருந்தனர். அதனால் இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புறவுடன் இருக்கவில்லை. இரு நாடுகளுக்கும் இடையில் காஷ்மீரை மையமாக வைத்து ஆயுதப் போராட்டமும் ஆரம்பித்திருந்தது. இதனால் இவ்விரு நாடுகளில் ஒன்றுடனேனும். பகைத்துக் கொள்ளாது கருமாற்றக் கூடிய ஆற்றல் உடையவர்களை அவ்விரு நாடுகளுக்கும் தூதுவராக அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு பிரதமர் உள்ளாகி இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகையதோர் ஆற்றல் டி.பி. ஜாயாவிடம் இருப்பதைக் கண்டதால் தான் பிரதமர் அவரைத் தெரிவு செய்தார். டி.பி. ஜாயா அவர்களுக்கு பாகிஸ்தானுடனும் அதன் தலைவர்களுடனும் நீண்ட நெருக்கமான உறவு இருந்தது. பாகிஸ்தானின் உருவாக்கத்துக்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கினார். பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட பின்பும் காயிதே அ.்.ஸம் முகம்மதலி ஜின்னாவுடனும், மற்றைய அரசியற் பிரமுகர்களுடனும் நெருக்கமான தொடர்பை வைத்திருந்தார். முகம்மதலி ஜின்னாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக 13.9.1948 ஆம் திகதி இலங்கையில் துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது. டீ.பி ஜாயாவின் வழிகாட்டலில் முஸ்லிம் லீக் இலங்கை வானொலியில் ஜின்னா பற்றி முழு நாள் நிகழ்ச்சியை நடத்தியது. ஏற்கனவே கராச்சியில் நடைபெற்ற உலக முஸ்லிம் மகாநாட்டிலும் அவர் கலந்துகொண்டிருந்தார். அல்லாமா இக்பாலின் சிந்தனைகளை இலங்கையில் அறிமுகப் படுத்துவதன் மூலம் இலங்கை முஸ்லிம்களுக்கும் பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கும் இடையே ஒரு கலாசாரப் பாலத்தை உருவாக்கவும் முயற்சித்துக் கொண்டிருந்தார். அவரது இத்தகு முயற்சிகளின் காரணமாக பாகிஸ்தான் மக்களின் அன்புக்குப் பாத்திரமானவராகவும் இருந்தார். மேற்குறித்த காரணிகளே பாகிஸ்தான் தூதுவராக அவர் நியமனம் செய்யப்படக் காரணமாக இருந்திருக்க முடியும். பாகிஸ்தானின் தூதுவராக 1950 இல் நியமிக்கப்பட்ட ஜாயா அவர்களுக்கு, இலவசக்கல்வியின் தந்தை என்றழைக்கப்படுகின்ற கலாநிதி C.W.W. கன்னங்கராவின் தலைமையில் இன, மத, கட்சி பேதமின்றி கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் இக்கூட்டத்தில் ஒன்று திரண்டிருந்தனர்.

பாகிஸ்தானில் 1950 - 1957 வரை தூதுவராக அவர் கடமையாற்றினார். பாகிஸ்தானில் அரசியல்வாதிகளுடன் மட்டுமன்றி அறிஞர் குழாத்தினர், மாணவர்கள், உழைப்பாளிகள் என்று பல தரத்தவர்களுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தார். இதனால் பாகிஸ்தான் மக்கள் அவரை தம்மவர்களுள் ஒருவராக உணர்ந்தனர்.

1951 டிஸம்பரில் பஞ்சாப் பல்கலைக்கழகம் தனது பட்டமளிப்பு விழாவின் போது அவருக்கு கலாநிதிப்பட்டம் அளித்து கௌரவித்தது. பட்டமளிப்பு விழாவின் போது அவர் பல்கலைக்கழகமும் தேசமும் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் உரையாற்றினார். பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே நெருக்கமான உறவைக் கட்டி எழுப்பக் கடுமையாக உழைத்தார்.

தனது கலைமாணிப் பரீட்சைக்கு வரலாற்றை ஒரு பாடமாகக் கற்றிருந்த டி.பி. ஜாயா, முஸ்லிம் நாடுகளின் வீழ்ச்சி பற்றியும், அதனால் இஸ்லாமிய சமூகம் எதிர்கொண்ட சவால்களைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். இஸ்லாமிய சமூகம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் பாகிஸ்தானுக்குக் குரல் கொடுத்த போது, இஸ்லாமிய சிந்தனை ஆதிக்கம் செலுத்தும் ஒரு நாட்டைக் காண விளைந்தே டி.பி. ஜாயாவும் அதற்காக இலங்கையில் சாத்வீகப் போராட்டத்தை மேற்கொண்டார். இஸ்லாமியக் கொள்கைக் கோட்பாடு, நடைமுறை என்பவற்றை அமுல் நடாத்தி, இஸ்லாமிய சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு பரீட்சாத்தக் கூடமாக அவர் பாகிஸ்தானைக் கருதினார். சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் ஒரு நாட்டில் இருந்து சென்று முஸ்லிம்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட பாகிஸ்தானில் வாழ்வதனால் இஸ்லாமிய அறிஞருடன் கலந்துரையாடவும் இஸ்லாமியச் சூழல் தரும் ஆன்மிக இன்பத்தை அனுபவிக்கவும் அவர் நாடியிருந்தார். பாகிஸ்தானில் அவர் கழித்த காலப்பகுதி மகிழ்ச்சியான ஒரு காலப்பகுதியாகவே இருந்தது.

ஆயினும் தாய்நாட்டின் மீது அவர் கொண்டிருந்த பற்றும் உறவும் சேவைக்கால முடிவுடன் தாய் நாட்டுக்குத் திரும்பிவர வேண்டும் என்ற ஆவலை அவரில் மேலோங்கச் செய்தன. பாகிஸ்தான் அரசு ஜாயாவை தொடர்ந்து அங்கு நிறுத்திக் கொள்ளவே விரும்பியதால், பாகிஸ்தானின் பிரசா உரிமையைக் கொடுக்கவும் முன்வந்தது. இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை கராச்சிக்கு சென்ற போது ஜாயாவின் சேவைக்காலத்தை நீடிக்குமாறு கேட்டு ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தனர். ஜாயா விரும்பும் காலம் வரை நீங்கள் அவரை வைத்துக் கொள்ளலாம் என்று பிரதமர் பதிலளித்தமை சுட்டிக்காட்டத்தக்கது. இலங்கையின் தூதுவராக ஜாயா கடமையாற்றிய போது, பாகிஸ்தான் அரசினதும் மக்களதும் அன்பைக் கவர்ந்திருந்தார் என்பதை இது உணர்த்துகிறது.

1950 களில் இலங்கையில் அரிசிக்கும், மாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்ட போது பாகிஸ்தானின் மேலதிகமான விளைச்சல் சந்தையில் ஏற்கனவே விற்கப்பட்டு முடிந்திருந்த நிலையிலும் இலங்கைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுத்தானியங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொடுத்தார். அப்போதைய நிதியமைச்சராக கடமையாற்றிய சேர் ஒலிவர் குணதிலக இவ்வர்த்தகத்தின் மூலம் இலங்கை சேமித்த பணம் பாகிஸ்தானில் இலங்கைத் தூதுவராலயத்தைப் பத்து வருடங்களுக்கு நடத்தப் போதுமானது என்று குறிப்பிட்டு ஜாயாவைப் பாராட்டினார்.

## மக்காவில் இலங்கை இல்லம்

பாகிஸ்தானில் தூதுவராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது சவூதி அரசின் நல்லெண்ணத்தை வென்றிருந்தார். அக்காலப்பகுதியில் இலங்கையில் இருந்து ஹஜ்ஜுக்கு செல்வோருக்காக நிலையானதொரு தங்குமிட வசதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அப்பணியைத் தொடர்வதற்காக 1960 மே மாதத்தில் முதலியார் சின்ன லெப்பை, புரக்டர் மரிக்கார், A.I. ஹமீத் என்பவர்களை உள்ளடக்கிய தூதுக்குழுவுடன் டி.பி. ஜாயா அவர்களும் மக்கா சென்றார்கள். நபிகளார் (ஸல்) அவர்களின் ரவ்ழா சரீபைத் தரிசிப்பதற்காக இத்தூதுக் குழு 1960 மே 24 ஆம் திகதி மதீனாவைச் சென்றடைந்தது. டி.பி. ஜாயா மறுதினம் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். மருத்துவம் செய்யப்பட்ட போதும் நோய் கடுமையானதால் 27 ஆம் திகதி மதீனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சவூதி மன்னர் இப்னு சுஊத் பிரசித்திபெற்ற வைத்திய நிபுணர் இருவரின் சேவையைப் பெற்றுக் கொடுத்த போதும் 30 மே 1960 இல் இறையடி எய்தி மறுதினம் வியாழக்கிழமை ஜன்னதுல் பகியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். மதீனாவின் கவர்னர் உட்பட பல நாடுகளிலும் இருந்து வந்திருந்த இலட்சக்கானோர் அவரது ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டார்கள்.

இலங்கையில் வெளிவந்த சகல பத்திரிகைகளும் அவரது மரணச் செய்தியை வெளியிட்டு, அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய சில குறிப்புக்களை வெளியிட்டிருந்தன. ஸாஹிராக் கல்லூரி இரு தினங்கள் மூடப்பட்டன. அதன் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்டனர். மாணவர்களும் ஆசிரியர்களும் மருதானை ஜும்ஆ மஸ்ஜிதில் ஜனாஸாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகைகளை நிறைவேற்றினர் ஸாஹிராவில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் A.M.A. அஸீஸ் அவர்கள் அருமையானதொரு இரங்கள் உரையை நிகழ்த்தினார் நாட்டின் பல பகுதிகளிலும் இரங்கற் கூட்டங்கள் நடை பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

ஆங்கில மொழி

1. Abdul Azeez I.L.M.A
Criticism Of Mr. Ramanathan's
ETHONOLOGY Of the Moors Of ceylon
Colombo

2. Ahlip. Ener. C
A Life Serene
(A Life Sketch of Al Haj .Dr. T.B. Jaya)
ISBN. 955-597-180-3

3. Azwar A.H.M.
"Freedom Fighter and National Hero"
Artical /Sunday Obsover 2009-5-31
Colombo

4. Jalaldeen M.S.
T.B. Jaya
A. National Hero of Sri Lanka
Law Publishers Association - 1996
ISBN. 955-92-10-7

5. Kamaldeen S.M.
Dr. Tuwan Burhanudin Jaya (Tamil)
Tamil Translater Jameel S.H.M.
National Educational Institute
Maharagama. 1990

6. Mahroof M.M.M.
Dr. T.B. Jaya
Bureau of Publication
Colombo 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. Sameen. M
A Short Sketch of The Lite of
I.L.M.A Azeez
Colombo 1915

8. Dr.Tayka ShuaybAlim
ArabiArwi an Persian in
Sarandib and Tamil Nadu
ImamulArus Trust
Madras 1993

**தமிழ் மொழி**

1. அப்துல் அஸிஸ் ஐ.எல்.எம்
சத்தின் ஞானார்த்தம்
கொழும்பு. 1898

2. அமீன் எம்.ஐ.எம்
இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர்
சித்தி லெப்பை - அல் ஹஸனாத் திப்பகத்தார்
ஹெம்மாதகம 1997

3. காதிறு பாச்சா
தத்துவப் பர கண்டனம் திக்காரத் தண்டனம்
யாழ்ப்பாணம் 1898

4. ஸாஹிர் எம்.சி.எம்
நம் முன்னோர்
சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்
கொழும்பு 1979

05. ராசிக் அ. லெ. மு
இதயத்தில் வாழ்வோர் பாகம் 2
ரிஸான் பிரசுரம் பொல்கஹவெல 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சம்சுத்தீன் அ.த
ஸ்ரீமத். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சாய்பு
அவர்களின் சீவிய சரித்திரம்.
கொழும்பு 1888.

07 சாமி அ. மா.
தமிழில் இஸ்லாமிய இதழ்கள்
நவமணிப் பதிப்பகம் சென்னை
1994

08. ஸகிய்யா சித்திக்
ஸஹிராவை உருவாக்கிய உத்தமர்கள்
தமிழ் விழா ஏற்பாட்டுக் அமைப்பு
ஸாஹிராக் கல்லூரி
கொழும்பு 2004

தமிழ் சஞ்சிகைகள்

முஸ்லிம் நேசன்
ஞானதிபம்
முஸ்லிம் பாதுகாவலன்
முஸ்லிம்
இஸ்லாம் மித்திரன்
சர்வஜன நேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்...

| | |
|---|---|
| இஸ்லாமிய சட்டக்கலை<br>ஒரு வரலாற்று நோக்கு | 1996 |
| இஸ்லாமிய நாகரீகம் (தொகுதி 1) | 1996 |
| இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில்<br>அறிஞர் சித்திலெவ்வை | 1997 |
| அறேபியர் வாழ்வியல் | 1999 |
| இலங்கை முஸ்லிம்களின் வரலாறும்<br>கலாசாரமும் 1870-1915 | 2000 |
| முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் | 2002 |
| அபூபக்ர் ஸித்தீக் (றழி) | 2004 |
| இஸ்லாமிய சட்டக்கலை மூலாதாரங்கள் | 2006 |
| முஸ்லிம்கள் வளர்த்த<br>அறிவியல் அழகியற் கலைகள் | 2008 |
| இஸ்லாமிய குடும்ப வாழ்வு | 2008 |

ISBN : 978 - 955 - 99588 - 3 -3

Price : **200/=**

ஏக விநியோகஸ்தர்கள்...

**இஸ்லாமிக் புக் ஹவுஸ்**

இல. 77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு 09

MJM - Mawanella 035 5678454

ISLAMIC BOOK HOUSE
00017219-1
RS 200.00
Ilangai Muslimhalin/MV/M-M.I.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org